199

POLICE PRIMER

TAMIL

PARTS I & II

WITH APPENDICES

MADRAS POLICE

T. V. SRINIVASA RAGHAVACHARI, B.A.

MADRAS
BY THOMPSON & CO.
1931

Z211,193.
N31
123914

போலீஸ் பிரதம போதினி

டி. வி. ஸ்ரீநிவாஸ ராகவாசாரி, B. A.,
(Principal, Central Recruits' School, Coimbatore.)
எழுதியது

[Rights Reserved]

1931.

OPINIONS.

(These opinions refer to the English version of this book).

1. **F. A. Hamilton, Esq., C.I.E.,** *Inspector General of Police, Madras.*

"The lectures may be useful for Central Recruits' School". Dated 25—10—1929.

2. **James E. Reid, Esq.,** *Personal Assistant to the Inspector General of Police, Assam.*

"I am directed by the Inspector General of Police to acknowledge with many thanks the receipt of the manuscript copy of your book—"How to make the Police Popular", or "Police Primer"—forwarded with your letter dated the 13th January 1930 and to inform you that in his opinion the lectures therein will be useful for Training Schools.

If the book is printed in English the Inspector General would purchase about two hundred copies". Dated 31—3—1930.

3. **M.R.Ry. Rao Bahadur A. V. Govinda Menon Avl.,** *Sessions Judge, Coimbatore.*

"I find the Police Primer both interesting and instructive. It supplies a long felt want and justly deserves to be popular as 'Vade mecum' to new recruits (not necessarily of the lowest rank) into a

Service which unfortunately has ever been only too unpopular in this country. Your long experience in the department must necessarily enhance its value as a practical guide. As Carlyle has said, one grand business is not to see what lies dimly at a distance but to do what lies clearly at hand. Therefore the compilation of this book at this time is specially praiseworthy; and I heartily congratulate you on your laudable effort. If it be permissible to point to particular passages in a work which is good all round, I would invite special attention to the Chapters (7 & 14) dealing with detection and general behaviour". Dated 17--10--1930.

4. **M.R.Ry. C. V. Venkataramana Aiyangar Avl., B.A., B.L.,** (*Ex-M.L.A.*), *Coimbatore.*

"It is no exaggeration to say that the book is very interesting and instructive from the beginning to the end and that though it is intended for Police Constables, its study will be very useful for all Police Officers and even for outsiders. The illustrative cases given in Part II are really very useful for even legal practitioners and when I read through them, I was reminded of several cases dealt with by me in my long experience as a criminal lawyer some years ago. As the Secretary of the local Discharged Prisoners' Aid Society, as a non-official visitor of the local jail and the non-official member of the Board which recommends conditional release for long term prisoners in the local jail, I found the book to have a special attraction to me—especially Chapter XII of the First Part dealing

with the treatment of ex-convicts. I consider that the chief characterestic advice to all police men that runs through the whole book namely that they should keep their ears, their eyes, and their minds always open, but that their mouths should be always closed, is worthy of being followed by many of us in our every day life. I may summarise finally that the book is one of the best I have seen, as it is written in a very good style and the method of treatment is excellent: and I fervently hope that it will get the great encouragement it richly deserves at the hands of the Government and the general public. Dated 20—10—1930.

5. **S. H. Slater, Esq., C.M.G., C.I.E., I.C.S.,** *District Magistrate, Coimbatore.*

"I can very confidently say that every chapter bears the stamp of practical wisdom and a sympathetic insight into the human aspect of police work. For an example of the latter trait, I would specially mention Chapter XII—"Treatment of ex-convicts". But it is Chapters XIII & XIV which to my mind constitute the principal value of the brochure, by virtue of the emphasis which they lay on the fact that the police are the servants, and not the masters of the public. In inculcating this ideal of service, the writer has not omitted to point out with a wealth of simple but vivid illustrations how such an attitude tends to enhance the prestige and power of the police". Dated 8—11—1930.

6. C. B. Cunningham, Esq., C.S.I., *Inspector General of Police, Madras.*

"I have read through the book carefully. The advice and instruction that it contains are thoroughly good and practical, well conceived, well arranged, and expressed in simple language such as must be intelligible to any police recruit. You illustrate your points with homely parallels which make them readily understandable by all. There can be no doubt I think that the book will fill a felt want and its circulation among police recruits and subordinate police officers may be productive of good. I should be glad to recommend the book to all officers in this Province". Dated 22—11—1930.

7. J. Elliot, Esq., *Dt. Superintendent of Police, Malabar.*

"I congratulate you on the compilation of a manual which I am sure, whether assimilated in the form of lectures or read as a book, will be of considerable use in inculcating a proper sense of a police officer's duties". Dated 15—12—1930.

8. T. W. Blackstone, Esq., *Dy. Inspector General of Police, Western Range, Coimbatore.*

"I have read your Primer with much interest. I think it should serve a very useful purpose—not only for instructing recruits but Policemen of all ranks—I congratulate you on its production". Dated 13--1--31.

முதல் பாகம்

முகவுரை

போலீஸ் உத்தியோகத்திலமர்ந்து, போலீஸ் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்களுக்கு பிரதம நூலாக போலீஸ் கைட் (Guide) என்னும் புஸ்தகம் கெவர்ண்மெண்டாரால் அச்சிடப்பட்டு, ஒவ்வொரு கான்ஸ்டேபிளுக்கும், அவர் சொந்த பாஷையில் மொழி பெயர்க்கப்பட்ட ஒரு பிரதி இனமாகக் கொடுக்கப்படுகிறது. அதில், இந்த இலாகா கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அவசியம் தெரிய வேண்டிய டிபார்ட்டுமெண்டு விதிகளும், சட்டத்தின் நிபந்தனைகளும் அடங்கியிருக்கின்றன. அதிலுள்ள விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல், ஒருவன் போலீஸ் அலுவலைப் பிழையறச் செய்ய முடியாது.

ஆயினும் போலீஸ் சிப்பந்திகளுக்குத் தெரியவேண்டிய சில விஷயங்கள் அந்தப் புஸ்தகத்திலில்லை. கைடில் அடங்கிய சட்ட திட்டங்களுடன், சில பொது விஷயங்களும் தெரிந்திருந்தால்தான், ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் பொதுஜன மதிப்பைப் பெறும்படித் தன் வேலையைச் செய்ய முடியும்.

போலீஸ் பள்ளிக்கூடத்தில் போதிக்கும் உபாத்தியாயராக நியமிக்கப்பட்ட அதிகாரிகளே, இந்த பொது விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கலாமே என்று சொல்லலாம் ஆனால், அதற்காக ஒரு புஸ்தகமில்லாவிட்டால், உபாத்தியாயர்கள் அவரவர்கள் மனப்போக்கின்படி, பலவிஷயங்களைச்

சொல்லிக்கொடுக்கக் கூடும். ஒருவர் சொன்ன பிரகாரம் மற்றொருவர் சொல்ல இடம் தராது.

ஆகையால் போலீஸ் வேலையில் பழகுகிறவர்கள், அவர்களுக்குப் போதிக்கும் உபாத்தியாயர்கள், ஏற்கனவே தேர்ச்சி யடைந்து இப்போது போலீஸ் ஸ்டேஷன்களில் வேலை பார்த்து வருகிறவர்கள், ஆகிய இந்த மூன்றினத்தினர்களுக்கும் உதவும்படியாக, இப்புத்தகம் இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. தமிழை சுயபாஷையாகவுடைய கான்ஸ்டேபிள்களுக்கும், எட்கான்ஸ்டேபிள்களுக்கும் பயன்படுமாறு, இப்புத்தகம் தமிழிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இந்தப் புத்தகம் போலீஸ் சிப்பந்திகளுக்கு வெகு உபயோகமானதென்று, நமது இன்ஸ்பெக்டர் ஜெனரல் துரையவர்களும் (C. B. Cunningham, Esq. C. S. I.,) இன்னும் அநேக உயர்தர உத்தியோகஸ்தர்களும், ஜட்ஜுகளும், மாஜிஸ்ட்ரேட்களும், படித்தவர்களும் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்தப் புத்தகத்தின் இங்கிலீஷ் காபிக்கு, பென்ஷன் போலீஸ் டிப்டி கம்மிஷனர் திவான் பகதூர் S. பவானந்தம் பிள்ளை அவர்கள், I. S. O., O. B. E., ஓர் முன்னுரை எழுதியுள்ளார்.

Central Recruits' School
Coimbatore, 21-12-30

T. V. Srinivasa Raghavachari,
Principal.

முதல் பாகத்தின் பொருளடக்கம்

Contents of Part I.

அதிகாரம்.	விஷயம்.	பக்கம்
I	ஒழுக்கம் ... ... Discipline	11
II	சுத்தமும் நடையும் ... ... Cleanliness and conduct	13
III	மாற்றிப்போன புது இடத்தில் தெரிந்து கொள்ள வேண்டியவை ... Knowledge of a new place	16
IV	கிராம பீட் ... ... Village beat	17
V	கிராம பீட் (தொடர்ச்சி) ... ... Village beat (continued)	20
VI	கிராம பீட் (தொடர்ச்சி) ... ... Village beat (continued)	26
VII	கேஸுகளைக் கண்டு பிடித்தல் ... Detection	29
VIII	கேஸுகளைக் கண்டு பிடித்தல் (தொடர்ச்சி) ... Detection (continued)	33
IX	கேஸுகளைக் கண்டு பிடித்தல் (தொடர்ச்சி) ... Detection (continued)	36
X	துப்பறிவிப்பவர்கள் ... ... Informers	39

அதிகாரம்	விஷயம்.	பக்கம்.
XI	கலக கேஸுகள் ... ... Riots	44
XII	தண்டனை அடைந்தவர்களை நடத்தும் விதம் ... Treatment of Ex-convicts	47
XIII	போலீஸ் இலாகாவின் பொது ஜன மதிப்பு ... Popularity of the police force	52
XIV	பொது ஜன மதிப்பை சம்பாதிக்கும் வழி ... How to earn popularity	57
XV	தேசத்திற்கு போலீஸ்படையின் உபயோகம்... The usefulness of the police force to the [country.	60

அதிகாரம் I

ஒழுக்கம்

பேர்லீஸ் இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு ஒழுக்கம் என்பது வெகு முக்கியமானது. சாதாரணமாய் நல்ல நடத்தையாய் இருந்தால்மட்டும் போதாது. ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தனும் டிபார்ட்மெண்டு சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதுடன், மேலதிகாரிகளின் (சட்ட விரோத மில்லாத) உத்தரவுகளுக்கும் கீழ்ப்படிந்தும் நடப்பதுதான், இந்த இலாகா ஒழுக்கமெனப்படும். மற்ற டிபார்ட்மெண்டுகளில், ஒழுக்கம் தவறி நடப்பவர்களுக்குப் பொதுவாய் மேலதிகாரிகளே தண்டனை விதிக்கிறார்கள். இந்த இலாகாவிலும் அவ்விதம் தவறி நடப்பவர்களுக்கு, டிபார்ட்மெண்ட் தண்டனை விதித்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் போலீஸ் ஆக்டின்படி கோர்ட் மூலமாயும் தண்டனைகள் விதிக்கப்படும். அதினாலேயே, இந்த இலாகாவில் ஒழுக்கம் என்பதை வெகு கண்டிப்பாய் கவனிக்கிறார்கள் என்று நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

ஒழுக்கம் என்பதை இந்த இலாகாவில் அவ்வளவு முக்கியமாய் கவனிப்பதற்கு பல காரணங்கள் உண்டு. முதலாவது ஜனங்கள் தங்களுடைய வேலைகளை தடையில்லாமல் செய்வதற்கும், இதர டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் அவரவர்களுக்கு ஏற்பட்ட வேலைகளை சரிவர நடத்தி வருவதற்கும், பொது ஜன அமரிக்கை அவசியமானது. அவ்விதம் அமரிக்கையை நிலை நிறுத்தி பாதுகாப்பதற்கா

கவே இந்த டிபார்ட்மெண்டு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த இலாகாவிலுள்ளவர்களுடைய அமரிக்கையும் கீழ்படிவுமுள்ள நடத்தையே, மற்றவர்கள் பார்த்துப் பழகவும் வியக்கவும் தகுந்த திறமுள்ளதாயிருக்கவேண்டும்.

மேலும் "ஊரும்போது துடைத்தல் வேண்டும்" என்ற பழமொழி கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? அவ்வாறு பொது ஜன அமரிக்கைக்குப் பங்கம் வராமல் காக்கவேணுமென்றால், ஏதாவது ஒரு சச்சரவு கலகம் நேருமென்று அனுமானமுண்டானவுடனே, ஓர் தகுந்த அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர் சடுதியில் போய், அது நேராமலிருக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அதற்கு, உத்திரவுக்கு சுருசுருப்பாய் கீழ்ப்படியும் பயிர்ச்சியுள்ள ஒரு படை வேண்டுவது அவசியம். அப்படிப்பட்ட படையில்லாமல் கலகம் முதலிய சச்சரவுகளை அடக்கும் அதிகாரிகள், தங்கள் அலுவல்களை நிறைவேற்ற முடியாது. தாம் படித்த சட்டங்கள் விதிகள் இவைகளின் முறைப்படி கீழ்படிந்து நடக்கும் சிப்பந்திகளே, கலகத்தை அடக்கி பொதுஜன அமரிக்கையைப் பாதுகாக்க உபயோகப்படுவார்கள். ஆகையால் இந்த இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு ஒழுக்கம் இன்றியமையாதது என்று நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

சில சமயங்களில், கவர்னர் முதலிய உயர்தர உத்தியோகஸ்தர்கள் விஜயம் செய்யும்போதும், பெரிய உற்சவங்கள் நடக்கும்போதும், ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஒரே யிடத்தில் கூடுகிறார்கள். அப்படி கூடியிருக்கும் ஜனங்களின் நடுவே பாதை விலக்கவும், அந்தக் கூட்டத்தார் அமரிக்கையாய் நடந்து கொள்ளும்படி செய்யவும், அநேக போலீஸ் சிப்பந்திகள் நியமிக்கப்படுகிறார்கள். தகுந்த தேர்ச்சியும் ஒழுக்கமுமுள்ள படையாயிருந்தாலொழிய, அப்படிப்பட்ட

வேலை சுலபமாயும் குழப்பமில்லாமலும் நடைபெறும். இம்மாதிரி வெகு ஜனக்கூட்டங்களை அடக்கி, அவைகளை ஒழுங்காய் நடத்தும் வேலை, அடிக்கடி போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு நேரிடுவதனாலும், அவர்களுக்குப் பயிர்ச்சி முதிர்ந்த ஒழுக்கம் வெகு முக்கியமென்பது நன்கு விளங்கும்.

இந்த போலீஸ் இலாகா உத்தியோகத்திற்குப் பழகும் நீங்கள், மேலே சொல்லிய விஷயங்களை நன்றாய் அறிந்து கொண்டு, எப்போதும் அதிகாரிகளின் உத்திரவிற்கு முழு மனதுடனும், சுருசுருப்பாயும், கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். மேலும், இந்த இலாகாவின் பொது ஜன சௌகரியமான அலுவல்களுக்கு நாமும் உதவ நேர்ந்ததே என்று திருப்தியடைந்து, உங்கள் கடமையை நன்கு செலுத்துவதால், எந்நாளும் இந்த இலாகாவுக்கு மேலும் மேலும் புகழ் பெருகும்படி செய்யவேண்டும்.

அதிகாரம் II

நடையும் உடையும்

ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் எப்போதும் சுத்தமான உடை உடுத்தவேண்டும். இந்த விதி உடுப்பில்லாமல் "மப்டி" (mufti) யில் இருக்கும்போதும் அனுசரிக்க வேண்டியது. உடுப்புப் போட்டிருக்கும்போது தலைப்பா, கோட்டு, கால்சட்டை, பட்டி முதலிய உடைகளைப்பற்றி அப்போதைக்கப்போது டிபார்ட்மெண்டில் ஏற்படுத்தப்படும்

விதிகளை கொஞ்சமும் தவராது அனுசரிக்கவேண்டும். அந்த விதிகள் அநுபந்தம் A-யில் சொல்லப்பட்டிருக்கின்றன. பல போலீஸ் ஜவான்கள் கூடியிருந்தபோதிலும் ஒரே மாதிரியாய் வித்தியாசமில்லாமல் உடுப்பை தரித்திருக்க வேண்டும். பெல்டு, பொத்தான், முதலிய சாமான்களை அப்போதைக்கப்போது தேய்த்து சுத்திசெய்து பளபளப்பாய் வைத்திருக்கவேண்டும். மேலதிகாரிகள் யாரும் பார்த்து, உடுப்பு சுத்தமாயில்லை என்ருவது, நன்ருய் தரித்திருக்கவில்லை என்ருவது, சொல்லுவதற் கிடமில்லாமல் கவனிக்கவேண்டியது. அப்படி அதிகாரிகள் குறைகூற நேர்ந்தால், தனக்கு அது ஒரு அவமானமான காரியமென்று எண்ணவேண்டும்.

சர்க்கார் உடுப்பைப் போட்டுக்கொண்டிராத காலத்திலும், (அதாவது "மப்டி" யில் இருக்கும்போதும்) சுத்தமான உடை தரித்திருக்க வேண்டும். கூடுமானுல் ஒவ்வொரு ஸ்டேஷனிலிருக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ஒரே மாதிரியான "மப்டி" உடுப்பை உடுத்துவது நலம். எந்தக் காலத்திலும் சர்க்கார் உடுப்பில் ஒரு பாகத்தை மாத்திரம் போட்டுக்கொண்டு வெளியில் போகக்கூடாது. கிராம பீட்டு பெட்ரோல் போகும் ஜவான்கள், தலைப்பாவும் கோட்டும் மட்டும் போட்டுக்கொண்டு போகும் கெட்ட வழக்கமுண்டு. இப்படி ஒருநாளும் செய்யக்கூடாது.

கெவர்ண்மெண்டில் கொடுத்திருக்கும் உடுப்பை சரியாய் போட்டுக்கொண்டிருக்கும் போலீஸ் உத்தியோகஸ்தனை ஜனங்கள் மதித்து, அவன் தன் அலுவலை நடத்தும்போது, அவன் கட்டளைக்கு உள்பட்டு நடப்பார்கள். அப்படிச் செய்யாமல், அவனுக்கு எவ்விதத் தீங்கு விளைத்தாலும்

அவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். ஏனெனில் தாங்கள் யாரை எதிர்க்கிறார்களோ அவன் உடுப்புப் போட்டிருக்கும்போது, போலீஸ் உத்தியோகஸ்தன் என்று தங்களுக்குத் தெரியாது என்று சொல்ல இடமில்லை.

மேலும் உடை தரித்துக்கொண்டிருக்கும், போலீஸ் உத்தியோகஸ்தனிடம் பொதுவாய் ஜனங்கள் நெருங்கி புழங்காமல் மரியாதையுடன் சற்று விலகியே யிருப்பார்கள். அப்படியிருக்கச் செய்தால்தான் போலீஸ் உத்தியோகஸ்தன் ஜனங்களுக்கு தன்னிடம் மதிப்புண்டாகும்படி செய்யலாம்.

உடுப்பில்லாத காலத்தில்கூட தன்னுடைய உடையின் சுத்தத்தாலும், நடையின் சுருசுருப்பு மரியாதை முதலியவைகளாலும், ஜனங்களிலிருந்துவிலகி அனுவசியமாய் பேசாமலிருப்பதாலும், தான் போலீஸ் உத்தியோகஸ்தன் என்று ஜனங்கள் அறியுமாறு நடந்து கொள்ளவேண்டும். பொதுவாய் நல்ல உடுப்புப் போட்டுக்கொண்டிருப்பவர்களிடம் ஜனங்கள் மரியாதைவைப்பது வழக்கம்.

மேலும் போலீஸ் உத்தியோகஸ்தன் தன் திரேகமும் பார்ப்புவர்களுக்கு சுத்தமாயிருக்கும்படி கூடுமானவரையில் பிரதிதினம் க்ஷவரம் செய்துகொள்ளவேண்டியது. அப்படிச் செய்து கொள்ளாமல் எவ்வளவு நன்றாய் உடுப்பு போட்டுக்கொண்டாலும், பார்வைக்கு சுத்தமாய் காணப்படாது.

இதல்லாமல் தான் வசிக்கும் சர்க்கார் கட்டடமாகிய லயன் வீடுகள், அதை சுற்றிய காலி இடங்கள், தான் இருக்கும் போலீஸ் ஸ்டேஷன் கட்டடங்கள், இவைகளை வெகு சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

இம்மாதிரி எல்லா விஷயத்திலும் வெகு சுத்தமா யிருப்பதாலும், விதிகளைத் தவருமல் அனுசரிப்பதாலும், போலீஸ் உத்தியோகஸ்தர்களை ஜனங்கள் பாராட்டுவார்கள்.

அதிகாரம் III

மாற்றிப்போன புது இடத்தில் தெரிந்து கொள்ள வேண்டியவை.

போலீஸ் உத்தியோகஸ்தனை, ஒரு ஸ்டேஷனிலிருந்து மற்ருெரு ஊருக்கு அவசிய மிருக்கும்போது மாற்றுவார்கள். அப்படி மாற்றப்பட்டவன் பொது ஜன ஒத்தாசைக் காகவும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகவும், அடியிற் கண்ட விஷயங்களை, தான் புது ஊருக்குப் போய்ச் சேர்ந்த சொற்பகாலத்துக்குள் நன்ருய்த் தெரிந்து கொள்ள வேண்டும்.

1. அந்த புது ஊர் ரயில்வே ஸ்டேஷனுயிருந்தால், அதின் வழியாய் எந்தெந்த திக்கில், எந்தெந்த ஊருக்கு எத்தனை எத்தனை மணிக்கு ரயில்கள் ஓடுகின்றன. முக்கிய மாய் ராத்திரி ஓடும் வண்டிகளை நன்ருய்த் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. அந்த ஊரிலிருந்து மோட்டார் வண்டிகளாவது, வேறே அஞ்சல் வண்டிகளாவது, வேறு ஊருக்குப் போனல் அவைகள் புறப்படுமிடம், போகும் இடங்களும் நேரங்களும்.

3. அந்த ஊரிலிருந்து எந்தெந்த ஊருக்கு ரஸ்தாக்

களும் பாதைகளும் போகின்றன வென்றும், அவைகளின் தூரமும்.

4. அந்த ஊரிலுள்ள உயர்தர உத்தியோகஸ்தர்கள், மேட்டுக் குடிகள், மற்றுமுள்ள முக்கியஸ்தர்கள், யார் யாரென்றும், அவர்கள் வசிக்கும் இடங்களும்.

5. அந்த ஊரிலுள்ள தொழிற்சாலைகள், வர்த்தக ஸ்தலங்கள், கள்ளு சாராயம் முதலிய விற்கும் கடைகள், மற்ற விசேஷமான இடங்கள், அவைகளில் எப்படி வேலை நடைபெறுவதென்பதையும் தெரிந்துகொள்ளல்.

மேற்கூறியவைகளை தெரிந்திருந்தால் குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கு வெகு உதவியாயிருக்கும். மேலும் மேற்கூறியவைகளைப்பற்றி, யாராவது ஒருவர் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனைக் கேட்கும்பட்சத்தில், அப்படிக் கேட்பவர்கள் யாராயிருந்தாலும் தவக்கமில்லாமல் வணக்கத்துடன் தப்பிதமில்லாத பதிலை சொல்லும் பட்சத்தில், அவர்கள் திருப்தியடைவதுடன் இந்த இலாகாவுக்கு நல்ல கௌரவம் ஏற்படும். இது பொதுஜன நன்மைக்கு முக்கியமான விஷயம்.

அதிகாரம் IV

கிராம பீட்டு

ஒரு போலீஸ் ஸ்டேஷனில் உங்களுக்கு விதிக்கக் கூடிய அலுவல்களுக்குள் முக்கியமானது கிராம பீட்டு என்னும் வேலை. உங்களுக்கு மேல்பட்ட அதிகாரிகளைக் காட்டிலும்,

நீங்களே இந்த வேலையை திறமையாய்ச் செய்யக்கூடும். உயர்தர உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும், இந்த அலுவலை செய்ய உங்களுக்கு அதிக சாவகாசம் உண்டு. மேலும் சாமான்னிய ஜனங்களுடன் நீங்கள்தான் தாராளமாய் பழகக்கூடும். (1) உங்களுக்கு ஏற்பட்ட அலுவல்களுள் முக்கியமாகிய இந்த கிராம பீட்டு வேலையில், உங்களுக்கு கிடைக்கக் கூடிய சாவகாசத்தின் பெரும்பாகத்தை செலவழிக்கக்கூடும். மேல் அந்தஸ்து உத்தியோகஸ்தர்களுக்கு இன்னும் பலவித முக்கியமான அலுவல்களை கவனிக்க வேண்டி யிருப்பதால், இந்த கிராமங்களில் செய்யக்கூடிய வேலைக்கு போதுமான சாவகாசம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு எப்போதாவது ஒழிவு ஏற்பட்டு கிராமங்களுக்குப் போனலும் கூட, கிராமத்திலுள்ள குடிகள், அந்த உத்தியோகஸ்தர் அந்தஸ்தை எண்ணி தூர விலகி யிருப்பார்களே யொழிய, அவர்களிடம் நெருங்கி தங்கள் குறைகளையும், தாங்கள் தனித்து சொல்ல வேண்டிய இரகஸியங்களையும், வெளியிடமாட்டார்கள். ஆனல் உங்கள் விஷயத்தில் ஜனங்கள் அப்படி நடந்துகொள்ளமாட்டார்கள். உங்களை அவர்கள் தங்கள் இனத்தாராக பாவிப்பார்கள். தடையின்றி உங்களிடம் கலந்து பழகி கிராம விவகாரங்களை உங்களுக்குச் சொல்லுவார்கள். ஜனங்கள் உங்களிடம் பிரியப்படும்படி நடக்க உங்களுக்குத் திறமையிருக்குமானல், தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளை உங்களிடம் சொல்லிக் கொள்ளுவார்கள். நெருங்கிய உறவினர்களுக்குள் ஏற்படும் வாக்குவாதங்களைக்கூட உங்களை நம்பி வெளியிடுவார்கள். தங்கள் புருஷன் பேரிலுள்ள குறைகளை, பெண்சாதிகள் சொல்லக் கூடும்; தகப்பனர்கள் பிள்ளைகளைப்பற்றி புகாரா சொல்லுவார்கள். இப்படிப்பட்ட நம்பிக்கை உங்களிடத்தி

(1) II-வது பாகம் VII கேஸைப் பார்க்கவும்.

ஆண்டாவதற்கு, நீங்கள் கிராமங்களில் அதிகநேரம் தங்கி, ஜனங்களுடன் தாராளமாய் பழக வேண்டும்.[2] சம்மன் அல்லது வாரண்டு நிறைவேற்றுவதற்கோ, அல்லது கெட்ட நடத்தைகாரர்களை தணிக்கை செய்வதற்கோ, கிராமங்களுக்குப் போகும் அநேக ஜவான்கள் அவ்வேலைகளைக் கூடுமான சீக்கிரத்தில் முடித்துக்கொண்டு, தாங்கள் கிராமத்திற்கு போனதற்கு சாட்சியாக ஓர் கிராமவாசியின் கையெழுத்துப் பெற்று, ஸ்டேஷனுக்குத் திரும்புகிறார்கள். அவர்கள் நோட்டு புஸ்தகத்தைப் பார்த்தால் அவர்களுக்கு நியமித்திருந்த வேலையை செய்ததாக அதில் எழுதியிருக்குமே யொழிய, வேறு விஷயங்கள் காணப்படா.[3] இப்படிப்பட்ட ஒப்புக்குச் செய்யும் வேலையை யாரும் சுலபத்தில் செய்யக் கூடும். ஓர் கிராமத் தலையாரியாவது, வேறெந்த கிராம ஊழியக்காரராவது, இந்த வேலையை இம்மாதிரி செய்யக் கூடும். இப்படிச் செய்வதற்கு ஒரு போலீஸ் வேலையில் பழகிய ஜவான் அவசியமில்லை. ஆனால், இந்த கிராம பீட்டு வேலையை ஜவான்கள் சரிவரச் செய்தால், VII, VIII, IX, அதிகாரங்களில் விவரித்திருக்கும் கேஸுகளைக் கண்டு பிடிக்கும் முக்கியமான அலுவலுக்கு, வெகு ஒத்தாசையாயிருக்கும்.[4]

அப்படியானால் கிராம பீட்டு வேலையை திறமையாய் செய்யும் வகை யென்னவென்று நீங்களறிய விரும்புவீர்களல்லவா? கிராம பீட்டு வேலை விஷயமாய், உங்களது 'கைட்' (Guide) புஸ்தகத்தில் சொல்லியிருக்குமிடத்தில், பல விஷயங்களைப் பற்றி பல கேள்விகளை கொடுத்து அதற்கு தகுந்த உத்தரங்களை விசாரித்து உங்கள் நோட் புஸ்தகத்தில் எழுதும்படியாய் விவரித்திருக்கிறது.

---

(2) II-வது பாகம் XI கேஸைப் பார்க்கவும்.
(3) II-வது பாகம் XVII கேஸைப் பார்க்கவும்.
(4) II-வது பாகம் XV கேஸைப் பார்க்கவும்.

இந்த கேள்விகளை நன்கு ஆராய்ந்து, ஏன் அதிலடங்கியுள்ள விஷயங்களைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று அறிந்து கொள்வீர்களானல், நீங்கள் கிராம பீட்டு வேலையை கவனித்து அதிக ஊக்கத்துடன் செய்வீர்களென்பது திண்ணம். இப்போது ஸ்டேஷன்களில் வேலை செய்யும் ஜவான்களுக்கு, இந்த கேள்விகளின் உபயோகமின்னதென்று தெரியாது. அந்த கேள்விகளின் விடைகளால் என்ன பயன் ஏற்படுமென்று அவர்களுக்கு போதிக்கப்படவுமில்லை. ஆகையால், ஜவான்கள் இந்த கிராம பீட்டு வேலையை வெகு அதிருப்திகரமாய் செய்கிறார்கள். அவர்கள் நோட் புஸ்தகத்திலும், அவர்கள் போய்வந்த கிராமத்திற்கு சம்மந்தபட்ட முக்கியமான கேள்விகள் விஷயமாய் தருந்த விடைகளும் எழுதப்பட்டிராது. அப்படிப்பட்ட வினக்களின் விடைகள் எப்படி நமக்கு பிரயோஜனத்தை தருமென்பது அடுத்த அதிகாரத்தில் சொல்லப்படும்.

அதிகாரம் V

கிராம பீட்டு (துடர்ச்சி)

நீங்கள் கிராம பீட்டு போகும்போது, ஒரு கிராமத்தில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி விசாரிக்கவேணுமென்று உங்களுடைய கைட் (Guide) டில் சொல்லியிருக்கிறது. அவையாவன (1) நடந்த குற்றங்களை வெளியிடாமல் மறைத்தல். (2) கண்டுபிடிக்கப்படாமல் பாக்கியாயிருக்கும் பழைய குறறம் புதுக்குற்றம், இவைகளைப் பற்றி கிடைக்கும் தகவல். (3) குற்றஞ் செய்யும் கூட்டத்தார் அந்த கிராமத்திற்கு வந்திருந்தார்களா? (4) யாராவது அன்னியர்

கள் வந்திருந்தார்களா? (5) மேலே (3), (4) இவைகளில் சொல்லப்பட்டவர்கள் ஏதாவது குற்றங்கள் செய்ததாக சந்தேகம் உண்டா? (6) கேடிகளது போக்கு வரத்தும் அவர்களது ஜீவன உபாயமும். (7) கள்ளுக்கடைக்கு யார் வந்து போகிறார்கள். (8) திருட்டுத்தனமாய் கள்ளு சாராயம் உற்பத்தி செய்தல் அவைகளை விற்பனை செய்தல். (9) இந்தியா ஆயுத ஆக்டின் விதிகளுக்கு விரோதமாய் நடத்தல். (10) கிராமத்தில் நடந்த பஞ்சாயத்துகள். (11) பணம் வசூல் செய்தல். (12) கட்சிகள். (13) கலகாஸ்பதமான சந்தர்ப்பம் ஏதாவது உண்டா? மேலே சொல்லிய ஜாப்தாவில் முதல் ஏழுவிஷயங்களும், சொத்துக்கள் களவுபோகும் விஷயமாய் பினல் கோடு சட்டத்தில் சொல்லியுள்ள குற்றங்களைக் கண்டு பிடிக்கும் பொருட்டு ஏற்பட்டவைகள் என்று சுலபமாய் விளங்கும்; (8) (9) லக்கமுள்ளவைகள், விசேஷமானதும், ஓரிடத்திற்குரியதுமான சட்டங்கள் சம்பந்தமானவை; (10) முதல் (13) வரையிலுள்ளவைகள், திரேகத்திற்கு உபத்திரவத்தையும், பொதுஜன அமரிக்கைக்குப் பங்கமுண்டுபண்ணுவதையும் சார்ந்தவைகள்—இவ்விஷயங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும், ஏன் விசாரிக்க வேணுமென்று கீழே விவரிக்கப்படும்.

இந்த விஷங்களைப்பற்றி சொல்லுவதற்கு முன் ஒரு முக்கியமான விஷயத்தை நீங்கள் ஞாபகம் வைக்கவேண்டும். அதாவது கிராமத்திற்கு ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் போனவுடன் கிராம அதிகாரிகளையும், கிராம போலீஸையும், முக்கியமான கிராமக் குடிகளையும் பார்த்து, அவர்கள் மேற்சொன்ன விஷயங்களைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்று முதலில் விசாரிக்கவேண்டும். பிறகு அவர்கள் சொல்லும் விஷயங்கள் சரியா என்று மற்றவர்களுடன்

கலந்து பேசி தெரிந்துகொள்ள வேண்டும். இது விஷயங்களைப்பற்றி கிராமத்தாரை விசாரித்தறிய தகுந்த திறமை உங்களுக் கிருக்கவேண்டும். உங்களது உத்தியோக அலுவல் சம்பந்தமாயாவது, அல்லது கிராமத்தில் மற்றவர்கள் சொல்லும் விஷயங்களின் உண்மையைக் கண்டுபிடிக்கவாவது, நீங்கள் விசாரிக்கிறீர்கள் என்று ஜனங்கள் சந்தேகப்படாதவிதமாய் அவர்களை விசாரிக்கவேண்டும். ஏனென்றால், பொதுவாய் கிராம ஜனங்களுக்கு, கோர்ட்டில் வந்து சாட்சி சொல்லவாவது, தங்கள் கிராமத்திலுள்ள அயலார் சொல்லும் பொய்யை வெளிப்படுத்தவாவது, இஷ்டமிருப்பதில்லை. உங்கள் கைட் புஸ்தகத்திலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் வரிசையாய் சொல்லி விசாரிக்க ஆரம்பித்தீர்களானால், ஒருவரும் உங்களுக்கு உபயோகமான எதையும் சொல்லமாட்டார்கள். ஆகையால் தந்திரமாய் மற்ற பேச்சுகள் பேசும்போதே இந்த விஷயங்களைப் பற்றி நடுவில் பேசி, உண்மையை அறியப் பிரயத்தனப்பட வேண்டும்.

கிராமத்தில் போனவுடன் நீங்கள் முதலில் விசாரிக்க வேண்டியது ஏதாவது குற்றங்களை வெளியிடாமல் அடக்கி வைத்திருக்கிறார்களா என்பது. கேஸுகளைக் கண்டுபிடிப்பதற்கு முந்தி, நடந்த கேஸுகளெல்லாம் தவராமல் ஸ்டேஷனில் பதியப்பட்டிருக்க வேண்டும்—ஏனென்றால் ஒரு கிராமத்தில் அரிதாய் எப்போதாவது ஒரு குற்றம்நடந்தால், அது சாதாரணத் திருடனால் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால், ஒரு கிராமத்திலும் அதின் சுற்றுப்பட்ட இடங்களிலும் ஒரேமாதிரியான பல குற்றங்கள் சிலகாலத்திற்குள் நடந்தால், இவைகள் வழக்கமாய் குற்றஞ்செய்யும் ஒரு நாடோடி கூட்டத்தினரால் செய்யப்பட்டிருக்கவேணு

மென்று ஊகிக்கலாம். (1) சில கிராமமுன்சீப்கள், சோம்ப லினுலோ, அல்லது கிராமத்தில் தங்காததினுலோ, அல்லது வேறு காரணத்தினுலோ, நடந்த குற்றங்களை சரிவர ஸ்டேஷனுக்கு ரிபோர்ட்டு செய்வதில்லை. இதனுல், நடந்த குற்றங்களின் விபரங்கள் சரிவர ஸ்டேஷனுக்குத் தெரியாத தால் குற்றங்களை கண்டுபிடிக்க வேண்டிய சாதனம் குறைவுபடுகிறது. இதற்காகத்தான் நீங்கள் நம்பிக்கையில் லாத கிராமத்தலைவர்களுள்ள கிராமங்களில் நடந்த கேஸுகளெல்லாம் ஸ்டேஷனுக்கு தெரியப்படுத்தபட்டதா என்று விசாரித்து, அப்படி ரிபோர்ட்டு செய்யாத கேஸுகள் ஏதாவது உங்களுக்குத் தெரியவந்தால் உடனே அதை ஸ்டேஷனுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டும்.

ஒரு கிராமத்தில் சொற்ப நபர்கள் வசிப்பதால், அநேகமாய் பிரதிதினம் அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க நேரிடுகிறது. அப்படி சந்திக்குங்கால் அவர்களுக்கு புதிதாய் தெரிந்த சமாசாரங்களைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுகிருர்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பம் நகர வாசிகளுக்கில்லை. மேலும் நகரத்திலுள்ளவர்கள் ஒருவரோடு ஜாஸ்தி நேரம் கலந்து பேச ஒழிவு இருப்பதில்லை ஆனுல் நாட்டிலுள்ளவர்களுக்கு சாவகாசமிருப்பதுடன் பல விஷயங்களைப் பற்றி பேசிக்கொள்வதே அவர்களுக்கு ஒரு பொழுது போக்கும் வழி; ஆகையால், அப்படிப்பட்ட கிராமத்தாரோடு தாராளமாய் கலந்து பேசினுல், பழைய குற்றம், புதுக்குற்றம், இவைகளைப்பற்றி உபயோகமுள்ள விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஜீவன உபாயமில் லாத குற்றம் செய்யும் கூட்டத்தார், பிச்சையெடுப்பதற் காக ஊருக்கு ஊர் போவதாக நடித்துப் போன இடங்களில்

(1) II-வது பாகம் XI கேஸைப் பார்க்கவும்.

குற்றங்கள் செய்வார்கள். சந்தேகப்படக்கூடிய அன்னியர்களும், அம்மாதிரியே குற்றஞ் செய்வதற்காக ஊருக்கு ஊர் போவார்கள். அவர்கள் போகும்வழியை அவர்கள் செய்திருக்கக் கூடிய குற்றங்களால் கண்டு பிடிப்பதற்காக அப்படிப்பட்ட நபர்கள் கிராமத்திற்கு வந்திருந்தார்களா, அவர்கள் செய்ததாகச் சந்தேகிக்கக்கூடிய குற்றங்களுண்டா என்று கிராமங்களில் முக்கியமாய் விசாரிக்க வேண்டும். இம்மாதிரி நாடோடியான நபர்களில் சிலர், சாமர்த்தியமாய் மாடுகள் திருடக்கூடியவர்கள். அவர்கள் கிராமத்திற்கு வந்து போனதையும், அவர்கள் செய்ததாக ஊகிக்கக் கூடிய குற்றங்களையும், நீங்கள் விஜாரித்துத் தெரிந்து கொண்டு ஸ்டேஷனில் ரிபோர்ட்டு செய்தால், குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கு வெகு உபயோகமாயிருக்கும். இந்தப் பாராவில் (3) (4) (5) இலக்கமிட்ட விஷயங்களைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

கேடிகள் போக்குவரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியதும் வெகு அவசியம். ஏனென்றால், அவர்களில் பலர் சிக்ஷையடைந்து ஜெயிலுக்குப் போய்வந்த பிறகும், நல்ல வழியில் திருந்தாமல் குற்றங்களையே செய்கிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தெரிந்த சில திருடர்களுடன் கலந்து, முன் யோஜனையுடன் குற்றங்களைச் செய்ய பல இடங்களுக்குப் போகிறார்கள். நீங்கள் கிராமங்களில் கேடிகளுடன் கூடுகிறவர்கள் யார் யார் என்றும், அவர்கள் எப்படி ஜீவிக்கிறார்கள் என்றும் விசாரித்து வந்தால், அப்படிப் பட்டவர்களால் செய்யப்படும் குற்றங்களைக் கண்டுபிடிக்கச் சாதகமாயிருக்கும். மேலும் அவர்களது சந்தேகத்திற்கிடமான போக்குவரத்துக்களையும், அவர்கள் வரும்படிக்கு மிஞ்சி சிலவு செய்வதையும் விசாரித்து, அப்போதைக்கப்போது எழுதி வைத்

திருந்தால், அவர்கள் பேரில் நல்ல நடத்தைக்கு ஜாமீன் கேஸுகள் போடுவதற்கு உதவியாயிருக்கும். தூரத்தி-லுள்ள ஒரு கிராமத்தில் ஒரு கேடி குற்றம் செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு, வாதிகள் குறிப்பிடுவது தவிர வேறு முக்கிய சாக்ஷியம் அவன்பேரிலில்லாத காலத்தில், அவ-னைப்பற்றி நீங்கள் கிராமத்தில் விசாரித்ததில் குற்றம் நடந்த தேதி அவன் தன் கிராமத்தில் ஆஜரில்லை என்று அறிந்து நீங்கள் உங்கள் நோட்புக்கில் எழுதியிருக்க நேர்ந்தால், அந்த கேடிபேரிலுள்ள சந்தேகத்தைப் பலப்படுத்துவ தற்கு முக்கியமான சாக்ஷியமாகும். இந்த பாராவானது (6) வது லக்கமிட்ட விஷத்தைப் பற்றி விவரித்திருக்கிறது.

கள்ளுக்கடைகள் திருடர்கள் சேரக்கூடிய இடமாயிருக் கிறன. கள்ளுவிற்கும் சிலர், திருட்டு சொத்துவாங்குபவர் களா யிருப்பதான சந்தேகமுமுண்டு. மேலும் குற்றஞ் செய்வதற்கு முந்தி குற்றவாளிகள் நிரம்ப கள்ளு சாராயம் முதலியவைகளை குடித்துத் தங்கள் மனதை திடப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது. ஆகையால், குற்றவாளிகளுக்கும் கள்ளு சாராயம் விற்கும் கடைகளுக்கும் வெகு சம்பந்தமுண்டு. புத்தியுள்ள ஒரு கான்ஸ்டேபிள், உடுப்பில்லாமல் கள்ளுக்கடைக்கு சமீபத்திலுள்ள ஒரு மரத் தடியில் படுத்து தூங்குவதாய் பாசாங்கு செய்துகொண்டு, கடையில் நடக்கும் பேச்சுகளை உற்று கவனித்துக் கொண்டிருந்தால், கேஸு கண்டு பிடிப்பதற்கு உபயோக-முள்ள விஷயங்கள் பல தெரிந்து கொள்ளலாம். குடிமயக் கம் ஆரம்பிக்குங்கால், அனுவசியமாய் ஜாஸ்தி பேசநேரிடும். அதிகமாய் பேசாத குற்றவாளிகள்கூட குடிபோதையில் தாங்கள் செய்த குற்றத்தைப் பற்றி தாராளமாய் பேச ஆரம்பிக்கிறார்கள். இந்தப் பாராவில் (7)-வது லெக்கமிட்ட விஷயத்தைப் பற்றி சொல்லியிருக்கிறது.

அதிகாரம் VI

கிராம பீட்டு (தொடர்ச்சி)

விசேஷமானதும் ஓரிடத்திற் குரியதுமான சட்டங்களில் சொல்லிய குற்றங்களைப் பற்றியும், கிராம விவகாரங்களால் ஏற்படக் கூடிய குற்றங்களைப் பற்றியும், இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும். திருட்டுத்தனமாய் கள்ளு சாராயம் செய்யப்படுகிறதா அல்லது விற்கப்படுகிறதா என்று விசாரிக்க, ஆப்காரி டிபார்ட்டுமெண்டு சிப்பந்திகளிருக்க, போலீஸ்காரர்கள் ஏன் சிரத்தை எடுத்துக் கொள்ளவேணு மென்பது உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். லைசென்ஸ் பெற்ற கள்ளுக்கடைகளில் குற்றம் செய்யக்கூடியவர்களை பார்க்கலாமென்று மேலே சொன்னோமல்லவா ? அப்படியிருக்க ஜனங்கள் பார்வையில்லாதவும், ரகசியமாய் கள்ளு சாராயம் உற்பத்தி செய்வதுமான இடங்களில் கெட்ட நடத்தைக்காரர்கள் கூடுவார்கள் என்பது நிச்சயமல்லவா? அதினால்தான், அப்படிப்பட்ட இடங்களை போலீஸ்காரர்கள் அதிக கவனமாய் பார்க்கவேண்டியது. அப்படி நாம் செய்வதால், ஆப்காரி டிபார்ட்மெண்டார் வேலைக்கும் உதவி செய்பவர்களாகிறோம். ஆனால் நாம் இந்த வேலையை செய்வதன் முக்கிய கருத்து அது அல்ல.

கிராமத்தில் விசாரிக்க வேண்டிய அடுத்த விஷயமென்னவென்றால், லைசென்ஸு இல்லாமல் யாராவது துப்பாக்கி வைத்துகொண்டிருக்கிறார்களா என்பதே. இந்த வேலை இந்த டிபார்ட்டுமெண்டாரே செய்யவேண்டிய வேலைகளில் ஒன்று. இந்த வேலை இரண்டு விதத்தில் முக்கியமானது. முதலில், இந்திய ஆயுத ஆக்ட் நிபந்தனைகள் சரிவர நடைபெறச் செய்வது. இரண்டாவது, துன்பம் உண்டு

பண்ணக்கூடிய குற்றங்கள் நடக்காமல் தடுப்பது. குற்றம் செய்பவர்களுக்கு தைரியமுண்டாக எப்படி கள்ளு சாரா யம் அவசியமோ, அப்படியே, ஆயுதங்களும் குற்றங்கள் செய்வதற்கு, இன்றி அமையாதனவா யிருக்கின்றன.

மேலே சொன்ன விஷயங்களிலிருந்து, விசேஷமான தும் ஓரிடத்திற்குறியதுமான பல சட்டங்களிலிருந்து, ஆப்காரி ஆக்டு,இந்திய ஆயுத ஆக்டு, இவைகளிரண்டை மட் டும், இந்த டிபார்ட்டுமெண்டார் கவனிக்க வேண்டியதாய் தெரிந்தெடுத்ததற்குக் காரணம் நன்றாய் விளங்கும். அதா வது, இவைகளிரண்டுதான், குற்றங்கள் செய்பவர்களுக்கு முக்கியமாய் சம்பந்த பட்டவைகள்.

கிராமங்களில் நீங்கள் விசாரிக்கவேண்டிய விஷயங்க ளில் கடைசியானது, கிராம விவகாரங்களே. ஒரு கிராமத்தி லுள்ள தலைமையான குடித்தனக்காரர்கள் ஓர் பஞ்சாயத் தாய் சேர்ந்து, அந்த கிராம சம்பந்தமான குடித்தன விஷ யங்களையும் சட்ட சம்பந்தமான விஷயங்களையும் தீர்மானிக் கிறார்களல்லவா? தற்காலத்தில், பஞ்சாயத்து சட்டம் என்ப தன் கீழ் கெவர்ண்மெண்டாரால் நியமிக்கபட்டாலொழிய, அவர்கள் தீர்மானங்கள், குடிகளை சட்டப்படி கட்டுப்படுத் தாது. ஆனால் இந்த பஞ்சாயத்து முறை வெகுகால வழக் கம். இதன் தீர்மானத்திற்கு அடங்கி கிராமத்தார் நடக்கும் வரை கிராமங்களில் யாதொரு கட்சியுமிராது. அப்படியில் லாமல், அதின் தீர்மானத்திற்கு அடங்காமல் சுயேச்சையாய் தங்களிஷ்டப்படித்தான் நடப்பேனென்று யாராவது சொல் லும் பக்ஷத்தில், அந்த கிராமத்தில் உடனே கலகத்திற்கு ஆரம்பமாகிறது. பஞ்சாயத்தார்கள் தங்கள் தீர்மானத்தை நிறைவேற்ற முயலுகிறார்கள். கிராமத்தில் சிலர் பஞ்சாயத்

தார் கட்சியையும், சிலர் அவர்கள் தீர்மானத்தை மதிக்கா தவர்கள் கட்சியையும் சேருகிறுர்கள். கட்சி வர வர அதி கரித்து, ஒருவருக் கொருவர் மேலும் மேலும் விரோத மான காரியங்களைச் செய்கிறுர்கள். கலகங்களும் அடிதடி சண்டைகளுமுண்டாய், போலீஸ்காரர்களுக்கு அளவற்ற வேலை யுண்டாகிறது.

ஆனுல் நீங்கள் கிராம பீட் வேலையை சரிவரச் செய் தால்,இந்த மாதிரியான அசந்தர்ப்பங்கள் நேரிடமாட்டாது. ஓர் கிராமத்தில் கட்சி ஆரம்பிக்கிறது என்பதை அறிந்து உங் கள் நோட் புஸ்தகத்தில் நீங்கள் எழுதினுல், அது விஷயம் உங்கள் ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசருக்குத் தெரிந்து, அது விர்த்தியாவதற்கு முந்தி அதைத் தடுத்து, அந்த கிராமத் தில் மறுபடியும் அமரிக்கை உண்டாவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வார். மேலும் கட்சிப் பிரதி கட்சி, கேஸு களில் வெகுசாய் எதிர் கட்சிக்காரர்களது சாட்சியம்தான் அகப்படுகிறது. இதை கோர்ட்டுகளில் பொதுவாய் நம்பு கிறதில்லை. ஆனுல், ஒரு கட்சியின் ஆரம்பம், அதின் விருத்தி முதலிய விஷயங்கள் அப்போதைக்கப்போது உங்கள் நோட் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்தால், அதைப்பார்த்து கோர்ட்டுகளுக்கு உண்மை என்ன என்பதைக் கண்டு பிடிப் பதற்கு சுலபமாயிருக்கும்.

ஒரு கிராமத்தில் எதற்காக பணம் வசூல் செய்கிறுர் கள் என்பதைப் பற்றியும் நீங்கள் விசாரிக்க வேண்டும். ஒரு உற்சவம் நடத்துவதற்கோ, அல்லது கிராமத்தின் பொது நன்மைக்காகவோ, பணம் வசூலிப்பதில் ஆட்சே- பணையில்லை. சில சமயங்களில்,ஆட்சி முறைக்குவிரோதமாக வாவது அல்லது ராஜத்துரோகமான கிளர்ச்சிக்காவது வரி வசூல் செய்யலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், நீங்கள்

அதை அறிந்து உங்கள் ஸ்டேஷனுக்கு தெரியப்படுத்தினல், ஸ்டேஷன் அதிகாரி எச்சரிக்கையாயிருந்து, அது விஷயத்தை ஊரும்போதே துடைப்பதற்குத்தக்க ஏற்பாடு செய்வார்.

மேலேசொன்ன விஷயங்களைப் பற்றித்தான் நீங்கள் கிராமத்தில் விசாரிக்க வேண்டியது. இவ்விஷயங்களைப் பற்றி நீங்கள் சரியான காலத்தில் தெரிந்து கொண்டு அவைகளை ஸ்டேஷனில் ரிபோர்ட்டு செய்வதால், எப்படி கேஸுகண்டு பிடிப்பதற்கு உதவியாகிறது என்று அடுத்த மூன்று அதிகாரங்களில் அறிந்து கொள்வீர்கள்.

அதிகாரம் VII

கேஸுகளை கண்டு பிடித்தல்

இந்த இலாகாவில் நடக்கும் கேஸுகளைக் கண்டு பிடிப்பது ஜவான்களாகிய உங்கள் கடமையில்லாவிட்டாலும், கேஸுகளைக் கண்டுபிடிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு நீங்கள் அடிக்கடி உதவிசெய்ய நேரிடும். மேலும் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் ஸ்டேஷனில் இல்லாத காலங்களில், நீங்களே ஒரு கேஸை கண்டுபிடிக்க வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்ய நேரிடும். மேலான அதிகாரிகள் வந்து, அந்த கேஸு விசாரணையை ஒப்புக்கொள்ளும் வரையில், அந்தக் கேஸில் அவசியமாயும் அவசரமாயும் செய்யவேண்டிய வேலைகளை, நீங்கள் வெகு சுரு சுருப்பாய் செய்ய வேண்டியிருக்கும்.

ஸ்டேஷனில் தாக்கலான கேஸில் குற்றவாளியை

யாவது, களவுபோன சொத்தையாவது கண்டுபிடிக்க வேண்டிய அவசியமிருந்தால், குற்றவாளிகள் போகக்கூடிய இடங்களிலும், அல்லது கண்டுபிடிக்க வேண்டிய சொத்து கள் கொண்டுபோகக்கூடிய இடங்களிலுமுள்ள போலீஸ் அதிகாரிகளுக்குத் தாமதமில்லாது கேஸில் பிடிபடவேண் டிய மனிதன் சொத்து, இவைகளைப்பற்றிய விபரஙகளை தந்தி மூலமாகவோ, தபால் மூலமாகவோ, ஆள் மூல மாகவோ, சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு தெரிவிக்கவேண்டி யது. குற்றவாளி தப்பி ஓடு முன்னும், சொத்துகள் கைதாண்டிப் போவதற்கு முன்னும், அவைகளைக்கண்டு பிடிக்கும்படி அதிவிரைவில் சமாசாரம் தெரியப்படுத்த வேண்டும். ரயில் மார்க்கமாய்ப் போகக்கூடுமென்று தோன்றினால், ரயில்வே போலீஸ் அதிகாரிகளுக்கும் தெரி யப்படுத்த வேண்டும்.

அம்மாதிரி தெரிவிக்க ஏற்பாடு செய்துவிட்டு குற்றம் நடந்த ஜாகாவிற்குபோய், அங்குள்ள எல்லாவற்றையும் வெகு கவனிப்பாய்ப் பார்க்கவேண்டும். தேர்ந்த குற்றவாளி கள் கூட அவர்கள் நடத்தும் குற்றங்கள், இன்னார்தான் செய்திருக்கக் கூடுமென்று ஊகிக்கக்கூடிய மாதிரியாய், சில செய்கைகளை குற்றம் செய்யும் ஒவ்வொரு ஜாகாவிலும் செய்யக்கூடும். (1) அவைகளை நன்கு கவனிப்பதாலும், அவர் கள் குற்றம் நடந்த இடத்தில் தவரி விட்டு விட்டுப் போகும் சாமான்களாலும், (2) அவ்விடத்தில் பூமியிலும், கண்ணாடி மேஜை முதலிய சாமான்களிலும், காணக்கூடிய விரல்ரேகை, காலடி (3) முதலிய அடையாளங்களாலும், குற்றவாளி இன்னாரென்று கண்டு பிடிக்க பிரயத்தனப்பட

(1) II-வது பாகம் கேஸ்நம்பர் XVI பார்க்கவும்.
(2) II-வது பாகம் கேஸ்நம்பர் X பார்க்கவும்.
(3) II-வது பாகம் கேஸ்நம்பர் VIII பார்க்கவும்.

வேண்டும். இது உங்களால் சுலபத்தில் செய்யக்கூடிய வேலையில்லாவிட்டாலும், அப்படிப்பட்ட அடையாளங்களை நன்கு கவனித்து, அவைகள் அழியாதிருக்கும்படி ஜாக்கிரதையாய் பாதுகார்த்து, மேலதிகாரிகள் அங்கு வந்தவுடன் அவர்களிடத்தில் தெரியப்படுத்தவேண்டியது.

உங்களை கேஸுக் கண்டுபிடிப்பதற்கு உதவிசெய்யும்படி மேலதிகாரிகள் நியமித்தால், அவர்கள் சொல்லும் உத்தரவை நன்ருய் கவனித்து தெரிந்து கொண்டுவரச் சொல்லும் சமாசாரத்தை ஊக்கத்துடன் அலைந்து திரிந்து கண்டு பிடிக்கவேண்டியது. அவசியமிருந்தாலொழிய நீங்கள் இன்ன வேலை செய்யப்போகிறீர்கள் என்பது ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. ஜனங்களிடத்தில் அனுவசியமாய்ப் பேசாமல், அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளக்கூடியதை, அமரிக்கையுடன் தந்திரமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். திறமையுள்ள போலீஸ்காரன் தான் பேசுவது குறைவாயும், பிறரைப் பேசச்செய்வது அதிகமாயுமிருக்கும்படி நடந்து கொள்வான். (4)

சில சமயங்களில் வெகு பேர்கூடியிருக்கும் திருவிழா முதலிய கொண்டாட்டங்களில், உங்களை பந்தோபஸ்துக்காக நியமிப்பார்கள். அப்படிபட்ட பெருத்த கும்பலில் வழக்கமாய் குற்றம் செய்யும் கேப்மாரிகளும், முடிச்சு அவிழ்ப்பவர்களும், குற்றம் செய்வதற்காக வந்துசேருவார்கள். நீங்கள் இந்த சந்தர்ப்பங்களில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு, குற்றவாளிகளைக் கவனியாதிருந்தால், அநேக குற்றங்கள் நடந்துவிடும். நடக்கும் வேடிக்கைகளும், வேடிக்கை பார்க்கவரும் குற்ற மற்ற

(4) II-வது பாகம் கேஸ்நம்பர் III பார்க்கவும்.

ஜனங்களும், உங்கள் கவனத்திலிருந்து அடியோடு நீங்கும் படி நாளடைவில் பழகவேணும். ஆனல் குற்றம் செய்யக் கூடியவர்கள் என்று சந்தேகிக்கும் சிலரைமட்டுமே, நீங் கள் கவனமாகப் பார்த்திருந்து அவர்களை அவசியமிருந் தால் பிடித்து மேலதிகாரிகளிடம் ஒப்புவிக்க வேண்டியது. ஏதாவது குற்றம் செய்ய பிரயத்தனப்படும் வரையில், அவர்கள் பேரிலேயே கவனமாயிருக்க வேண்டியது. இப் படி கும்பலில் திருடுபவர்களைகண்டு பிடிப்பீர்களானல், உங் களுக்குத் தக்க வெகுமதி கிடைக்கும். போலீஸ் இலாகா வின் மதிப்பும் அதிகரிக்கும்.

குற்றங்களைக்கண்டு பிடிக்கும் திறமையானது புஸ்த கங்கள் படிப்பதனுலாவது, கொஞ்சநாள் பழக்கத்தினுலா வது வரக்கூடியது அல்ல. இதில் தேர்ச்சியடைய நாம் எப் போதும் பழகிக்கொண்டே தானிருக்கவேணும். இந்தப் பழக்கத்திற்கு முடிவு கிடையாது. அப்படி நாம் பழகு வதற்கு, ஒவ்வொரு சம்பவத்தையும் கவனித்து அதில் நமக்கு ஏற்கனவே தெரியாத எந்த விஷயத்தை அறிந்து கொண்டோம் என்று கவனிக்கவேண்டும். மேலும் குற்ற வாளிகள், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவர்கள் குற்றம் செய் யும் விதத்தையும் மாற்றுவார்கள். ஆன தால், நாம் தெரி ந்துகொண்ட விஷயத்தில், எதை மறக்க வேணுமோ அதை மறந்து எதை வேறுபடுத்திக் கொள்ளவேணுமோ அதை யும் கவனித்து, கேஸு கண்டு பிடிக்கும் திறமையை அபிவிர்த்தி செய்துகொண்டே போகவேணும்.

ஆனல் கேஸுகள் கண்டுபிடிக்கும் அலுவலில் உங் களை நியமித்திருக்கும்போது, நீங்கள் ஒரு முக்கியமான விஷயத்தில் பிரவேசியாமல், ஜாக்கிரதையாயிருக்க வேண்டி

யது. அதாவது குற்றவாளி என்று சந்தேகப்பட்டு பிடித்த நபரை பலவந்தப்படுத்தி, மிரட்டி, துன்பம் உண்டு பண்ணி, குற்றத்தை வெளிப்படுத்த பிரயத்தினப்படுதல். இது சட்ட விரோதமென்றும், அப்படி செய்ததாக ருஜுவானுல், கிரிமினல் கோர்ட்டில் தண்டனை ஏற்படுமென்றும், நீங்கள் ஏற்கனவே உங்கள் கைட் (Guide) புஸ்தகத்தில், படித்திருக்கிறீர்கள். அப்படி மிரட்டி துப்பறியப் பிரயத்தனப்படுவதால், தண்டனைக்கு உள்ளாவதுடன்கூட, பிடிபட்டவன் அடிக்குப் பயந்து, பொய்யாய் குற்றத்தை ஒப்புக்கொள்ளக் கூடுமானதால், குற்றத்தைக்கண்டு பிடித்து விட்டதாக நாம் எண்ணி காலதாமதம் பண்ணுவதால், உண்மையில் பிடிபட வேண்டியவன் தப்பித்துக்கொள்ள, சாவகாசம் ஏற்பட்டு, குற்றம் கண்டு பிடியாமல் போய்விடவும் கூடும்.

அதிகாரம் VIII

கேஸுகளைக் கண்டு பிடித்தல் (தொடர்ச்சி)

முந்தின அதிகாரத்தில், கேஸுகள் கண்டு பிடித்தலைப் பற்றிய சில விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்திலும் இதற்குப் பிந்திய அதிகாரத்திலும், அதைப்பற்றியே வேறு சில விஷயங்கள் சொல்லப்படும்.

போலீஸார் தங்கள் அலுவல்களை சரிவரச் செய்வதற்காக, சில சட்டங்களும் விதிகளும் நன்ருய் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமென்று முன்னமே சொல்லியிருக்கிறேமல்லவா? அப்படிப்பட்ட சட்ட திட்டங்களை தெரிந்து கொள்ளாமல், போலீஸ் வேலையை நடத்த முடியாது. இந்த அதிகாரத்தில் சொல்லப்போவது என்னவென்ருல், அப்

படிப்பட்ட சட்டதிட்டங்கள் மட்டும் தெரிந்திருப்பது போதாது. ஓர் போலீஸ் உத்தியோகஸ்தன் குற்றங்களை கண்டு பிடிக்கும் விஷயத்தில், தேர்ச்சி பெற்றவனாகவேணு மானால், அவனுக்கு உலக பழக்கம் மிகுதியாய் யிருக்க வேண்டும். மனிதர்கள் சுபாவத்தை சுலபத்தில் அறிந்து கொள்ளும் திறமை வேண்டும். குற்றம் செய்யும் கூட்டங் களின் ஒவ்வொரு வகுப்பினரது விசேஷப் பழக்கங்கள் என்னவென்றறிய வேண்டும். மேலும் பொதுவாய் ஜனங் களுடைய நடை உடை பாவனைகள் இன்னதென்று கவ னித்து அறிந்திருக்க வேண்டும். பல பேர்கள் கூடக் கூடிய சந்தை திருவிழா முதலியன, எப்போது எங்கெங்கே நடைபெறப் போகிறது என்றும், அதற்கு விசேஷமாய் எந்த இடங்களிலிருந்து முக்கியமாய் எந்த ஜாதியார்கள் வந்து கூடுவார்கள் என்றும், தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட கூட்டங்களில், எப்படிப்பட்ட திருட்டுகள் நடத்துவது சுலபமென்று தெரிந்திருக்கவேண்டும். உதா ரணமாக, ஜனங்கள் நெருங்கிய பெரிய திருவிழாக்களில், ஸ்வாமிக்குக் கற்பூரம் ஏற்றிக் காட்டும்பொழுது, வந்திருக் கும் ஜனங்களில் அநேகர் மெய் மறந்து ஸ்வாமியை தெரி சனம் செய்து கொண்டிருப்பார்கள். அப்போது கும்பலில் கலந்திருக்கும் திருடர்களுக்கு, பெண்கள் கழுத்திலுள்ள மாலைகளை கத்தரிப்பதற்கும், முடிச்சவிழ்ப்பதற்கும், தகுந்த சமய மென்றறிய வேண்டும்.

விசேஷ காலங்களில் ஆயிரக் கணக்காய், ஸ்நானம் செய்யக் கூடிய ஆறு, குளம் முதலிய தீர்த்தக் கரையில், யாத்திரைக்காரர்கள் ஸ்நானம் செய்யும் பொழுது, அவர்கள் கரையில் வைத்திருக்கும் மூட்டைகளை எடுத்துக் கொண்டு போனால், சொந்தக்காரர்கள் அநேகமாய் கவனியாதிருப்

பார்கள். மற்றவர்களும் சந்தேகிக்க மாட்டார்களென்றறிய வேண்டும்.

இன்னும் ரயில்வே ஸ்டேஷனில், ரயிலின் வரவை எதிர்பார்த்து தங்கிக் கொண்டிருக்கும் பிரயாணிகள் அயர்ந்து தூங்கும் நேரத்தில், அவர்கள் பெட்டிகளை திருடுவது எளிதென்றறிய வேண்டும்:—

இம்மாதிரியான விஷயங்கள் இன்னும் பலவற்றை எடுத்துச் சொல்லலாம். இதில் முக்கியமாய் நாம் தெரிந்து கொள்ள வேண்டியதாவது, நாமிருக்கும் நாடுகளிலுள்ள மனிதர்களைப் பற்றியும், பொருள்களைப்பற்றியும் நம்மால் இயன்ற அளவு, எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது வெகு அவசியம் என்பதே. (1)அப்படி தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய விஷயங்களுக்கு ஒரு அளவு மில்லை; தெரிந்து கொள்வதற்கு ஒரு காலமுமில்லை. எந்த விஷயங்கள் தெரிந்து வைத்திருந்தாலும் ஒரு சமயங்களில் குற்றங்கள் கண்டுபிடிப்பதற்கு அவைகள் பிரயோஜனப்படும். மேலும் அப்போதைக்கப்போது நாம் தெரிந்து வைத்திருக்கும் விஷயங்களில் ஏற்படும் மாறுதல்களையும், கவனித்து தெரிந்து கொள்ளவேண்டும். உதாரணமாக, ஓர் ஊரில் செவ்வாய்க்கிழமை கூடிய சந்தை, ஒருகாலத்தில் வியாழக்கிழமையாய் மாறினல், அதுவும் தெரிந்திருக்க வேண்டும். இன்ன விஷயத்தைப்பற்றிய சங்கதிதான் நமக்கு பிரயோஜனப்படுமென்றும், இன்ன விஷயம் பிரயோஜனமில்லை என்ற வரையறையும் கிடையாது.

இந்தஅதிகாரம் முடிப்பதற்கு முந்தி, இது விஷயமாய் ஓர் முக்கிய சங்கதி உங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

---

(1) II-வது பாகம் கேஸ் நம்பர் XIII பார்க்கவும்.

போலீஸ் சம்பந்தமான சட்டங்கள், விதிகள், இவைகளில் உண்டாகும் மாறுதல்கள், அப்போதைக்கப்போது வார வாரம் வெளியாகும் போலீஸ் கெஜட்டில் பிரசுரம் செய்யப் படும். மேலும் சில கேசுகள் கண்டு பிடித்ததில், என்ன முக்கியமான வேலை செய்ததால், கேஸுகள் பிடிபட்ட தென் றும், என்ன செய்யத்தவறியதால் கேஸில் செய்த வேலை பயன் படாமல் போய் விட்ட தென்றும், விளம்பரம் செய் யப்படும். சில சமயங்களில் சட்ட அநுபந்தம் (Law Supplement.) என்றும் பிரசுரம் செய்யப்படும். இவைகளிலுள்ள விஷயங்களையும், உங்கள் உபாத்தியாயர், ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர், இவர்களுக்கு நேரில் தெரிந்த அல்லது இவர்கள் கேழ்விப்பட்ட உபயோகமான விஷயங்களையும், நீங்கள் ஊக்கத்துடன் கேட்டு அறிந்து கொள்ள வேண்டியது.

அதிகாரம் IX

கேஸுகளைக் கண்டு பிடித்தல் (தொடர்ச்சி).

போனஅத்தியாயம், அதற்கு முந்திய அத்தியாயம், இவ்விரண்டிலும் கேஸுகண்டு பிடிப்பதைப் பற்றிய விஷ யங்கள் தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அத்தியா யத்தில் அதே விஷயமாய் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பாக்கி விவரங்கள் சொல்லப்படும்:—

கேஸ்கண்டு பிடிக்கும் திறமையானது, நமக்கு சொல்ப காலத்திலேயே ஏற்படக்கூடியதல்ல. வெகு கஷ்டப்பட்டு அலைந்து திரிந்து, சரியான துப்பு கண்டுபிடித்து, அதுவழியி லேயே ஊக்கத்துடன் நாம் பிரயாசைப் பட்டும், சில கேஸுகள் "கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை"

என்ற பழமொழிப்படி, கண்டு பிடிக்கும் தருவாயில் பிடிபடாமல் போவதுமுண்டு. இப்படிப்பட்ட சம்பவம் அடிக்கடி நேரிடக் கூடும். ஏனென்றால் நாம் எவ்வளவு பிராயாசைப்பட்டு திருடர்கள் செய்யும் காரியங்களை பின்பற்றி செல்லுகிறோமோ, அவ்வளவுக்கு மேற்பட்ட பிரயாசையுடன் அவர்கள் தாங்கள் செய்யும் குற்றங்களை மறைக்க பிரயத்தனப் படுகிறார்கள். குற்றவாளிகளின் செய்கைகளை கண்டுபிடிக்க முயலுவதானது, திருடர்கள் திறமைக்கும், கண்டு பிடிப்பவர்கள் திறமைக்கும், ஒரு போட்டி போலாகிறது. (1) இந்தப் போட்டியில் திருடர்கள் திறமையைக் காட்டிலும், கண்டு பிடிப்பவர்கள் தேர்ந்ததிறமை யுள்ளவர்களாயிருந்தாலும், அவர்கள் கேஸைக் கண்டு பிடியாமல் ஏமாந்துபோகலாம். அதற்கு முக்கியகாரணம், திருடர்கள் தமது செய்கைகளை மறைக்க, எடுத்துக் கொள்ளும் பிரயாசைக்கு வேண்டியகாலத்திற்குள், நாம் கண்டு பிடிப்பதற்குச் செய்யும் பிரயாசைகளை சீக்கிரத்தில் ஆலோசித்து, சுருசுருப்பாய் முடிக்கத் தவறுவதே. கண்டு பிடிக்கும் திறமையிருந்தாலும் அதை மெதுவாய் உபயோகப்படுத்தினால், பல முறையிலும் ஏமாந்து போக நேரிடும்:—உதாரணமாக, ஓர் ஒளிந்துகொண்டிருக்கும் கொலையாளியைக் கண்டுபிடிக்கும் தருவாயில், அற்ப தாமதத்தினால் அவன் கொலைசெய்வதற்கு உபயோகப்படுத்தியதும், இரத்தக்கரை யுள்ளதுமான கத்தியை, ஒரு கிணற்றுக்குள் போட்டு விடலாம். அல்லது திருட்டுப்போன நகையை நாம் கைப்பற்றுவதற்கு முந்தி உருக்கி விடலாம். இன்னம் கைப்பற்ற வேண்டியது முக்கியமான கடிதமோ, கள்ளநோட்டோ, நெருப்பில் பொசுக்கப்படலாம். தேடிப்

(1) II-வது பாகம் கேஸ் நம்பர் IX பார்க்கவும்.

போகும் களவுபோன மாடு, உரித்துவிடப்படலாம், அல்லது இறைச்சிக்காகக், கசாப்புக் கடையில் விற்கப்பட்டு கொல்லப்படலாம். (2) ஆகையால் கண்டுபிடிக்க வேண்டிய கேசில், நமக்குக் கிடைக்கும் துப்புகளை பிறகு கவனிப்போம் என்றெண்ணி, காலதாமதம் பண்ணுமல், இரவு பகல் வித்தியாச மில்லாமல், வெகு கவனமாயும் சுரு சுருப்பாயும் வேலை செய்தால்தான், அப்படிப்பட்ட துப்புகளால், நாம் கேஸைக் கண்டுபிடிக்கும் பிரயோஜனத்தை அடையலாம். (3) கேஸை கண்டு பிடிப்பது, பந்தயம் கெலிப்பதற்காக ஓடும் ஓட்டத்தைப் போன்றது. ஓடும் திறமை நன்கமைந்திருக்கும் ஒருவன், நடுவில் கொஞ்சம் இளைப்பாரி ஓடலாம் என்று நினைத்தானுல், அவ்வளவு திறமையில்லாதவன் நிற்காமல் ஓடி பந்தயத்தை கெலித்து விடுவான். அதுமாதிரியே திருடன் புத்தி குறைவுள்ளவனுகயிருந்த போதிலும், கண்டு பிடிப்பவனுடைய முயற்சிக்குறைவால், தன் குற்றத்தை மறைக்கும் தொழிலை முந்திசெய்து முடிக்கக் கூடும். ஆகையால் குற்றம் கண்டு பிடிக்கும் வேலைக்கு, ஊக்கக் குறைவு, தாமதம், அயர்வு, ஓய்வு, ஆகிய இவைகள் பெருத்த பகைகள் என நினைக்கவேண்டும்.

இதுசம்பந்தமாய் நீங்கள் அனுசரிக்க வேண்டிய ஓர் முக்கிய விஷயமுண்டு. நீங்கள் செய்யும் வேலைகளை பிறர் அறிய சொல்லாமலும், பிறருடன் வெளிப்படையாய் ஆலோசனை செய்யாமலும், முடிக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால், நீங்கள் செய்யக்கருதும் காரியம், முன்னமேயே திருடர்களுக்கு எட்டிவிடும். கூடுமானவரையில், ஏற்

(2) II-வது பாகம் கேஸ் நம்பர் II பார்க்கவும்.

(3) II-வது பாகம் கேஸ் நம்பர் XVI பார்க்கவும்.

கனவே சொல்லியிருப்பதுபோல், பேச்சைச் சுருக்கி முயர்ச்சியைப் பெருக்கவேண்டும்.

இவ்வளவு கஷ்டப்பட்டு முயன்றும் சிலசமயம், பயன் படாமல் வீண் பிரயாசையாய் முடியும். அதினால் நாம் மனத் தளர்ச்சியடைந்து, கேஸை கண்டுபிடிக்க வேண்டிய வேலை பயனற்ற வீண்பிரயாசையென்றோ, அல்லது அதில் பிரவேசிப்பதற்கு தனக்குப் போதுமான திறமையில்லையென்றோ எண்ணி அதைரியப்படக்கூடாது. தவறிப்போன ஒவ்வொரு கேஸுகளிலும், நாம் செய்த எந்தத்தவறால், கேஸுகள் பிடிபடாமல் போயிற்று என்று ஆலோசித்துணர்ந்து, பிந்தி அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், அதே தப்பிதங்கள் நேராத விதமாய் நடந்து கொள்ளவேண்டியது.

உபாத்தியாயரும் உங்கள் மேலதிகாரிகளும், அப்படி நேரிட்ட தவறுகளை, உங்களுக்கு விளங்கச்சொல்லி, இன்னம் அநேக கேஸுகளில் கண்டு பிடிப்பவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசை, எப்படி சிறுபிழைகளால், கைகூடாமல் போயிற்று என்று எடுத்துக்காட்டி,(4) அப்படிப்பட்ட தவறுதல்கள் நேராதிருக்கும் உபாயங்களை கற்றுக்கொடுப்பார்கள்.

அதிகாரம் X

துப்புச் சொல்லுகிறவர்கள்

முந்திய மூன்று அத்தியாயங்களில், கேஸுகள் கண்டுபிடிக்கும் விஷயமாய் செய்யவேண்டிய வேலைகள் இன்னதென்று சொல்லப்பட்டது. இந்த அத்தியாயத்தில், அந்த

---

(4) II-வது பாகம் கேஸ் நம்பர் IV பார்க்கவும்.

வேலைகள் முழுவதும் போலீஸ் உத்தியோகஸ்தர்களே செய்யவேண்டுமா, அல்லது பிறர் உதவியையும் கொண்டு அநுகூலப்படலாமா என்பதைக் கவனிப்போம். போலீஸ் படையிலுள்ள சிப்பந்திகள் அவர்கள் செய்யவேண்டிய வேலைக்குப் போதுமானதாக இல்லாததால், பிறர் உதவியில்லாது, எவ்வளவு சுருசுருப்பாய் வேலை செய்தாலும், தாங்கள் செய்ய வேண்டிய ஏராளமான வேலையை திருப்திகரமாய் செய்ய முடியாது. மேலும், ஓர் போலீஸ் உத்தியோகஸ்தன், எவ்வளவு கெட்டிக்காரனாயும், பொதுஜன நம்பிக்கையை சம்பாதித்தவனாயுமிருந்தபோதிலும், அவன் ஓரிடத்தில் வெகு நாள் தங்கி ஜனங்களுடன் பழகியிருந்த போதிலும், அந்த இடத்திலுள்ள நிரந்தர கிராமவாசிகளுக்குத் தங்களிருப்பிடங்களைப் பற்றி நன்றாய் தெரிந்த அளவு, அவனுக்குத் தெரிந்திருக்க முடியாது. ஆகையால் கேஸுகளை கண்டுபிடிக்கும் வேலைக்கு உபயோகமான சமாசாரங்களைத் தெரிவிக்கக் கூடிய பிறரையும், நாம் நம்முடைய வேலைக்கு அமர்த்திக்கொள்ளவேண்டுமென்று ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்குத் துப்புச் சொல்லுகிறவர்கள் என்று பெயர். அவர்களை மூன்று இனத்தினராக வகுக்கலாம். அவர்கள் இனத்திற்குத் தகுந்தவாறு போலீஸார் அவர்களுடைய ஒத்தாசையை எதிர்பார்க்கலாம்.

நல் நடத்தையும், பணமும் நிறம்பின குடித்தனக்காரர்களை, போலீஸ்காரர்கள் விதரணையுடன் கேட்டுக் கொண்டால், துப்பு கிடைக்கக்கூடும். இவர்கள் துப்புச் சொல்லக் கூடியவர்களில் முதல் இனத்தினர்கள். இவர்கள் ஒத்தாசை செய்ய வேண்டுமானால், அப்படி ஒத்தாசையைக் கோரும் போலீஸ் உத்தியோகஸ்தன், கேஸுகண்டு பிடிக்கும் வேலையில் ஊக்கமும் தேர்ச்சியுமுள்ளவனென்றும்

துப்புச் சொன்னால், அப்படி சொல்லுபவர்கள் இன்னா ரென்று அனுவசியமாய் வெளியிடமாட்டா னென்றும், நம் பும்படியாய் நடந்துகொள்ள வேண்டும். ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் வேலையில் சிரத்தையும், வேலை நன்றாய் செய்யும் திறமையும், உள்ளவனென்றும், தங்கள் பேரை அனுவசியமாய் வெளிப்படுத்த மாட்டானென்றும், நம் பிக்கையுண்டானால், அவனிடத்தில் தங்களுக்குத் தெரிந்த துப்பைச் சொல்ல வேண்டியது தங்கள் கடமை யென்று யோக்கியமான மனிதர்கள் நினைக்கிறார்கள். கோர்ட்டில் நீங்கள் சாட்சியம் சொல்லும்பொழுது, உங்களுக்கு துப்பு சொன்னது யார் என்பதை நீங்கள் சொல்லவேண்டிய அவசிய மில்லையென்று போலீஸ் 'கைட்' (Guide) ல் படித் திருக்கிறீர்களல்லவா? இந்த வகையைச் சேர்ந்த துப்பாளி கள், பணத்தை எதிர்பார்த்து போலீஸ்காரர்களுக்கு உதவி செய்கிறதில்லை. குற்றம் செய்பவர்களை விலக்கினால்தான் ஜனங்கள் நல்ல வாழ்க்கைக்கு சௌகரியம் என்ற நல்ல எண் ணத்தின் பேரிலேயே உதவி செய்ய முன் வருவார்கள். ஆனால் இவர் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களாதலால், துப் புக்களை நேரில் தெரிந்து கொள்ளாமல், தங்களைச் சார்ந்த வேலைக்காரர் முதலியவர்கள் மூலமாய்த்தான் அறிந்து கொள்ளக்கூடும். ஆகையால், போலீஸ் உத்தியோகஸ்தன் அப்படிப்பட்ட துப்புகளின் உண்மையை நன்றாய் விசா ரித்து, அதன் பிறகே அவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

குற்றம் செய்பவர்களே, துப்புச் சொல்லும், இரண்டா வது வகுப்பினர். இவர்களுக்கு உண்மையான துப்பு நன் றாய் தெரியும். ஆனால் அவர்களை அதிகமாய் நம்பி மோசம் போகக்கூடாது. போலீஸ் உத்தியோகஸ்தர்களை ஏமாற்று

வதற்கோ, அல்லது அவர்கள் தயவை சம்பாதித்து வைத்துக்கொண்டு தாங்களே குற்றம் செய்வதற்கோ, எண்ணி, தாங்கள் துப்புச் சொல்ல முன் வருவார்கள். ஆனால் திறமையுள்ள போலீஸ் உத்தியோகஸ்தன், பணம் கொடுத்து அவர்களிடம் தெரிந்து கொள்ளக் கூடிய துப்பைக் கிரகித்துக் கொண்டு, அவர்கள் குற்றம் செய்யும் போது தாக்ஷண்ணியமில்லாமல் அவர்களைத் தண்டனைக்குள்ளாக்குவார்கள். துப்புச் சொல்லும் இந்த இனத்தாரை நம்ப இடமில்லாவிட்டாலும், இவர்கள் திருடர்களுடன் பழகுவதால், இவர்களுக்குத்தான் உபயோகமான துப்புத் தெரிந்திருக்கும்.

சிலர், கேஸை கண்டு பிடிப்பதற்கு சுபாவத்தில் ஆசையுள்ளவர்களாயும், ஆனால் இந்த போலீஸ் இலாகா உத்தியோகத்தில் அமராதவர்களாயுமிருக்கிறார்கள். இவர் துப்பு சொல்லுவதில் மூன்றாவது வகுப்பினர். அவர்கள் துப்புக் கண்டு பிடிப்பதில் உண்மையாய் உழைப்பவர்கள். ஆனால் அவர்களில் பலருக்குப் போதுமான சாமர்த்தியமில்லை. மேலே சொன்ன குற்றஞ் செய்யும் துப்பாளிகளைப்போல் இவர்களுக்குக் குற்றஞ் செய்யும் பழக்கமாவது, குற்றவாளிகளின் பழக்கமாவது கிடையாது. மேலும் இந்த வேலையை சாமர்த்தியமாய் செய்யப் பயிற்சியும் கிடையாது. ஆயினும் அவர்கள் நம்பிக்கை யுள்ளவர்கள். அவர்கள் நமக்காக வேலை செய்து துப்பு கண்டு பிடிப்பதற்கு, அவர்களுக்குப் பிரதிப் பிரயோஜனமாக பணம் கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்த துப்பாளிகளுக்காக அப்படிப் பணம் செலவழிக்க ஏது பணமென்று உங்களுக்குச் சந்தேக முண்டா

கக்கூடும். இதற்காக வருஷா வருஷம் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை அளிக்கப்படுகிறது. ஆகையால் துப்பாளிகளுக்கு கொடுத்து நியாயமாய் செலவு செய்வதற்கு வேண்டிய பணம் சுலபமாய் கிடைக்கும்.

சரியான துப்பாளிகளை வெகு ஜாக்கிரதையாய் தெரிந்தெடுக்க வேண்டுமென்று மேலே சொன்னதிலிருந்து நன்கு விளங்கும். அப்படி சரியான நபர்களை நாம் அறிந்து, அவர்கள் உதவியைப் பெறுவோமானால், கேஸுகளைக் கண்டு பிடிக்கும் வேலையின் கஷ்டம் குறையும். ஓர் திறமையுள்ள போலீஸ் உத்தியோகஸ்தன், தன் சரகத்தில் பல இடங்களிலும், தகுந்த துப்பாளிகளை நியமித்துக் கொண்டு, அவர்கள் உதவியால் தன் வேலையை சுலபமாக்கிக் கொள்ளுவான். இந்த வேலைக்காக, பல இடங்களிலுமுள்ள பென்ஷன் வாங்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்பதை மறந்துவிடக் கூடாது.

ஆகையால் நீங்கள் கிராமத்திற்குப் போகும்போது, துப்பனாயிருக்கக் கூடிய நபர்கள் யார் யார் என்று தெரிந்து வந்து உங்கள் ஸ்டேஷன் ஆபீசருக்குத் தெரியப்படுத்தினால், அவர் சந்தர்ப்பம் வாய்த்தபோது அவர்களைத் தங்கள் வேலைக்கு உபயோகப்படுத்திப் பார்க்க முடியும். ஆனால் அவர்களுடன் நீங்கள் பிறர் அறியாதபடி ரகசியமாய் புழங்க வேண்டும். அப்படியில்லாவிட்டால், அந்த துப்பர்கள் எந்த திருடர்களை சிக்ஷை செய்து வைக்க உதவி செய்கிறார்களோ, அந்தத் திருடர்கள் அவர்களுக்குத் தீங்குண்டு பண்ணக் கூடும். பொதுவாய் போலீஸ் வேலைக்கு உதவி செய்யும் துப்பர்களை ஜனங்கள் மதிப்பு குறைவாய் நினைக்கிறார்கள். போலீஸ் உத்தியோகஸ்தன் தங்களுக்கு உதவி செய்

யும் துப்பர்களை அனுவசியமாய் வெளிப் படையாய் தெரிவிக்காமலிருந்தால், இந்த மதிப்பு குறைவு அவர்களுக்கு நேரிடாது.

துப்பர்களைக்கொண்டு குற்றங்களை வெளிப்படுத்தும் பழக்கம், புதிதென்று காணப்படவில்லை. திருடனைக் கொண்டு திருடனைப் பிடித்தல் என்ற முறை பழமையானதாகவே தோன்றுகிறது. (1)

அதிகாரம் XI

கலகக்கேசுகள்

போலீஸ் உத்தியோகஸ்தன், கேஸுகள் கண்டுபிடிக்கும் வேலையில் தவிர, சில சமயங்களில் கலகங்களை அடக்கும் வேலையிலும் நியமிக்கப்படுவான். கேஸுகள் கண்டு பிடிக்கவேண்டிய வேலைக்கும், கலகத்தை அடக்கும் வேலைக்கும், வெகு வித்தியாசமுண்டு. கேஸு கண்டு பிடிக்க முக்கியமாய் யுக்திவேணும். கலகத்தை அடக்க முக்கியமாய் தைரியம் வேண்டும். கேஸு கண்டுபிடிக்கும் வேலை சுருசுருப்பாய்ச் செய்யவேண்டுமென்றாலும், செய்யும் காரியத்தை யோஜித்துச் செய்ய சாவகாசமுண்டு. கலகக் கேசுகளிலே நாம் செய்யவேண்டிய வேலையைச் சடுதியில் தீர்மானம் செய்யவேண்டியிருக்கும். ஆனால் யோஜியாமல் செய்யலாமென்று நினைக்கக்கூடாது. செய்யவேண்டிய வேலையை சீக்கிரம் தீர்மானித்தபோதிலும், சாவகாசமாய் யோஜனை செய்து தீர்மானித்தால், எவ்வளவு பிழையறச் செய்ய வேண்டுமோ அவ்வளவு தெளிவுள்ளதாக யிருக்கவேண்டும்.

---

(1) II-வது பாகம் XIV-வது கேஸைப் பார்க்கவும்.

பிறகு மேலதிகாரிகள் அமரிக்கையாய் யோஜிக்குமளவில், அவசரத்தில் கலகத்தை யடக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யெல்லாம் ஒப்பத்தகுந்தவைகளாக இருக்கவேண்டும். ஆகையால் இந்த வேலையைச் செய்ய முயலும், போலீஸ் உத்தியோகஸ்தர்களுடைய ஆபத்தான நிலைமையைக் கொஞ்சம் கவனியுங்கள். தக்க முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால், தனக்கே ஆபத்தாய் முடியக்கூடும். மேலதிகாரிகளும் வேலையை சரிவரச் செய்யவில்லை என்று குறை கூறக்கூடும். எடுத்துக்கொண்ட முயற்சி, அளவுக்கு மிஞ்சியது என்று தீர்மானிக்கப் பட்டால், அப்பொழுதும் போலீஸ் உத்தியோஸ்தரை குறைவு கூறக்கூடும். மேலும் கலகத்தை அடக்குங்கால், கலகம் செய்தவர்களை துப்பாக்கியால் சுடுவதற்கு உத்தரவு கொடுக்கவேண்டிய அவசிய மிருக்கலாம். அப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில், சுடப்பட்டவர்கள், போலீஸ் மேலதிகாரிகள், பொதுஜனங்கள், ஆகிய இம்மூவரும், சுடவேண்டியது அவசியம்தான் என்றும், எவ்வளவுவரை அவசியம் குண்டுகள் உபயோகப்படுத்தவேண்டுமோ, அதற்குமேல் ஒரு குண்டுகூட உபயோகப்படுத்தப்படவில்லை என்றும் அபிப்பிராயப் படவேண்டும். இல்லாவிட்டால், போலீஸ் உத்தியோகஸ்தன் செய்கையை பற்றி, கோர்ட்டில் கேஸு மூலமாகவோ, சட்டசபையில் கேழ்வைகள் மூலமாகவோ, கிளர்ச்சி ஏற்படக்கூடும். (1) ஆகையால் இவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளான வேலையைச் செய்யத் துவக்கும் போலீஸ் உத்தியோகஸ்தருக்கு உதவி செய்யவேண்டிய சிப்பந்திகளுக்குள், உங்களில் யாராவது இருக்க நேர்ந்தால், நீங்கள் எவ்வளவு பயபக்தியுடன் அப்படிப்பட்ட அதிகாரியின் உத்தரவுக்கு கணமேனும் தாமதி

---

(1) II-வது பாகம் கேஸு நம்பர் XVIII பார்க்கவும்.

யாமலும், வரக்கூடிய ஆபத்தை கவனியாமலும், துணிகரமாய் கீழ்ப்படிய வேண்டுமென்பது, இப்போது உங்களுக்கு நன்ருய் விளங்கும். அப்படிச் செய்யத்தவறினல் உங்களுக்கும், உங்களுக்குத் தலைவராய் அங்குவந்த போலீஸ் உத்தியோகஸ்தருக்கும், கலகம் செய்பவரால் கெடுதிநேரிடலாம். அப்படி நேரிடா விட்டாலும், உங்கள் அதிகாரிக்கும், நீங்கள் சேர்ந்து வேலைசெய்யும் போலீஸ் இலாகாவுக்கும், கௌரவம் குறையும். மேலும் கோழைத்தனத்திஞலோ, அல்லது வேறுகாரணத்தாலோ, உத்தரவை சரிவர கீழ்ப்படிந்து நடக்கத்தவறிய போலீஸ் சிப்பந்திக்கு தண்டனையும் கிடைக்கும்.

ஆனல் நீங்கள் கேழ்க்கக் கூடியது ஒன்றுண்டு. அதாவது உங்களுக்கு வரக்கூடிய ஆபத்தைக் கவனியாது, உத்தரவைக் கீழ்படியுங்கால், கலகத்தில் உயிரை யிழந்து விடநேரிட்டால், உங்களுடைய குடும்பத்திற்கு ஆதரவற்றுப் போகுமே; அப்படி குடும்பத்தாரை நிராதரவாய் விட்டு இறப்பது தகுதியா என்று யோஜிக்கலாம். அப்படி நிராதரவாய் குடும்ப மிருப்பது சரியல்ல என்று, உங்களை நியமித்து வேலைவாங்கும், கெவர்ண்மெண்டாருக்கு நன்ருய் தெரியும். ஆகையால் உங்கள் குடும்பத்தாரை காப்பாற்ற நீங்கள் என்ன உதவி செய்யக்கூடுமோ, அதற்கு மேற்பட்ட உதவி அவர்களுக்குக் கிடைக்கும்படியாய் கெவர்ண்மெண்டார் உத்தரவு செய்வார்கள். அது அவர்களது மேலான கடமை. இம்மாதிரி நடைபெறுவது என்பதற்கு அறிகுறியாக, அடிக்கடி போலீஸ் கெஜட்டில், அப்படி இந்த இலாகா வேலையைச் செய்யும் பொழுது இறக்க நேரிட்ட சிப்பந்திகளுக்குக் குடும்ப பென்ஷன் கொடுப்பதைப் பிரசுரம் செய்வதைக்காணலாம். மேலும் அப்படிப்பட்ட ஆபத்தான

காலங்களில், தன் உயிரைப் பாராட்டாது, கலகங்களை அடக்குவதற்குத் தகுந்த உதவி வெகு தைரியத்துடன் செய்பவர்களுக்கு, சக்கரவர்த்தியால் கொடுக்கப்படும் பதக்கம் (**Kings Police Medal**) முதலிய சன்மானங்களும் கிடைக்கும். ஆகையால், இப்படி கலகம் பெருத்த குழப்பம் முதலிய நேர்ந்தகாலத்தில், அவைகளை அடக்குவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களும், அவருக்கு உதவி செய்யப் போகும் போலீஸ்காரர்கஸ்ம், தங்கள் இலாகாவின் புகழையும், பொது ஜன நன்மையையும் கவனித்து, தைரியமாய் நடந்தார்களானல், வெகுமதியும் கீர்த்தியும் கிடைக்கும். அப்படியல்லாது தங்கள் சுயநலத்தையும், தேகத்தின் பாதுகாப்பையும், கவனிப்பார்களானல், கெட்டபெயரும் தண்டனையும் தான் கிடைக்கும். கலகத்தில் கும்பலாயிருக்கும் கலகக்காரரை சுடநேரிட்டால், அங்குள்ள தலைமை உத்தியோகஸ்தரது, உத்தரவில்லாமல் யாரும் சுடக்கூடாது. அப்போது என்னென்ன விஷயங்களைக் கவனிக்கவேண்டுமென்று, இந்த இலாகா உத்தரவை "B" அநுபந்தத்தில் பார்க்கவும்.

அதிகாரம் XII

தண்டனை அடைந்தவர்களை நடத்தும் விதம்.

ஏதாவது ஒரு குற்றத்தை செய்ததாக ருஜுவாகி தண்டிக்கப்பட்டு, ஜெயிலில் சிலகாலமிருந்து விடுதலையானவர்களை, பொதுவாய் ஜனங்கள் அவமரியாதையாய் நடத்துவதனலேயே, அப்படிப்பட்ட குற்றவாளிகள் குற்றம் செய்வதை ஒழித்து, நியாயமான வழியில் ஜீவிக்கும்படியாய்

திருந்துவதில்லை. ஒருவன் ஏதுகாரணத்தாலோ ஒரு குற்றத்தைச்செய்து, அதற்காக அவன் ஜெயிலிலிருந்து விடுதலையாய் வந்தால், குற்றம் செய்ததற்கு தக்க சிக்ஷை அடைந்து விட்டதால், அதற்குப் பிறகு அவனை குற்றமற்றவனாக பாவிக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் அவனை அடிக்கடி குற்றவாளியைப்போல் பல பேர் நடுவில் நடத்துவதால், அவனை மறுபடியும் மறுபடியும் தண்டிக்கிறது போலாகும். தண்டனையைப் பற்றிய பொதுவிதி என்னவென்றால், ஒரு குற்றத்திற்கு ஒரே தரம்தான் தண்டிக்கவேண்டுமென்பது. இம்மாதிரி குற்றவாளிகள் ஜெயிலிலிருந்த பிற்பாடும், அவர்களைப் பலபேர் நடுவில் இழிவாக நடத்துவதால், முன் சொன்ன கொள்கைக்கு விரோதமாய், ஒருவனை ஒரே குற்றத்திற்கு பலமுறை சிக்ஷை செய்வது போலாகும்.

மேலும் குற்றம் செய்தவர்கள் எல்லோரும் பிறந்தது முதல் அயோக்கியர்கள் என்றும், அவர்கள் எவ்வளவு காலமானாலும், நல்வழியில் திருந்த மாட்டார்கள் என்றும் நினைப்பது வெகுதப்பு. யோக்கியர்களே சிலசமயங்களில் குற்றத்தை செய்ய உடன்படும்படி நேரிடுவதுமுண்டு. அவர்கள் தான் தவறிசெய்த குற்றத்தைப் பற்றி உண்மையில் மனவருத்தப்பட்டு, மறுபடி அப்படிப்பட்ட குற்றமுள்ள செய்கையைச் செய்யக்கூடாதென்று மனதில் தீர்மானித்துக் கொள்வதுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களை பொதுவாய் ஜனங்களும் மரியாதையுடனும் பிரியத்துடனும் நடத்தினால், அவர்கள் நல்வழிப்படுவது நிச்சயம். (1) அப்படி யில்லாமல், முந்தி தவறிச்செய்த ஓர் தப்பை மறவாமல் அவர்களை அயோக்கியர்களென்று மரியாதைத் தாழ்வாய் நடத்தினால், அவர்கள் மனமுடைந்து,

(1) II-வது பாகம் கேஸ் நம்பர் I பார்க்கவும்.

எவ்வளவு உண்மையுடன் தாம் நடந்த போதிலும் உலகம் தம்மை நம்பப்போகிறதில்லையென்று நினைத்து, தங்களுக்கு யோக்கியமாயிருப்பதில் எவ்விதலாபமும் கிடைக்கப்போவதில்லை என்று எண்ணி மறுபடியும், குற்றம் செய்யும் தொழிலையே கைக்கொள்ளக்கூடும். ஆகையால் நாம் தெரிந்து கொள்ளக்கூடியது என்னவென்றால், குற்றங்கள் நடப்பதற்கு குற்றவாளிகள் மாத்திரம்தான் ஜவாப்தாரிகள் என்பது சரியல்ல. அப்படிப்பட்ட குற்றவாளிகளை, குற்றம் தீர்ந்த பிற்பாடு நாம் நடத்தும் விதத்தால், குற்றத்தை பெருக்கவோ சுருக்கவோ கூடுமென்றும், குற்றம் தீர்ந்தவர்களை, நாம் சரிவர நடத்தாததால், நாமே ஜாஸ்தி குற்றம் நடக்கும்படி செய்ய ஹேதுவாயிருக்கின்றோம் என்றும், நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது.

இப்படி குற்றவாளிகளை சரிவர நடத்தவேணுமென்ற எண்ணம், நாகரீக முதிர்ச்சியால் பெருகி, ஒவ்வொரு முக்கிய பட்டணங்களிலும், விடுதலையான குற்றவாளிகளின், க்ஷேமத்தைக்கவனிக்க, அநேக அதிகாரிகளும் உபகாரிகளும் ஏற்பட்டு, அவர்களுக்கு தொழில்சாலை முதலிய சௌகரியங்களை ஏற்படுத்தி, அவர்கள் நியாயமான வழியில் சம்பாதித்து ஜீவிக்கத்தக்க உபாயங்களை தேடி வருகிறார்கள். இவ்வித முயர்ச்சியை கெவர்ன்மெண்டாரே ஆவலாய் ஆதரித்து வருகிறார்கள்.

ஒரு மனிதனுக்கு ஒரு கொடிய நோய் உண்டானால், அவனிடத்தில் எல்லோரும் இரங்கி, அவனுடைய நோய் நீங்கக்கூடிய ஔஷதங்களைக் கொடுத்து உதவுகிறார்களேயொழிய, அவனை மனிதர்களில்லாத இடத்தில் கொண்டு போய்த் தள்ளி விடுவதில்லை. அம்மாதிரியே குற்றம் செய்யும் ஒருவனை, நாம் அவனுக்குக் குற்றம் செய்யும் சீக்கு

வந்தவனுக பாவித்து அந்த சீக்கு நீங்கும் உபாயங்களை அன்புடன் தேடவேண்டுமே யல்லாது, அவனை நம்முடைய கூட்டத்திலிருக்கத் தக்க யோக்கியனல்லன் என்று தள்ளி விடக் கூடாது. வியாதி என்பது தேகத்தைப் பற்றிய சீக்கு. குற்றம் செய்வது மனதை (எண்ணத்தை)ப்பற்றிய சீக்கு. இவ்விரண்டுவிதவியாதிகளுக்கும் தக்க ஔஷதமுண்டு.

இந்த விஷயத்தை மேலே சற்று விரிவாய் சொல்லி யிருப்பதற்குக் காரணம், போலீஸ் இலாகாவிலுள்ள உங்களுக்கு, குற்றவாளிகளின் தன்மையை அறிந்து அவர்களை நியாயமாயும் கௌரவமாயும் நடத்தும் குணம் படிய வேண்டுமென்பதே. இப்போது வெளியில் ஸ்டேஷன்களிலிருக்கும் பழைய போலீஸ் சிப்பந்திகளில் அநேகருக்கு இந்த குணமில்லை என்பதைத் திட்டமாய்ச் சொல்லலாம். முக்கியமாய் குற்றம் சாட்டப்பட்ட எதிரியை, குற்றவாளியாக பாவித்து, அவர்களை நடத்தும் மாதிரியிலும், அவர்களுடன் பேசும் விதத்திலும், அவர்கள் வருத்தம் அடையும்படி செய்வது வெகு சகஜம். ஆனல் இது ஒரு பெருத்த தவறு. ஏனெனில் கேஸ் விசாரணையில், அவன் பேரில் சுமத்திய குற்றம் பொய்யென ருஜுவாகலாம். அல்லது சாக்ஷியம் போதாமையால் அவன் குற்றத்திலிருந்து விடுதலை யடையலாம். அப்படிப்பட்ட ஓர் குற்றம் சாட்டப்பட்ட மனிதனை, மரியாதைத் தாழ்வாய் நடத்தியிருந்தால், அவன் பல பேரிடமும் போலீசார் நடத்தையைப் பற்றிக் குறை கூறக் கூடும். அவன் குற்றத்திலிருந்து விடுதலையானவனுனதால், அவனிடத்தில் ஜனங்களுக்கு ஒரு இரக்கமும், போலீஸ்காரர்கள் பேரில் அருவருப்பும் உண்டாகக்கூடும். இது இந்த இலாகாவின் நல்ல பெயரைக் கெடுக்கும் ஓர் ஆக்ஷேபனையுள்ள நடத்தை.

குற்றவாளி யென்று ருஜுவாய் சிக்ஷயடைந்த பிறகு, சில போலீஸ் சிப்பந்திகள் அப்படிப்பட்ட கைதிகளுடனும், அவர்களை வெளியில் பார்க்கும் ஜனங்களுடனும், அவர்களைப் பற்றி உதாசீனமாய் பேசுவது சகஜம். இது ஓர் பயனற்ற செய்கையாயிருந்த போதிலும், அதினால் விளையும் கெடுதி அநேகம். கைதியும் ஜனங்களும் அப்படிப் பட்ட போலீஸ் சிப்பந்திகளைப் பற்றியும் அவர்கள் செய்கிற தப்பினால், பொதுவாய் போலீஸ் படையைப் பற்றியும், ஓர் இரக்கமற்ற கூட்டத்தாரென்றும், பிறர்படும் துன்பத்தைக் கொண்டு சந்தோஷமடையும் கடின நெஞ்சுடையவர்களென்றும், தீர்மானிப்பார்கள். மேலும் இப்படிப்பட்ட அகௌரவமான நடத்தையாலும், வார்த்தையாலும் யாருக்கும் எவ்வித நன்மையும் கிடையாது. தீமையையே விளைக்கும் ஓர் பயனற்ற வீண் பிரயாசை.

அன்றியும் நீங்கள், கிராமங்களுக்கு பீட் போய் வரும்போது, விடுதலையாயிருக்கும் மனிதர்களைப்பற்றி விஜாரித்து வரச் சொல்லுவார்கள். அல்லது நீங்களே அப்படிப் பட்டவர்களது தற்கால நடத்தையைப் பற்றி விஜாரிப்பது நலம். அப்படிப்பட்ட விசாரணைகளில் அவர்களுடன் கலந்து பேசி, அவர்களுக்குத் தகுந்த வேலை கிடைக்கிறதா, அவர்களுக்கு போதுமான வரும்படி யுண்டா, என்று அவர்களுடைய யோக க்ஷேமங்களில் கவலை யுள்ளவர்களாக ஆதரிப்புடன் விஜாரித்து, அவர்களுக்கு வேலை ஏற்பாடு செய்து கொடுத்தல் முதலிய உதவிகளை, தங்களால் இயன்றவரை செய்து, தாங்கள் அவர்களிடத்தில் பாராட்டும் அன்பினாலும் சிரத்தையினாலும், அவர்களே இனி குற்றம் செய்யும் தொழில் இழிவுள்ள தென்று நினைக்கும்படி செய்யவேண்டும். அப்படியில்லாமல் அதிகார தோரணையாய் அவனை "நேற்றி

ரவு எங்கே போயிருந்தாய், அந்த ஊரில் நடந்த கொள்ளை யில் நீ சம்பந்தப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது. பத்திர மாய்ப் பிழை, இல்லாவிட்டால் ஏதாவது குற்றத்தில் உன்னை மாட்டிவிட்டு, மறுபடியும் மண்ணுக்குப் போட்டு விடுவேன்'' என்ற அர்த்தமில்லாத பேச்சுகளை, அவர்கள் முன் பிதற்றுவதால், அவர்களும் திருந்தமாட்டார்கள். இந்த இலாகாவுக்கும் நல்ல பெயர் கிடைக்காது. ஆகையால் சிக்ஷை யடைந்தவன் நம்மைப்போல் ஒரு மனிதவர்க்கத்தை சேர்ந்தவனென்றும், அதிர்ஷ்டக் குறைவால், அவன் நட வடிக்கை வழுவி நடக்க ஏற்பட்டதென்றும், அவனிடத்தில் உருக்கத்துடனும், பச்சாத்தாபத்துடனும், நடந்து கொள் வது அவனுக்கும், இந்த போலீஸ் இலாகாவுக்கும் நன்மை யை விளைவிக்கும்.

அதிகாரம் XIII

போலீஸ் இலாகாவின் போது ஜனமதிப்பு.

இந்த இலாகா சிப்பந்திகளைப் பற்றி, ஜனங்களுக்கு அவ்வளவு திருப்திகரமான அபிப்பிராயம் கிடையாது என் பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதிலும் முக்கியமாய் கீழ்தர உத்தியோகஸ்தரைப்பற்றி அதிருப்தி அதிகம். அதற்கு காரணம் உண்டா என்பதை சற்று கவனியுங்கள்.

சில போலீஸ் சிப்பந்திகள் இந்த இலாகாவுக்கு கெட்ட பேர் வரும்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதில் ஆக்ஷே பணைகிடையாது. ஜனங்கள் போலீஸ் உத்தியோகஸ்தரில் எவன் யோக்கியன் எவன் கெட்டவன் என்று கவனித்து, தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுகிற வழக்கமில்லை. இந்த

இலாகாவின் சில சிப்பந்திகளின் ஒழுங்கீனமான நடவடிக்கைக்கு, இந்த இலாகாவிலுள்ளவர்கள் எல்லாரையும் ஜவாப்தாரி ஆக்குகிருர்கள். ஆகையால் உங்களில் ஒவ்வொருவரும் ஒழுங்காய் நடந்துகொள்வது மட்டும் போதாது. உங்கள் முயற்சியால், மற்றவர்களும் யோக்கியமாய் நடந்துகொண்டால்தான், இந்த போலீஸ் படையைப் பற்றிய குறைவான அபிப்பிராயம் நீங்கி புகழ் ஏற்படும். கொஞ்சகாலத்திற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும், தற்காலத்தில் இந்த இலாகாவிற்கு கண்ணியம் ஜாஸ்தி உண்டு. இதனுலேயே நாம் திருப்தியடைந்து விடுவதில் பயனில்லை. நீங்கள் இந்த போலீஸ் வேலைக்காக பழகி ஸ்டேஷனுக்குப் போய் வேலைசெய்ய ஆரம்பித்த பிறகு, உங்களது நல்ல நடத்தையால், இந்த இலாகாவிற்கு எவ்வித குறைவான பெயருமில்லாமல் மிக்க கௌரவமுள்ள இலாகா என்று பெயருண்டாக வேண்டும். அம்மாதிரியான நன்மை நீங்கள் இந்த இலாகாவிற்கு உண்டு பண்ணுவீர்களானுல் தான் இங்கு பள்ளிக்கூடத்தில் உங்களுக்கு பிரயாசையுடன் கற்பித்ததின் பலனை நீங்களும், உங்களை நியமித்த அதிகாரிகளும், அடைந்ததாக ஏற்படும்.

வெகுகாலமாய் ஏற்பட்ட அதிருப்தியை, எப்படி நாங்கள், எங்களுடைய நல்ல நடத்தையால், மாற்றக்கூடும் என்று நீங்கள் யோஜிக்கக்கூடும். கணக்காய் ஒரு நூற்றுண்டுக்கு முந்தி, (1829) லண்டன் போலீஸ்படை நியமிக்கப்பட்டது. "லண்டன்" என்பது பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் தலை நகரம் என்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயம். அப்படி நியமிக்கப்பட்ட பிறகு சிலகாலம் வரையில், அந்தப் படையை ஜனங்கள் பிரியமாகக் கொண்டாடவில்லை. அந்தப் படையை துஷ்டர்கள் அடங்கிய ஒரு கூட்டமாக

நினைத்தார்கள். ஆனால் நாளடைவில் அந்தப் படையிலுள்ளவர்களது நன்னடக்கையினால், அவர்களுக்கிருந்த குறைவான பெயர் நீங்கி, அவர்கள் யாவராலும் கொண்டாடப்பட்டார்கள். இப்போது பலநாட்டின்கண்ணுள்ள போலீஸ் படைக்குள், இந்த லண்டன் போலீஸ், வேலைத்திறத்திலும், நன்னடத்தையிலும், முதல்தரமானவர்களாக எண்ணப்படுகிறார்கள். நீங்களும் அம்மாதிரியே, இங்கே உங்களுக்குக் கற்பிக்கும் விஷயங்களை அனுசரித்து நடப்பீர்களானால், இந்த போலீஸ் இலாகாவுக்கும், லண்டன் போலீஸுக்கு ஏற்பட்டுள்ள, மேம்பாடான புகழ் ஏற்படக்கூடும்.

இனி என்ன காரணத்தால், இந்த போலீஸ் இலாகாவுக்கு, பொதுஜன வாஞ்சை யில்லாமலிருப்பது என்பதை கவனிப்போம். அதற்கு பலவித காரணங்க ளிருந்தபோதிலும், பொதுவான ஒரு காரணமுண்டு. அதாவது, போலீஸ் சிப்பந்திகள், தாங்கள் ஜனங்கள் சௌகரியத்திற்காக ஏற்படுத்தப்பட்ட வேலைக்காரர்கள் என்று எண்ணாமல், ஜனங்களுக்கு அதிகாரிகள் என்று எண்ணுவதே. இந்த எண்ணம் காரணமாகத்தான், பலவித தப்புகள் செய்யப் படுகின்றன. ஒரு போலீஸ் ஜவானை ஒரு மனிதன் குடியிருக்கும் இடத்தையோ, அல்லது ஒரு தெருவிருக்கும் இடத்தையோ கேட்டால், மரியாதையுடன் அவர்களுக்குப் பதில் சொல்லி அவர்களுக்கு உதவி செய்யவேணுமே யொழிய, முரட்டுத்தனமாய்ப் பதில் சொல்லக் கூடாது. கூட்டங்களை விலக்கும் போதும், போக்குவரத்துகளை ஒழுங்கு படுத்தும்போதும், செய்கையினாலாவது, பேச்சினாலாவது, முரட்டுத்தனமாயாவது, மரியாதைத் தாழ்வாயாவது நடந்து கொள்ளக்கூடாது. உங்களிடத்தில் ஒப்புவிக்கப் பட்ட கைதிகளைப் பற்றியும், கண்ணோக்கம் வைக்கவேண்டியவர்களைப் பற்றியும், அனாவசியமான வார்த்தைகள் ஒன்றும் பேசக்கூடாது. இம்மாதிரி இன்னம் அநேக சந்தர்ப்பங்களைச் சொல்லலாம். முக்கிய

மாய் நாம் அறிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால், நாம் மற்றவர்களுடன் பேசுவது எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்கு மேல் ஒரு வார்த்தை கூட பேசக்கூடாது. அப்படிப்பேசுவதும், மரியாதையுள்ள வார்த்தையாயிருக்கவேண்டும்.

பல சமயங்களில் நாகரீக மற்ற பேச்சினால், இந்தப் படைக்குக் குறைவு உண்டாக்குவது தவிர, இன்னம் பலவிதமான ஆக்ஷேபனை யுள்ளவும், குற்றம் பொருந்தியதுமான செய்கைகளாலும், இந்த இலாகாவின் பெயரை, இந்த படையிலுள்ளவர்கள் கெடுக்கிறார்கள்.

லஞ்சத்திற்கு ஆசைப்பட்டு செய்ய வேண்டிய வேலையை செய்யாமல் விட்டுவிடுவதும், செய்ய வேண்டாத வேலையைச் செய்வது முண்டு.

இம்மாதிரி ஜவான்கள் ஒழுங்கீனமாய் நடந்து கொள்வதற்கு, டவுன் நியூஸென்ஸ் ஆக்ட் முக்கியமாய் இடங்கொடுக்கும். இப்படிப்பட்ட கேஸுகளில் முக்கியமாய் குற்றம் நடக்காமல் நீங்கள் தடுக்கப் பிரயாசை எடுப்பது நலமேயொழிய, குற்றம் செய்யும்வரை தாமதித்திருந்து, பிறகு குற்றம் சாட்டுவது அனாவசியம். அப்படிச் செய்வதால் இந்த இலாகாவுக்குச் சுலபத்தில் பெயர் கெடும். இந்த மாதிரியான கேஸுகளில், மேல்சொல்லியபடி லஞ்சம் வாங்கிக்கொண்டு ஏதாவது நீங்கள் செய்வீர்களானால், நீங்கள் வேலையை இழக்க நேரிடுவதுடன், கோர்ட்டில் தண்டனைக்கு முள்ளாவீர்கள்.

தவிர நியாயஸ்தலத்திலும், மற்ற இடங்களிலும், நீங்கள் சொல்லும் வாக்குமூலங்களில், அறிவில்லாத சிலர் பேச்சைக் கேட்டு, கேஸுகளுக்கு பலமுண்டுபண்ணுவதாக

னைத்து, பொய்கலந்த வாக்குமூலங்கள் கொடுக்கக்கூடாது. இப்படிச் செய்வதால், இந்த இலாகவிலுள்ளவர்களிடத்தில், உண்மையே கிடையாதென்று ஜனங்கள் அபிப்பிராயப்படுவார்கள். உள்ளது உள்ளபடி சொல்வதால், கேஸுகள் பலமடையுமே யொழிய, பலங்குறையாது. அப்படியே கேஸுகளில் சில விடுதலையானாலும், போலீஸ் இலாகாவின் புகழ்ச்சி பெருகும்.

இந்த இலாகாவின் மதிப்பு குறைய, இன்னொரு காரணமுண்டு. பிரபலதுஷ்டர்கள் என்று நன்றாய்தெரிந்தவர்களை, கஷ்டப்பட்டு அவர்கள் அடிக்கடி செய்யும் குற்றங்களில், உண்மையான ருஜுவால், சிக்ஷை செய்துவைக்க தக்கபிரயாசை எடுத்துக்கொள்ளாமல், அவர்கள் வாஸ்தவமாய் செய்யாத கேஸுகளில், அவர்களை குற்றவாளியாக்கி, தப்பு சாக்ஷியங்களால், அவர்களை சிக்ஷை யடைவிக்கச் செய்வது. இப்படிச் செய்தல் இப்போது வெகு குறைவு என்பதை ஒப்புக்கொள்ளவேண்டி யிருந்தாலும், எப்போதாவது ஒரு குற்றம் அப்படி ஒருவன்பேரில் சாட்டப்பட்டால், இந்த இலாகாவின் மதிப்புக்கு வெகு ஹானிவரும்.

இவைகளெல்லாம் போதாதென்று, சில போலீஸ் சிப்பந்திகள், கக்ஷிகளுள்ள ஊரில், ஒரு பக்கத்தில் சேர்ந்துகொண்டு, ஒருதலைப் பக்ஷமாய் வேலை செய்வதால், தங்கள் மதிப்பையும் செல்வாக்கையும் இழந்து, கக்ஷியில் சம்பந்தப்பட்டவர்ளாக பாவிக்கப்பட்டு, தங்களை உத்தியோகத்தில் அமர்த்திய இந்த இலாகாவின்பேரில், வீண்பழி சுமரும்படியாய் செய்கிறார்கள்.

அதிகாரம் XIV

போதுஜன மதிப்பை சம்பாதிக்கும் வழி

முந்திய அத்தியாயத்தில், எப்படிப்பட்ட தவறுகளால் போலீஸ் இலாகாவுக்கு மதிப்பு குறைகிறது என்பதை எடுத்துச் சொன்னோம். இந்த அத்தியாயத்தில், என்னென்ன செய்தால் இந்த இலாகாவின் மதிப்பு உயருமென்பதை எடுத்து சொல்லப்படும்.

ஏற்கனவே முந்திய அத்தியாயத்தில் சொல்லியபடி, போலீஸ் சிப்பந்திகள் பொதுஜன நன்மைக்காக நியமிக்கப் பட்ட ஊழியர்கள் என்று நினைத்து, அம்மாதிரி ஜனங்களுடன் நடந்து கொள்ளவேண்டியது. ஜனங்களை அதிகாரம் செய்து அடக்கி ஆளுவதற்காக நியமிக்கப்பட்ட வெகு அந்தஸ்து வாய்ந்த உத்தியோகஸ்தன் என்று நினைத்து, ஜனங்களை தங்கள் வேலைக்காரர்கள் போல் பாவிக்கும் அறிவீனத்தை, அடியோடு விட்டுவிட வேண்டியது.

போலீஸ் உத்தியோகஸ்தன் சட்டப்படி கவனிக்கக் கூடியது இன்னதென்றும், அவனுக்கு அதிகார மில்லாதது இன்னதென்றும், எல்லா ஜனங்களுமறிய மாட்டார்கள். அதினால் அவர்களுக்கு சம்பந்த மில்லாத விஷயங்களைக் கூட அவர்களிடத்தில் குறைகூற நேரிடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், அவர்களுக்குத் தன்னாலியன்றவரை இவ்விதம் செய்தால் நியாயம் கிடைக்கு மென்று சொல்லி யனுப்புவது நலமேயன்றி, அவர்களுடைய அறியாமைக்காக, அவர்களை கடிந்து அப்புறம் போக விடக் கூடாது.

போலீஸ் உத்தியோகஸ்தன் பிரவேசிக்கக் கூடிய விஷயத்திலும், அல்பகேஸுகளைக் கூட வாதி பெரிதாக

நினைக்கக் கூடும். ஏனெனில், அவனுக்கு அதில் அதிக சிரத்தை யிருப்பதுடன், அவனுக்கு தாரதம்மியம் தெரியும் படி பல கேஸுகளின் அநுபோகமிராது. அவனுடைய கேஸு அற்பமானதென்று அவனுக்கு அறிவிக்க முயலுவ தைக் காட்டிலும், முக்கியமானதாய் நாமும் பாவிப்பதாக நடந்து கொள்ளுவதில், அவன் திருப்தி அடைவான். மேலும் எல்லா கேஸுகளிலும் தகுந்த சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியது போலீசாரது கடமை.

ஜனங்களில் சிலர், தங்களுக்கு அயலாரால் நேரிடும் அற்ப சங்கடத்தையும் பெரிதாகப்பாராட்டி, பக்கத்திலுள்ள போலீஸ் உத்யோகஸ்தனை, உடனே வந்து கவனித்து தங்கள் சங்கடத்தை நீக்கும்படி, வேண்டிக்கொள்வார்கள். அவ்வளவு அவசரமாய் கவனிக்கவேண்டிய வேலையல்ல வென்று தோன்றினாலும், அம்மாதிரி அவர்களுக்குச் சொல்லி அதிர்ப்தி செய்வதிலும், தாமதியாமல் அவர்க ளிஷ்டப்படி சென்று, தன்னாலியன்ற அளவு, அவர்களுக்கு ஒத்தாசை செய்தல் நலம். அப்படி செய்தால் ஜனங்கள் சந்தோஷமடைவார்கள்.

மேலும் அப்படி ஒத்தாசை செய்வதில், சிலபோலீஸ் உத்தியோகஸ்தர்கள், பெரும்பதவி அல்லது செல்வமுடைய வர்கள் விஷயத்தில் சுருசுருப்பும், அப்படியில்லாத சாமா னியர்கள் விஷயத்தில் கவனக்குறைவும் காட்டி, நடந்து கொள்ளுவதுண்டு. இப்படிசெய்தால்தான் இந்த இலாகா வின் மதிப்பு குறையும். அம்மாதிரியான வித்தியாசம் தோ ன்ற நடந்து கொள்வது, போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு அழகல்ல. அதற்கு மாறாக, சாமான்னியர்கள் விஷயத்தி லும், குறைவு படாத சிரத்தையுடன் நடந்துகொண்டார்க ளானால், அவர்களை ஜனங்கள் நன்கு மதிப்பார்கள்.

எது விஷயத்திலாவது விசாரணை செய்யவேண்டிய போலீஸ் உத்தியோகஸ்தன், விசாரிக்க வேண்டியவர்களிருக்கும் இடம் தேடிச்செல்லாமல், தானிருக்கும் இடத்திற்கு அவர்களைத் தருவிக்கிற தண்டு. அப்படி வரவேண்டிய சிலர் நியாயமான காரணத்தாலோ, அல்லது கௌரவம் பாராட்டுவதனுலோ, விசாரணை செய்பவர்களை வந்து விசாரிக்கச் சொல்லுவதுண்டு. இதைச் சில போலீஸ்சிப்பந்திகள், தங்களுக்கு ஓர் அந்தஸ்து குறைவாக நினைப்பதுண்டு. இது அறிவீனம். ஸ்தலத்தில்போய் விஜாரிப்பதினுல், வெகு விஷயங்கள் நன்ருய் விளங்கும். ஜனங்களை போலீஸார் தெரிந்து கொள்ளுவதற்கும், போலீஸ்காரர்களின் வாஸ்தவ மதிப்பை ஜனங்கள் அறிந்து கொள்ளுவதற்கும், அப்படி செய்வதே சாதகமாயிருக்கும். இதனுல் இந்த இலாகாவின் மதிப்பு உயரும்.

ஒரு ஸ்டேஷன் சரகத்திலுள்ள ஜனங்களுள் ஒவ்வொருவரது சுகதுக்கங்களை நன்ருய் அறிந்து, அவர்களை சந்திக்கும்போது அவர்களிடத்தில் அவர்கள் யோகக்ஷேமங்களை விஜாரிக்கவேண்டும். அப்படிச் செய்வதால் அவர்கள் தங்கள் விஷயத்தில் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் எடுத்துக்கொள்ளும் சிரத்தையைப் பற்றி சந்தோஷமடைவார்கள். போலீஸ் உத்யோகஸ்தனுக்கும், கிராமங்களில் நடக்கும் விஷயங்கள் அப்போதைக்கப்போது தெரியும். ஜனங்களுடன்நெருங்கிப்பழகும் தன்மை போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு இன்றியமையாத குணம்.

பொதுவாய் ஜனங்களுடைய மதிப்பைச் சம்பாதிக்க விரும்பும் போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு, அடியிற்கண்ட குணங்கள் நிறம்பி யிருப்பதாக, ஜனங்களுடன் பழகும்போது, நடித்துக் கொள்ளவேண்டும். அவைகள் அடக்கம், பச்சாத்தாபம், பிறர் எண்ணத்திற்கு மதிப்பு, விடாமுயற்சி, பக்ஷபாதமின்மை, பலஜனங்களுடன் கலந்து பழகும் தன்மை, முதலியனவாம்.

அதிகாரம் XV

தேசத்திற்கு போலீஸ் படையின் உபயோகம்

இதற்கு முந்திய பதினான்கு அத்தியாயங்களில், உங்கள் நடை உடைகளைப் பற்றியும், நீங்கள் உத்தியோகமாயிருக்கும் இடத்தைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்ன வென்றும், கேஸுகளைக் கண்டு பிடிப்பதில் எடுத்துக் கொள்ளவேண்டிய முயற்சிகளைப் பற்றியும், கலகம் குழப்பம் முதலிய நேரும் சந்தர்ப்பத்தில், நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும், சிக்ஷையடைந்தவர்கள் குற்றம் செய்யும் தொழிலை ஒழிக்கத் தக்க விதமாய் அவர்களை கவனிக்க வேண்டிய அம்சத்தையும், எவ்வித செய்கைகளால் இந்த இலாகாவுக்கு மதிப்புக் குறைவு உண்டாகிற தென்றும், போலீஸ் உத்தியோகஸ்தன் எப்படி நடந்து கொண்டால், இந்த டிபார்ட்மெண்டு மேன்மையடையும் என்பதைப் பற்றியும், சொல்லியிருக்கிறோம். அப்படிச் சொன்ன விஷயங்கள் யாவையும் நீங்கள் நன்றாய் அறிந்து, இந்த டிபார்ட்மன்டில் பழகி, மேலே பதினான்கு அத்தியாயத்திலும் சொல்லியிருக்கும்படியே சற்றும் வழுவாது நடந்து, ஜனங்களுடைய மதிப்பை சம்பாதித்து, அவர்களுக்கு தக்க உதவியுள்ளவர்களாக, தேர்ச்சி யடைந்து விட்டதாக எண்ணிக் கொள்ளுவோம்.

அப்படிப்பட்ட திறமையும் ஒழுக்கமும் வாய்ந்த ஓர் போலீஸ் படையினால், நமது தேசத்திற்கு உண்டாகும் உதவியைச், சற்று ஆலோஜித்துப் பார்ப்போம்.

இந்தப் படையானது ஒரு திறமை வாய்ந்ததாயிருந்தால், அரசாங்கத்தின் காரியங்கள் தங்குதடையில்லாமல் நடக்கும். கோர்ட்டுகளில் விசாரணை அமைதியாக நடக்

கும். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு நீதிஸ்தலத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள். சிக்ஷையடைந்த பிறகு, ஜெயிலுக்குக் கொண்டு போய் ஒப்புவிக்கப்படுவார்கள். கஜானா முதலிய பொக்கிஷங்கள், பத்திரமாய் காக்கப்படும். ஜனங்கள் தங்களது சொத்துகளும், திரேகங்களும், பத்திரமாய்க் காப்பாற்றப் படுமென்ற முழு நம்பிக்கையுடன், அவரவர்கள் தங்கள் தொழிலைக், கவலையின்றிச் செய்வார்கள். லக்ஷக் கணக்கான ஜனங்கள் கூடக் கூடிய உற்சவங்கள், குழப்பமில்லாமல் நடைபெறும். ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்களும், கவர்னர் ஜெனரல், கவர்னர், முதலிய உயர்தர உத்தியோகஸ்தர்களும், கவலையின்றி சுற்றுப் பிரயாணம் செய்து முடிப்பார்கள். களவு போன சொத்துக்களும், கைசோர்ந்து போன பொருள்களும், கைதவறிய குழந்தைகளும், தங்களுக்கு வந்து சேருமென்று, ஜனங்கள் தைரியமடைவார்கள். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் விழித்திருந்து, தமது இருப்பிடங்களை பாதுகாப்பார்களென்று ஜனங்கள் இரவில் கவலையற்றுத் தூங்குவார்கள்.

மேலும், இதற்கும் இராணுவப்படைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் கவனிப்போம். இராஜாங்கத்தில் சண்டை நேரிடும் பொழுதுமாத்திரம் ராணுவப்படை உபயோகப்படுத்தப்படுகிறது. போலீஸ்படை, சண்டையில்லாத காலங்களிலெல்லாம், அரசாங்கத்தின் அதிகாரம் நடைபெறச்செய்கிறது. ஆகையால் ராணுவம் உபயோகப்படுத்துவது சில காலம் தான். மற்ற காலத்தில் எல்லாம், கவர்ன்மெண்டின் அதிகாரத்தைச் செலுத்த, போலீஸ் படை உதவியாயிருக்கிறது.

ராணுவத்திலுள்ளவர்கள் தைரியசாலிகளா யிருந்தால் போதும். போலீஸிலிருப்பவர்களுக்கு, தைரியம் வேண்டிய

காலமுமுண்டு; யுக்தி, புத்தி, தந்திரம் வேண்டிய காலங்களுமுண்டு. இந்த போலீஸ் படையை பாதி ராணுவப் படை யென்று சொல்லுவதுண்டு. நியாயமாய்ப் பார்த்தால் இதற்கு ராணுவப்படைக்கு வேண்டிய சில பயிர்ச்சிகளுடன், அநேக யுக்தி சாதகமான குணங்களும் வேண்டும். போலீஸ் உத்தியோகஸ்தர் இராஜாங்கம் ஒழுங்காய் நடைபெறுங்கால், வேலை செய்ய வேண்டியவர்களாதலால், நியாயம் அறிந்து நடக்க வேண்டியவர்கள். சமாதான அரசாட்சி மிஞ்சியகாலத்தில் உபயோகப்படுத்தப்படும் ராணுவங்களுக்கு, உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டிய ஒரே நியாயம்தான் உண்டு. இராணுவத்திலுள்ள தலைவன்தான் அவன் செய்யும் காரியங்களுக்கு ஜவாப்தாரி. சிப்பந்திகள், தலைவன் சொன்னதைக் கேட்டு நடக்க வேண்டியவர்கள். போலீஸில் ஒவ்வொரு சிப்பந்தியும், தான் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும், ஜவாப்தாரியாகிறான். ஆகையால் எவ்விதத்திலும் போலீஸ் படை ராணுவப் படைக்குக் கீழ் பட்டதல்ல. போலீஸ்படை முதிர்ந்த தேர்ச்சி யுள்ளதாயிருந்தால், ராணுவத்துக்கு வேலை ஏற்படுவது அரிது.

இம்மாதிரி அரசநீதி நடப்பதற்கு, காரணமாயுள்ள போலீஸ்படையைச் சேர்ந்த நீங்கள் ஒவ்வொருவரும், இராஜவிசுவாஸம் மேலிட்டு இராஜாங்க காரியம் குறைவற நடப்பதற்கு நாம் உதவியாயிருக்க நேர்ந்ததே யென்று சந்தோஷப்பட்டு, உங்கள் இலாகாவுக்கும் உங்களுக்கும் புகழ் மேலும் மேலும் அபிவிர்த்தியாகும்படி நடந்து கொள்வீர்களாக.

இரண்டாம் பாகம்

2-வது பாகத்தின் பொருளடக்கம்

கேஸ் நெ.	விஷயம்.	பக்கம்
I	களவு ... ... Theft	67
II	கால்நடைக் களவு ... ... Cattle theft	69
III	வேலைக்காரன் செய்த களவு ... ... Theft by a servant	71
IV	வேலைக்காரன் செய்த களவு ... ... Theft by a servant	73
V	தொழிற்சாலையில் நடந்த களவு ... Theft in a factory	75
VI	ஒரு வாரண்டு நபரைக் கண்டு பிடித்தது ... Tracing a warrantee	76
VII	தையல் மெஷின் களவு ... ... Theft of a sewing machine	77
VIII	டவுனில் நடந்த கன்னக் களவு .. House-breaking and theft in a town	81
IX	கொள்ளை ... Robbery	82
X	ரோட்டில் நடந்த கூட்டக் கொள்ளை ... Highway dacoity	84
XI	வீட்டில் நடந்த கூட்டக் கொள்ளை ... House dacoity	86

கேஸ் நெ.	விஷயம்.	பக்கம்.
XII	கொலை ... Murder	88
XIII	சுபாவ மரணத்தை கொலை யென்று சந்தேகித்த கேஸு ... Natural death mistaken for murder	91
XIV	கொலை நடவாமல் தடைபட்ட கேஸு ... A case of averted murder	94
XV	ஏழு கொள்ளைக்காரர்களின் பேரில் நடந்த ஜாமீன் கேஸு ... Security for good behaviour against seven dacoits	97
XVI	பாமுலவர் என்ற கூட்டத்தின் பேரில் ஜாமீன் கேஸு ... Security for good behaviour against Pamulars	100
XVII	ஒரு குறவர் கூட்டத்தின் பேரில் நடந்த ஜாமீன் கேஸு ... Security for good behaviour against a gang of [koravars	103
XVIII	கலக கேஸு ... ... A case of riot.	105

I

களவு

கீழே சொல்லியிருப்பது ஒரு சாதாரண களவு. ஒரு சப் அஸிஸ்டெண்டு சர்ஜனது குழந்தை அணிந்து கொண்டிருந்த பொன் அரைஞாண் காணமல் போயிற்று. அது விஷயம் உடனே போலீஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. போலீஸ் ஸ்டேஷன் அதிகாரி உடனே ஜாகாவுக்குப் போய் விசாரணை செய்தார். களவு நேர்ந்ததாகத் தெரிவதற்கு ஒருமணி நேரத்திற்குள்தான் அதை யாராவது எடுத்துக் கொண்டு போயிருக்கவேண்டுமென்றும், அந்த சந்தர்ப்பத்திற்குள், பக்கத்து வீட்டிலுள்ள பத்து வயதுள்ள ஒருபெண் தவிர குழந்தையிடத்தில் அயலார் யாரும் வரவில்லையென்றும், விசாரணையில் விளங்கிற்று. அந்த போலீஸ் உத்தியோகஸ்தன் அந்த பெண்ணின் வீட்டைச் சோதனை செய்ய வேண்டுமென்றபோது, அந்த பெண் தானே களவு போன நகையை ஆஜர் செய்வதாக ஒப்புக்கொண்டாள். அதே மாதிரி நகையை ஆஜர் செய்யவே, அந்த பெண்ணின் பேரில் போலீஸ் சார்ஜ் ஷீட் (Charge Sheet) போடப்பட்டது. அதை விசாரித்த II-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டும், பெண்ணை குற்றவாளி என்று தீர்மானித்து, ஒரு மாதம் வெருங்காவல் விதித்தார். எதிரிபக்கத்து வக்கீல், இந்த குழந்தைப் பருவமுள்ள பெண்ணை முதற் குற்றவாளியாக பாவித்து, கி. பி. கோ 562-வது செக்ஷன் பிரகாரம் தண்டிக்காமல் ஜாமீன்பேரில் விடவேண்டுமென்று, எவ்வளவோ வேண்டிக்கொண்டும் பயன்படவில்லை.

இந்த தீர்மானத்தின் பேரில் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டது. அந்த கோர்ட்டில், பெண் குற்றவாளி என்ற தீர்மானம் உறுதி செய்யப்பட்ட போதிலும், அவளை சிக்ஷை செய்த பிறகு, ஜாமீனில் விடுவதற்கு முந்தி, அவள் ஜெயிலிலிருந்த நாலு நாள்களே போதுமான சிக்ஷை என்றும் உத்தரவாயிற்று.

இந்த கேஸில் முக்கியமான விஷயங்கள் என்னவென்றால் (1) வாதி தாமதமில்லாமல் களவை உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரியப்படுத்தினது. (2) ஸ்டேஷன் அதிகாரி உடனே குற்றம் நடந்த இடத்திற்குப் போய் சொத்தைக் கண்டு பிடித்தது. (3) குற்றவாளி ஒரு ஜீவனோபாயத்திற்குக் குறைவில்லாத தக்க குடித்தனத்தைச் சேர்ந்த ஒரு பத்துவயது பெண்ணிற்குத் தகாத கடுமையான தண்டனையை, முதல் குற்றத்திற்கு விதித்தது.

இந்த கேஸு 1903 வருஷத்தில் நடந்தது. திருடர்களில், சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும், எப்போதோ ஒருக்கால் திருடுபவர்களுக்கும் வழக்கமாய் திருடுபவர்களுக்கும், சிக்ஷைவிதிப்பதில் உண்டான தற்கால வித்தியாசங்கள் அப்போதுதான் துவக்கமாய்க் கொண்டிருந்தன. இந்த கேஸை நடத்தின போலீஸ் உத்தியோகஸ்தர், இந்த களவு செய்த சிறுமியை, கி. பி. கோ 562-வது செக்ஷன் பிரகாரம் முதல் குற்றவாளியாக பாவித்து ஜாமீன் பேரில் விடக்கூடாதென்று, கீழ் கோர்ட்டில் ஆக்ஷேபணை செய்தார். குற்றவாளி, சிறுமியாயும், யோக்கியமான குடும்பத்தைச் சேர்ந்தவளாயு மிருந்தும், தவறிச் செய்த ஒரு தனிக் குற்றத்திற்காக, இம்மாதிரி கடுமையான சிக்ஷை விதிக்கவேண்டுமென்ற போலீஸ் உத்தியோகஸ்தர்களது அபிப்பிராயம் சரியல்லவென்றும், அவர்கள் இவ்விஷயத்தில்

தயவாய் நடந்திருக்க வேண்டுமென்றும், ஜாயிண்டு மாஜிஸ்டிரேட் தெரிவித்தார். முதல்பாகம் XII-வது அதிகாரம் (1)-வது லக்கம் பார்க்க.

II

கால் நடைக்களவு

ஒரு ஸ்டேஷனுக்கு 7 மயில் தூரத்திலுள்ள கிராமத்தில், ஒரு எருது இரவில் களவு போய் விட்டதாக, கிராம முனிசீப்பின் ரிபோர்ட்டு, ஸ்டேஷனில் மறுநாள் காலை 8 மணிக்குக் கிடைத்தது. ஸ்டேஷன் அதிகாரி உடனே அந்த கிராமத்திற்குப்போய், கிராமத்தாரால் காட்டப்பட்ட களவு போன மாட்டின் குளம்புத்தாரைகள், தென் கிழக்கு மூலையாய் போவதைக் கண்டார். அதே திக்கில், அவர் 8 மயில் தூரம் போக நேர்ந்தது. ஏனென்றால், வழியில் அவர் விசாரித்தபோது, ஆங்காங்கு, களவுபோன மாட்டின் அடையாளத்திற்கு ஒத்த ஒரு எருதை இரண்டு ஆள்கள் ஓட்டிக்கொண்டு போவதாய், வயல்களில் வேலைசெய்கிறவர்கள் ஐந்து பேர்களிடத்திலிருந்து சமாசாரம் கிடைத்தது. மேலும், அவர்கள் சொன்ன வழியில், கட்டாந்தரையாயில்லாத இடங்களில், மாட்டின் குளம்படியும் இரண்டு மனிதர்களின் கால் அடிகளு மிருப்பதையும் பார்த்தார். இப்படி அவர் விசாரித்துக்கொண்டு போனதில், மாட்டையும் ஆள்களையும் கடைசியாய் பார்த்ததாக சொன்ன ஐந்தாவது மனிதனை அவர் சாயந்தரம் 4 மணிக்கு விசாரித்தபோது, மாடு தன் புலன்களைக் காலை 8 மணிக்குக் கடந்து போனதாகச் சொன்னான். இதைத் தெரிந்துகொண்டு போகும்

போது, அரைமணி நேரத்திற்குள், ஒரு சப்பாத்திக் கள்ளி புதருக்குமேல் பருந்துகள் வட்டமிடுவதைக் கண்டார். மனித சஞ்சாரமில்லாத அந்தத் தனி இடத்தைப் போய்ப் பார்த்தவுடன், அதின் நடுவில், தோலெல்லாம் உரிக்கப்பட்ட ஒருமாட்டின் பிணம் கிடந்தது. அதின்கொம்புகள் களவு போன மாட்டின் கொம்புகளுக்குள்ள அடையாளங்களுட னிருந்தன. அதின் தோலுக்காகவே, மாட்டைத் திருடர்கள் களவு செய்திருக்க வேண்டுமென்று ஊகித்தார். அந்த ஸ்டேஷன் சரகத்தில் அநேகநாள் தங்கியிருந்தவராதலால், அந்த இடத்திற்கு இரண்டுமைல் தூரத்தில், ஒரு தோல் பதனிடும் ஷாப்பு உண்டென்று அவருக்குத் தெரியும். களவு போன தோல் அந்த ஷாப்பிலிருக்கக் கூடுமென்று நினைத்து, நேரே அந்த இடத்திற்கு அவசரமாய் சென்று பார்த்தார். அந்த கேஸை விசாரிக்கும் விஷயமாய் அன்றையதினம் அவர் எடுத்துக்கொண்ட பிரயாசை வீண்போகாமல், களவு போன தோல் அந்த இடத்தில் கிடைத்ததல்லாமல், அதைக் கொண்டுவந்து விற்ற இருவர்கள் யார் யார் என்றும் தெரிய வந்தது. அந்த கேஸை விசாரித்த உத்தியோகஸ்தர், அந்த தோல்கிடங்குக்குப் போக இன்னம் அரைமணி காலம் தாமதித்திருந்தால், அந்தத்தோலை, சுண்ணும்பு குழியில் போட்டிருப்பார்கள். அதினால் அது உருவுமாறி அடையா ளம் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். இரண்டு எதிரி களும் பிடிபட்டு, அந்த கேஸில் ஒவ்வொருவரும் 18 மாதம் கடினக்காவல் தண்டனை அடைந்தார்கள். தோல் கிடங் கின் சொந்தக்காரன் திருட்டு சொத்து வாங்கினதாக சாட் டப்பட்ட குற்றத்திலிருந்து பிரயாசையுடன் தப்பித்து விட் டான். கேஸில் களவுபோன சொத்து அகப்படும்வரை, ஊண் உரக்கமில்லாமல் விடாமுயற்சியாய் வேலை செய்த தால்தான், இந்த கேஸை விசாரித்த ஸ்டேஷன் தலைமை

அதிகாரி இதை கண்டுபிடித்தார். முதல் பாகம் IX அதிகாரம் (2)-வது லக்கம் பார்க்க.

கேஸை விசாரித்த ஜாயிண்டு மாஜிஸ்டிரேட், இந்த கேஸில் கஷ்டப்பட்டு, புத்தி சாதுரியமாய் வேலை செய்த போலீஸ் உத்தியோகஸ்தரது திறமையைப்பற்றிப் புகழ்ந்தார். இது அவருக்கு நியாயமாய் கிடைக்கவேண்டிய பரிசல்லவா?

III

வேலைக்காரன் செய்த களவு

இது, தென்னிந்தியாவிலிருந்து பர்மாவுக்குப் போய் மாண்டலே பட்டணத்தில் குடியேறி யிருந்த ஒருவர் வீட்டில், நடந்த களவு. அவர் ஒரு தமிழனைத் தன் வீட்டில் வேலைக்காரனாக நியமித்திருந்தார். அவன், சமயம் வாய்த்த போது, தன் எஜமானன் வீட்டில் 2,000 ரூபாய் பெறுமான நகைகள் வைத்திருந்த ஒரு பெட்டியைத் திருடிக்கொண்டு மாண்டலேயை விட்டுப் புறப்பட்டு கப்பலேறி இந்த தேசத்திற்குத் திரும்பினான். இங்கு சென்னைக்கு சமீபத்திலிருந்த ஒருசிறு பட்டணத்திலுள்ள தன் சொந்தக்காரி வீட்டில் தங்கி, தான் கொண்டுவந்த நகைகளை விற்று பணமாக்கப் பிரயத்தனப்பட்டான். வெகு ஏழையாயிருந்த தன் சொந்தக்காரிக்குச் சில நகைகளை இனாமாகக் கொடுக்கவே, அவள் அவைகளை கிரயப்படுத்தித் தாராளமாய் செலவு செய்ய ஆரம்பித்தாள்.

இந்த சந்தர்ப்பத்தில், அந்த டவுன் மார்கட்டுக்குச்

சாமான் வாங்க வந்திருந்த இரண்டு பெண்பிள்ளைகள் ஏதோ முக்கியமான பேச்சு பேசுவதை, அவ்வழியாய்ப்போன ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் கண்டான். 'எனக்கும் பணம் கொடுக்க ஒரு பர்மா த்திருடனிருந்தால்,நானும் தாராளமாய் பணம் செலவு செய்வேன்', என்று, ஒருத்தி மற்றொருத்திக் குச் சொல்லுவது அவன் காதில் விழுந்தது. உடுப்பில்லாம லிருந்த அவன், ஏதோ சாமான் வாங்குபவன் போல் நடித்து, அங்கு தாமதித்து, அந்த பெண் பிள்ளைகளுடன் பேச்சுக் கொடுத்தான். அப்படி பேசிக்கொண்டிருக்கையில் தாராளமாய் சிலவு செய்யும் பெண்பிள்ளையின் பெயர் இருப் பிடம் இவைகளை அவர்களிடம் தெரிந்து கொண்டதுடன், அவள் வீட்டிற்கு யாரோ ஒரு அன்னியன் பர்மாவிலிருந்து களவு செய்ததாக சந்தேகப்படக் கூடிய ஏராளமான நகை களுடன் வந்திருப்பதாயும், சொல்லக் கேட்டான். உடனே அந்த உத்தியோகஸ்தன் தகுந்த உதவியுடன் குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்று, அதை சோதனை செய்து, விலையுயர்ந்த அநேக நகைகளைக் கைப்பற்றியதுடன், பர்மாவிலிருந்து அவைகளைக் கொணர்ந்த மனிதனையும் பிடித்துக் கொண் டான். மாண்டலேக்குத் தந்தி கொடுத்ததில் அவ்விடம் இந்த நகைகள் களவு போனது உண்மையென்று தெரிய வந்தது. பர்மா போலீஸ்காரர்கள் இங்கு வந்து சொத் தையும், எதிரியையும் பெற்றுக்கொண்டு, மாண்டலேக்குக் கொண்டு போனார்கள். அங்கே கோர்ட்டில் நடந்த விசார ணையில், எதிரி சிக்ஷையடைந்தான். களவுபோன நகையின் பெரும்பாகம், இங்கு நடத்திய சோதனையில் அகப்பட்டு விட்டது.

பிறர் பேசுவதைக் கவனமாய்க் கேட்டுத் தெரிந்து கொண்ட விஷயத்தால் தாமதமில்லாது ஒரு போலீஸ் உத்தி

யோகஸ்தன் கேஸை கண்டு பிடித்ததற்கு, இது ஒரு உதாரணமாகயிருக்கிறது. முதல்பாகம் VII-வது அதிகாரம் (4)-வது லக்கம் பார்க்க.

இந்த கேஸைக்கண்டு பிடித்த போலீஸ் உத்தியோகஸ்தனுக்குத் தகுந்த பரிசு கொடுக்கப்பட்டதென்று சொல்லாமலே விளங்கும்.

IV

வேலைக்காரன் செய்த களவு

இந்தக் கேஸில், 20,000 ரூபாய் பெறுமான ஒரு வயிர அட்டிகையை, ஒரு சமயல்காரன் தன் எஜமான் வீட்டிலிருந்து களவு செய்து விட்டான். I-வது கேஸைப்போலவே இந்தக் குற்றமும், சமையல்காரன் தவிர வேறொருவரும் செய்திருக்க முடியாத சந்தர்ப்பத்தில்தான் நடந்தது. மேலும், இந்த நகையைக் கடைசியாய் பார்த்த காலத்திற்கும், அது காணமல் போய்விட்டதாகத் தெரிந்த காலத்திற்கும், இடையில் சொற்ப சாவகாசமே யிருந்ததால், இதைக் களவு செய்தவனுகச் சந்தேகப்பட்ட அந்த சமையல்காரனுக்கு, அந்தப் பொருளை வீட்டைவிட்டு வெளிப்படுத்துவதற்குச் சாவகாசமில்லை. ஆகையால், அந்த நகையை அவன் அந்த வீட்டிலேயே மறைத்து வைத்திருக்கவேண்டுமென்று ஊகிக்கப்பட்டது. வீட்டிலுள்ளவர்கள் இந்த சம்பவத்தைப் போலீஸில் தெரியப்படுத்திவிட்டு, சமையல்காரன் போக்குவரத்தை வீட்டிற்குள் கவனமாய் பார்த்து வந்தார்கள். வீட்டிற்கு வெளியே போகும்போது அந்

சமையல்காரனைப் பின் தொடர்ந்து செல்ல, வீட்டின் வாசலிலும் புழக்கடையிலும் உடுப்பில்லாத ஜவான்களை போலீஸ் அதிகாரிகள் நியமித்தார்கள். களவு நடந்தது ஒருநாள் காலையில், அன்றையதினம் சாயந்திரம், நல்ல தண்ணீர் கொண்டு வருவதற்கு வீட்டிற்கு வெளியே பித்தளைக் குடத்தைக் கொண்டுபோகுமுன், சமயல்காரன் ஒரு தூணின்மேலிருந்து எதையோ எடுத்துக் குடத்திற்குள் வைப்பதை வீட்டிலுள்ள ஒருவர் பார்த்தார். இந்த சமாசாரத்தை அவர் வீட்டிலிருந்த வேறொருவருக்குச் சொல்லி, அவர் அவசரமாய் வெளியே போய், அங்கு காவல் செய்து கொண்டிருந்த போலீஸ் சிப்பந்திக்குத் தெரியப்படுத்தினர். இந்த சமாசாரத்தைக் கேழ்விப்பட்ட போலீஸ் அதிகாரி, சமயல்காரன் வெளியில் வரும்வரை அமரிக்கையாய் காத்திராமல், அவசரமாய் வீட்டிற்குள் ஓடினர். இதைக்கண்ட எதிரி, சந்தேகப்பட்டு வீட்டின் பின்பாகத்துக்குப் போய், ஒருவருக்கும் தெரியாமல் குடத்திற்குள் இருந்த நகையை ஒரு மேஜையின் கீழ் போட்டுவிட்டான். குடத்தை வீணில் சோதித்துப் பார்த்தார்கள். நகை சற்று நேரத்திற்கெல்லாம் அகப்பட்டு விட்ட போதிலும், எதிரியின்மேல் போதுமான சாட்சியமில்லாததால், அவன்பேரில் எவ்வித நடவடிக்கையும் நடத்த முடியாமல், இந்த குற்றம் கண்டுபிடிக்கப்படாதவைகளில் ஒன்றுயிருக்கும்படி நேரிட்டது. தூணின் மேலேயிருந்து என்ன எடுத்தாய் என்று எதிரியைக் கேட்டபோது, குடம் விளக்குவதற்காக அங்கு வைத்திருந்த புளியை எடுத்ததாக சுலபமாய் பதில் சொன்னன். போலீஸ் ஜவான் இம்மாதிரி பதறி அவசரமாய் செய்த காரியத்தால் ஒரு பெரிய கேஸ் பிடிபடாமல் பாக்கியாயிருக்க நேரிட்டது. முதல் பாகம் IX அதிகாரம் (3) லெக்கம் பார்க்க.

V

தொழிற்சாலையில் நடந்த களவு

ஒரு பெரிய தொழிற்சாலையில் (**Factory**) வழக்கமாய் செம்பு பித்தளை முதலிய உலோகங்கள் களவுபோய்க்கொண்டிருந்தன. அதுபெரிய விசாலமான இடமாயும், பல கட்டடங்கள் அடங்கியுள்ளதாயுமிருந்ததால், திருடர்களை கையும் களவுமாய்ப் பிடிப்பது அசாத்தியமாயிருந்தது. அப்படிச் செய்ய பலமுறை முயன்றும் பயன்படவில்லை. களவு செய்த சாமான்களை சமீபத்திலுள்ள பட்டணத்தில் விற்பதற்காக இரவில் கொண்டுபோகக் கூடிய பாதைகளை காவல் காத்துக் கொண்டால் பிரயோஜனப்படக்கூடுமென்று எண்ணி, அம்மாதிரி செய்ய இருட்டுக்காலங்களில் ஜவான்கள் நியமிக்கப்பட்டார்கள். ஒரு நாள் இரவில் இரண்டு பக்கமும் படுதாவால் மூடிய ஒரு குதிரை வண்டியை ஒரு முகம்மதியன் ஓட்டிக்கொண்டு வருவதை, இரண்டு ரோட்டுகள் கூடுமிடத்தில் காவலுக்காக நியமிக்கப்பட்ட இரண்டு ஜவான்கள் பார்த்தார்கள். வண்டிக்காரன் கோஷாப் பெண் பிள்ளை யிருப்பதாகத் தடுத்தும், ஜவான்கள் சந்தேகத்தின் பேரில் வண்டியை நிறுத்தினார்கள். வண்டிக்குள்ளிருந்த நபரும் வண்டியை நிறுத்த ஆக்ஷேபனை செய்தார். அப்படி பேசியவர் குரல், பெண்பிள்ளை குரல் போலவே யிருந்தது. வண்டிக்காரன் இந்த போலீஸ்காரர்களை பல விதத்தில் பயமுறுத்தின போதிலும், வண்டிக்குள்ளிருந்த நபரையும் வண்டியையும் பரிசோதிப்பதற்கு ஒரு ஸ்திரீ அகப்படும்வரை வண்டியை நிறுத்தி வைத்தார்கள். அப்படி சோதித்தபோது, அதிலிருந்த நபர் பெண்பிள்ளை வேஷம் போட்டுக் கொண்டிருந்த ஒரு ஆண்பிள்ளையென்றும், வண்

டியில் ஒரு கோணி நிரம்ப களவு செய்த பித்தளை முதலிய சாமான்களிருப்பதாகவும், கண்டு பிடிக்கப்பட்டது. இந்த குற்றவாளிகளை கோர்ட்டில் இந்த கேஸில் தண்டித்த பிறகு, வழக்கமாய் நடக்கும் அந்த தொழிற்சாலை களவுகள் வெகு நாளைக்கு நடவாமலிருந்தன.

இந்த கேஸிலிருந்து நீங்களறிய வேண்டியது என்ன வென்றால், களவு நடக்குமிடம் வெகு விசாலமாயிருப்பதால் களவுகளை அந்த இடத்திலேயே கண்டு பிடிக்க முடியாத சந் தர்ப்பத்தில், திருட்டுச் சொத்துக்களை விற்பனைக்குக் கொண்டு போகக்கூடிய பாதைகளை காவல் காத்துக் கொண் டிருந்தால் சொத்தை கண்டு பிடிக்கலா மென்பதே.

VI

ஒரு வாரண்டு நபரைக் கண்டுபிடித்தது

போலீஸ் ஸ்டேஷனிலுள்ள பிரசித்த குற்றவாளியின் ஜாப்தாவைப் (A. list) படிப்பதினால் எவ்வளவு பிரயோஜன மென்று பொதுவாய் நீங்கள் தெரிந்து கொள்வதில்லை. ஒரு ஜெயிலுள்ள ரிமாண்டு கைதிகளுக்குள், ஒருகாலில் ஒரு விர லில்லாத ஒரு குரவனை ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் கண்டார். அவன்பேரில் நல்ல நடத்தை ஜாமீன் கேஸை நடத்துவதற்கு அவனை பிடித்து வைத்திருப்பதாக ஏற் பட்டது. ஒரு கூட்டக் கொள்ளை கேஸில் பிடிபடவேண்டிய ஒரு நபருக்குக் காலில் நான்கு விரல்தான் உண்டென்று பிரசித்த குற்றவாளி ஜாப்தாவில் தான் படித்திருந்தது, அவ ருக்கு ஞாபகத்திற்கு வந்தது. இது சரிதானா என்று ஜில்லா 'ஏ' லிஸ்டை அவர் படித்துப்பார்த்தார். அவன் ஒரு

கூட்டக்கொள்ளை குற்றத்திற்கு அகப்படாமல் ஏழுவருஷ காலங்களாய் தலைமறைந்து கொண்டிருப்பதாக ஏற்பட்டது. நடுவில் அவன் வேறு குற்றங்களில் சம்பந்தப்பட்டிருந்த போதிலும், அவன் பேரில் ஏற்கனவே ஒரு கொள்ளை குற்றத்திற்காக வாரண்டு பிறந்திருக்கிறது என்ற விஷயத்தை ஒருவரும் தெரிந்து கொள்ளவில்லை. அதுவுமல்லாமல், இந்த வாரண்டு பாக்கியிலிருந்த ஸ்டேஷனின் தலைமை உத்தியோகஸ்தர், இந்த சந்தர்ப்பத்தில் இந்த வாரண்டை ரத்து செய்து விடலாமென்று ரிபோர்ட்டு செய்திருந்தார். இம்மாதிரி, ஒரு பாரிக்குற்றம் சுமத்தப்பட்டவனை, நல்ல நடத்தை ஜாமீன் கேஸுமூ நடவடிக்கை நடத்த எண்ணியிருந்த காலத்தில், 'ஏ' லிஸ்டை நன்ருய்ப் படித்ததினுல், அவன் இன்னுனென்று ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனுல் கண்டு பிடிக்கப்பட்டான். இந்தக் குற்றவாளியின் பேரில் பாக்கியிலிருந்த கூட்டக் கொள்ளை கேஸுமூ விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டது. அவன் வாரண்டுக்கு அகப்படாதிருந்தவன் என்று கண்டு பிடித்த போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு வெகுமதி அளிக்கப்பட்டது.

VII

தையல் மெஷின் களவு

ஒரு புத்தியுள்ள ஒரு போலீஸ் ஜவான் எப்படி யுக்தியாய் களவுபோன சொத்தைக் கண்டுபிடித்து புகழ் பெற்ருனென்று இந்தக் கேஸில் சொல்லப்படும். ஒரு ராணுவ உத்தியோகஸ்தர் வீட்டிலிருந்து ஒரு கைத்தையல் மெஷின் களவு போயிற்று. இந்த சொத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கு இனும் கொடுப்பதாய் அதன் சொந்தக்காரர் தெரி

வித்தார். தையல் வேலை கற்றிருந்த ஒரு ஜவான் இந்தக் களவைக் கண்டுபிடிக்க தன்னை நியமிக்கவேணுமென்று கேட்டுக்கொண்டான். களவு நடந்த சந்தர்ப்பத்தை யோஜிக்குமளவில், யாரோ ஒரு உள்ளூர் திருடன்தான் இந்த குற்றத்தை நடத்தியிருக்கவேண்டுமென்று தோன்றிற்று. அந்த ஜவானை நியமித்தவுடன், பக்கத்திலிருந்த ஒரு டவுனுக்கு சிலநாள்கள் தினம்தோறும் போய், ஒரு பழைய தையல் மெஷின் வாங்க விசாரிப்பவன் போல் நடித்து வந்தான். தையல் வேலை நன்ருய் தெரிந்தவனுதலால், விலைக்குக் கொடுப்பதாகச் சொன்ன பல மெஷின்களை உபயோகப் படுத்திப் பார்த்து, அதன் மூலமாய் அநேக தையல் வேலைக் காரருடன் பழக சந்தர்ப்பம் உண்டு பண்ணிக்கொண்டான். சில தினத்திற்குள், ஒரு அன்னியன், ஒரு பழைய மெஷின் தன்னிடத்தில் விலைக்கிருப்பதாக, கடைத்தெருவிலிருந்த ஒரு தையல்காரனிடம் தெரியப்படுத்தினுன். அதைக்கேட்ட அவன் பழைய மெஷின் தேவையென்று தேடிக்கொண்டிருக்கும் அந்தத் தையல்காரன் வேஷம் பூண்ட ஜவானிடம் சொல்லும்படி சொன்னுன். விற்பவன் தான் மெஷினைக் கொண்டு வரவில்லையென்றும், அது மூன்று மயில் தூரத்திலுள்ள தன் குடிசையிலிருப்பதாயும், வாங்குபவர்கள் அங்குவந்துதான் அதைப் பார்த்து வாங்க வேண்டுமென்றும் சொன்னுன். அவன் பேசும்பொழுதே, அவனுக்கு மெஷினைப்பற்றிய பழக்கம் ஒன்றுமில்லையென்று ஜவான் தெரிந்துகொண்டான். மேலும் கண்டிப்பான ஒரு விலையை சொல்லி கேட்பதற்குப் பதிலாக, வாங்குபவன் நியாயமாய் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கும் விலைக்கு அதைக் கொடுத்து விடுவதாயும் சொன்னுன். அன்றியும் தனக்கு அந்த டவுனில் சாயந்திரம்வரையில் வேலையிருப்பதாயும், அந்த மெஷினை வாங்குபவர் சாயந்தரம் தன்னுடன்

பணத்தோடு தன் வீட்டுக்குவரவேண்டு மென்றும் சொன்னான். அதற்கு சம்மதப்பட்டு தான் உண்மையில் அந்த சாமானை வாங்க நிச்சயித்திருப்பதை உறுதிப்படுத்த தன்னுடைய மோதிரத்தை, இந்த விற்பனைப்பற்றிய பேச்சுகள் நடந்த தையல் கடைக்காரனிடம் அந்த ஜவான் பொதுக்கட்டி விட்டு, அதேமாதிரி அன்றைக்கு சாயந்திரம் 5-மணிக்கு அந்த கடையில் வந்து சந்திப்பதை உறுதிப்படுத்துவதற்கு, மெஷினை விற்கப்போகிறவனுடைய கைக் கெடிகாரத்தையும் அதே மனிதனிடத்தில் கொடுக்க ஏற்பாடு செய்தான். தன்னுடைய வேலையில் தனக்கு உதவி செய்யும்படி நியமித்திருந்த தன் மகனை, விற்பனை செய்பவனுக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்ந்து செல்ல ஏவி, அந்த ஜவான் தன்ஸ்டேஷனுக்குச் சென்று, அங்குள்ள தலைமை உத்தியோஸ்தகனுதவியால் தனக்கு மெஷின் வாங்குவதற்கு வேண்டிய பணத்தைச் சேகரித்துக்கொண்டான். மேலும், தான் போகும் கிராமத்தில் தன் விசிலை (Whistle) ஊதினவுடன் தனக்கு வந்து உதவிசெய்வதற்கு ஆயத்தமாய் சில ஜவான்களுடன் வரும்படி தலைமை உத்தியோகஸ்தனுடன் ஏற்பாடு செய்துகொண்டான். ஜவானுடையபிள்ளை விற்பனை செய்பவனை பின்தொடர்ந்து சென்றான். விற்பவன் நேரே தன் கிராமத்துக்குச் சென்று, தன் குடிசைக்குள் போய் சில நிமிஷங்களுக்குப் பிந்தி இன்னொரு மனிதனுடன் பேசிக்கொண்டே வெளியில் வரக் கண்டான். கொஞ்சதூரம் சென்றவுடன், குடிசையிலிருந்து புதிதாய் வந்தவன் நின்றுவிடவே, விற்பனை செய்பவன் நேரே டவுனுக்கு வந்து சேர்ந்தான். அப்படி நின்றுவிட்டவன் இந்த களவை செய்தவரில் ஒருவனென்று பிந்தி விசாரணையில் ஏற்பட்டது. கேஸைக்கண்டு பிடிக்கும் ஜவான் செய்த யுக்திகள் நல்ல பலனை விளைவித்தன. முன்

ஏற்பாட்டின்படியே, ஜவானும் மிஷின் விற்பவனும் சாயந்திரம் 5-மணிக்கு தையல் கடையில் சந்தித்து, மெஷின் வைத்திருந்த கிராமத்திற்குப் போனார்கள். மெஷினை நன்றாய் பரிசோதித்துப்பார்த்த பிற்பாடு, அதின் விலை தீர்மானிக்கப்பட்டது. விலையைப்பற்றி, வாங்குபவர்க்காவது விற்பவர்க்காவது அதிக சிரத்தையில்லாததால், விலை தீர்மானிப்பதில் என்ன கஷ்டமிருக்கப் போகிறது? களவுபோன மெஷினின் நம்பர் விற்பனைக்கு வந்திருக்கும் மெஷினிலிருக்கிறதா என்பதை நிச்சயித்துக் கொள்ளுவதுதான் ஜவானின் கருத்து. களவுபோன மெஷினின் நம்பர் அதிலிருப்பதைக் கண்டவுடன், ஜவான் விசிலை ஊதினான். ஸ்டேஷன் ஆபீசர் உடனே அங்கு ஆஜரானார். தற்செயலாய், ஸ்டேஷன் ஆபீசர் ஜவானின் பிள்ளையை கிராமத்தில் பார்த்து மெஷின் விற்பவன் குடிசை எங்கேயிருக்கிற தென்று தெரிந்து கொண்டு, விசில் ஊதும்போது அதற்குச் சமீபத்திலேயே வந்திருந்தார். இதைத் திருடினவன், சொத்துக்குடையவர் வீட்டு வேலைக்காரனென்றும், அதை விற்க ஏற்பாடு செய்தவன் அவனுக்கு மாமனென்றும் விசாரணையில் தெரிய வந்தது. இந்தக் குற்றத்திற்காக அந்த இருவருக்கும் சிக்ஷை கிடைத்தது. இந்தக் கேஸை கண்டுபிடித்த ஜவானுக்கு, தகுந்த பரிசளிக்கப்பட்டது. சாதாரண ஜனங்களுடன் நெருங்கிப் பழகி கேஸில் துப்புக் கண்டுபிடிக்க, மற்ற உயர்தர உத்தியோகஸ்தர்களைக் காட்டிலும், ஒரு ஜவானுக்கு எவ்வளவு சுளுவு என்பதை இந்தக் கேஸ் மூலமாய் தெரிந்து கொள்ளலாம். முதல் பாகம் IV அதிகாரம் (1)-வது லெக்கம் பார்க்கவும்.

—

VIII

டவுனில் நடந்த கன்னக் களவு

ஒரு டவுனில் ஒரு வீட்டின் தெருப்பக்கமிருந்த ஜன்னல் கம்பிகளைப் பிடுங்கிவிட்டு, வீட்டிற்குள் நுழைந்து, ரூபாய் 2,000 பெருமான நகைகளைத் திருடர்கள் இராத்திரியில் களவு செய்துவிட்டார்கள். குற்றம் நடந்த ஜாகாவைக் கவனித்துப் பார்த்ததில் மேலே சொன்ன ஜன்னலுக்குக் கீழே, சுண்ணும்பு அடித்திருந்ததின் மேல், நன்ருய் தெரியும்படியான ஒரு காலடி காணப்பட்டது. ஜன்னல் கம்பிகளைப் பிடுங்கும்போது, திருடன் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, கால்களைப் பலமாய் சுவற்றில் உதைந்திருக்க வேண்டுமென்று ஏற்பட்டது. அந்தக் காலடியைப் படம் பிடித்து வைக்கப்பட்டது. அந்தக் காலடி மிக்கப் பெரிதாயும் விரல்கள் அகன்றும், காலின் சுண்டு விரல் மற்ற விரல்களைக் காட்டிலும் தூரத்திலும் இருந்தது. இதனுல் ஒரு பெரிய பலமுள்ள மனிதன் இந்தச் செய்கையை செய்திருக்க வேண்டுமென்று ஊகிக்கப்பட்டது. களவுபோன நகைகளில் ஒன்று 68 பிரஞ்சு காசுகளடங்கிய காசுமாலை. அந்த மாலை செய்திருந்த விதத்தைப்பற்றி, அடையாளம் கண்டு பிடிக்கக் கூடிய எல்லா விபரங்களும் பிரியாதில் குறிக்கப் பட்டிருந்தன. இந்தக் களவு நடந்த சிலவாரங்களுக்குப் பிந்தி, இந்தக் களவு ஜாகாவுக்குச் சில மயில் தூரத்தில், ஒரு கட்டடத்திலுள்ள ஜன்னல் கம்பிகளைப் பிடுங்கி, வீட்டிற்குள் நுழைந்து, இரண்டு லக்ஷம் ரூபாய் விலை பெருமான நகைகளை யாரோ திருடர்கள் களவுசெய்துக் கொண்டுபோய் விட்டார்கள். இந்தப்பெரிய கன்னக் களவு கேஸ்—மறுநாளே பிடிபட்டு களவுபோன சொத்துக்களும் அகப்பட்டன.

அப்படி அகப்பட்ட சொத்துகளுக்குள், பழைய கேஸில் களவு போன காசு மாலையும் சேர்ந்திருந்தது. புதுகேஸில் பிடிபட்ட திருடர்களுக்குள் ஒருவன், குஸ்தி பழகிக் கொடுக்கும் பயில்வான். அவனுடைய காலடிக்கும் பழைய கேஸில் படம் பிடித்து வைத்திருந்த காலடிக்கும் எள்ளளவும் வித்தியாச மில்லாமலிருந்தது. பழைய கேஸில் சம்பந்தபட்ட காசுமாலையை அவனே திருடினதாக ருஜுவாகி, அந்தக் கேஸிலும் அவன் தண்டனை அடைந்தான்.

அவன் ஒரு பழைய குற்றவாளியானதால் இந்தச் காசு மாலை கேஸு, ஸெஷன் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டது. காலடியைப் பிடித்துவைத்திருந்த படத்தை பார்த்ததிலிருந்தே, ஜூரிமார்கள் இந்த கேஸின் உண்மை தங்களுக்கு விளங்கிற்றென்றார்கள். குற்றம் நடந்த ஜாகாவை நுட்பமாய் பரிசோதனை பண்ணுவதால் உண்டாகும் பலனுக்கு இந்தக் கேஸே ஒரு சான்றாகும். முதல் பாகம் VII அதிகாரம் (3) என்ற லக்கம் பார்க்கவும்.

IX

கொள்ளைக் கேஸு

ரொக்கம் களவு போனால் அந்தக் குற்றத்தை விசாரிப்பதில் பயனில்லை என்பது பொதுவான அபிப்பிராயம். அப்படி நினைப்பது சரியல்ல வென்றும், சில சந்தர்ப்பங்களில் அம்மாதிரியான கேஸுகளையும் கண்டு பிடிக்கக் கூடுமென்றும் இந்த கேஸிலிருந்து தோன்றும்.

பல் கடைகளிலும் வசூலித்த நிலுவை ரூபாய் 170-துடன், சாயந்தர நேரத்தில், ஜனங்கள் போக்குவரத்தாயிருந்த ஒரு சாலைவழியாக, ஒரு குமாஸ்தா தன் கடைக்குத் திரும்பிப்போய் கொண்டிருந்தான். அவன் பணம் வசூலித்துக் கொண்டு போவதைப் பார்த்திருந்த, முந்தி அறிமுகமில்லாத மூன்று திருடர்கள், அவன் பேரில் திடீரென்று பாய்ந்து பண முடிச்சை பிடிங்கிக்கொண்டு ஓடிவிட்டார்கள். அப்படித் திருடினவர்கள் சிப்பாய்கள் என்று மட்டும் தெரிந்தது. பிறகு அவர்களுடன் வேலை செய்யும் வேறு சில சிப்பாய்களின் உதவியால் இந்தக் கேஸில் துப்புக் கண்டு பிடிக்கப்பட்டது. துப்பின் பேரில் யார்பேரில் சந்தேகம் ஏற்பட்டதோ அந்த மூன்று சிப்பாய்கள், இந்தப் பணத்தை கொள்ளை யடித்து சரிபாகமாக பிரித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று ஊகிக்கப்பட்டது. ஏனெனில் இந்தக் கொள்ளை நடந்த சில தினத்திற்குள் மூவரில் ஒவ்வொருவரும், களவுபோன மூன்றிலொரு பாகத்தை செலவழித்ததாக, விசாரணையால் ஏற்பட்டது. விசாரணை செய்த போலீஸ் உத்தியோகஸ்தன், எவ்வளவு புத்தி நுட்பத்துடனும், கஷ்டத்துடனும், இதைக் கண்டுபிடித்திருக்க வேண்டுமென்று யோஜித்துப்பாருங்கள். இந்த விஷயங்கள் ஏற்பட்டவுடன், அம்மூவரும் பிடிபட்டு, குற்றம் செய்ததாக சந்தேகப்படுகிறவர்களை அடையாளம் காட்டும் முறைப்படி வாதிக்குக்காட்டவே, அவர் சுலபத்தில் இம்மூவரும் தன்னை அடித்து பணம் பிடிங்கினவர்கள் என்று அடையாளம் காட்டினார். இந்தக் கேஸை ருஜூசெய்யக் கூடிய சாட்சியம் அநேகமாய் சங்கதியைக் குறித்த சாட்சியமா யிருந்தபோதிலும், இந்தக் கேஸில் சம்பந்தப்பட்ட மூவரும் தண்டிக்கப்பட்டார்கள். வெகு பிரயாசையுடன்,

புத்திசாலித்தனமாய் இந்தக் கேஸை கண்டுபிடித்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வெகுமதி பெற்றார்கள். முதல்பாகம் IX அதிகாரம் (1) லக்கம் பார்க்கவும்.

X

ரோட்டில் நடந்த கூட்டக்கொள்ளை

ஒருநாள் நடு இரவில் மாட்டுவண்டிகளில் போய்க்கொண்டிருந்த பிரயாணிகளைத் தடுத்து, அவர்களைப் பயமுறுத்தி, அவர்கள் கையிலிருந்த சொத்துகளை ஐந்துபேர் திருடர்கள் கொள்ளையடித்தார்கள். சொத்துகளைப்பறி கொடுத்தவர்கள் அவர்கள் போக வேண்டிய வழியே சென்று, சூரிய உதயமான பிறகு, வழியிலிருந்த ஒரு போலீஸ் ஸ்டேஷனில் இந்த சம்பவத்தைத் தெரிவித்தார்கள். குற்றம் இந்த ஸ்டேஷன் சரகத்தில நடவாதிருந்த போதிலும், ஸ்டேஷன் ஆபீசர் உடனே கொள்ளைநடந்த ஜாகாவுக்குப் போய் அதைக் கவனமாய் பரிசோதனை செய்து பார்த்தார். ஏதோ ரயில்வேயில் வேலைசெய்யும் சிப்பந்திகள் பெயர்கள் எழுதப்பட்ட கிழிந்த மஞ்சள் நிறமுள்ள நபர்ஜாப்தா ஒன்று அங்குகிடந்து அகப்பட்டது. அந்தக் காகிதத்தில் எண்ணெக்கரை இருந்ததுடன் சக்கரைத்துளிகளும் ஒட்டிக்கொண்டிருந்தன. குற்றம் நடந்த ஜாகாவுக்குச் சமீபத்திலுள்ள ஒரு ஜங்ஷன் ரயில்வே ஸ்டேஷனுக்கு உடனேபோய், அந்த மஞ்சள் நிற நபர் ஜாப்தாவைபற்றி ஸ்டேஷன் ஆபீசர் விசாரித்தார். ஒரு ரயில்வே இன்ஸ்பெக்டர், அதை குற்றம் நடந்ததினத்தில், தானே கிழித்து அந்த ஸ்டேஷன் பிளாட் பாரத்தில் எறிந்து விட்டதாகவும், அதில் சில

நபர்களின் பெயர்கள் மாறுதலாய் எழுதிவிட்டதால், அதை கிழிக்க நேர்ந்ததென்றும் சொன்னார். ரயில்வே ஸ்டேஷனில் இன்னம் விசாரித்ததில், அந்தடவுனில் குப்பைவண்டி ஓட்டும் ஒரு பிரசித்தத்திருடன், குற்றம் நடந்த தினம் சாயந்தரம் தின்பண்டங்கள் விற்கும் கடையில், ஒரு ரூபாய்க்கு சிற்றுண்டிகள் வாங்கினனென்றும், அதை அந்தக் காயிதத்தில் வைத்துமடித்தா னென்றும், அப்போது அவனுடன் கூட சில இனம் தெரியாத மனிதர்களிருந்தார்கள் என்றும் ஏற்பட்டது. உடனே, அந்ததோட்டி வேலை செய்பவன் வீட்டை ஸ்டேஷன் ஆபீசர் சோதனை போட்டார். கொள்ளையில் களவு போன ஒரு குடை அகப்பட்டது. அதன்பேரில் அந்தத் தோட்டியை பிடித்து விசாரித்ததில், அவன் குற்றத்தை ஒப்புக்கொண்டு மற்ற சொத்துக்கள் இருக்குமிடத்தைச் சொல்லி, தன்னுடன்கூட அந்தக் குற்றத்தை நடத்தினவர்களையும் காட்டிக் கொடுத்தான். இந்தக் கேஸை, ஸெஷன் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு எதிரிகளுக்குத் தக்க தண்டனை விதிக்கப்பட்டது. இந்தக் குற்றத்தை நடத்த ஏற்பாடு செய்த அந்தத் தோட்டிக்கு, நான்குவருஷம் கடினகாவல் தெண்டனை கிடைத்தது.

குற்றம் நடந்த ஜாகாவை நன்றாய் கவனித்துப் பார்த்ததால் ஒரு குற்றம் கண்டு பிடிக்கப்பட்டதற்கு, இந்தக் கேஸை ஒரு உதாரணமாயிருக்கிறது. முதல்பாகம் VII-வது அதிகாரம் (2) லக்கம் பார்க்கவும்.

இந்தக் கூட்டக் கொள்ளைநடந்த இடத்திற்கும், அங்கு அகப்பட்ட மஞ்சள் காகிதத்தைக் கிழித்துப் போட்ட ரயில்வே ஸ்டேஷனுக்கும் ஒன்பது மயிலுக்குக் குறையாத தூரம் என்பதைக் கவனிக்கத்தக்கது.

XI

வீட்டில் நடந்த கூட்டக் கொள்ளை

ஒரு கோவிலுக்குப் பூஜை செய்பவர் வீட்டில் ஒரு கூட்டக் கொள்ளை நடந்து, அவரது சொத்துக்களும், அந்த வீட்டில் வைத்திருந்த சில கோவில் சொத்துகளும், களவு போயின. அந்தக் குற்றத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவு பிரயாசை எடுத்தும் பயன்படவில்லை. இந்தக் கொள்ளை நடந்தது உண்மையல்லவென்றும், கோவிலின் விலை பெற்ற சாமான்களை தான் அபகரிப்பதற்காக இம்மாதிரியான ஒரு பொய்க் கேஸை பூசைசெய்பவர் உண்டு பண்ணினரென்றும், ஜனங்களுக்குள் ஒரு அபிப்பிராயம் உண்டாயிருந்தது. ஆனால், இந்தக் கேஸை விசாரித்த ஸ்டேஷன் ஆபீசர் ஜாக்கிரதை யுள்ளவரானதால், அது உண்மையான கேஸ் என்பதில் ஆக்ஷேபனை யில்லை யென்று திட்டமாய் நினைத்திருந்தார். ஆறுமாதம் பொறுத்து, வேறொருகிராமத்தில், ஒரு ரோட்டில் கொள்ளை நடந்தது. அந்தக் கிராம முன்சீபினது சிநேகிதத்தை ஸ்டேஷன் ஆபீசர் சம்பாதித்திருந்தபடியால், செய்கையைப்பற்றி ரிபோர்ட்டனுப்பியவுடன், அதைக் கண்டுபிடிக்க முன்சீப் பிரயாசை எடுத்துக்கொண்டார். கொள்ளைநடந்த இடத்திற்குச் சமீபத்தில், கொஞ்சகாலமாய் குற்றஞ் செய்யக்கூடிய ஜாதியைச் சேர்ந்த இருளர்கள், புதிதாய் குடிசைபோட்டுக்கொண்டிருப்பது அவர் ஞாபகத்திற்கு வந்தது. உடனே, அவர் அந்த குடிசைகளுக்குப் போய், அங்கு தனியாயிருந்த இளமைப் பருவமுள்ள ஒரு இருளனைப் பிடித்துக்கொண்டார். அவனைத் தன் சாவடிக்கு அழைத்துக்கொண்டுபோய், சிலமாதங்களாய் அந்தகிராமத்தைச் சுற்றி நடந்துவரும் குற்றங்களுக்கெல்லாம், அவனே

ஜவாப்தாரி யென்றும், பூஜை செய்பவர் வீட்டில் நடந்த கொள்ளையும் அவன் சேர்ந்துதான் நடத்தினதென்றும், வற்புறுத்தினர். கிராம முன்சீப்புக்கு தான் செய்த குற்றங்களை யெல்லாம் யாரோ சொல்லிவிட்டதாக தவறுதலாய் எண்ணி, தானும் தன் கூட்டத்தாரும் அங்குவந்து குடியேறியபிறகு செய்தகுற்றங்களை யெல்லாம் சொல்லிவிட்டான். அப்படி அவன் செய்த குற்றங்களில் முதலாவது குற்றம்பூஜை செய்பவர் வீட்டில் நடந்த கொள்ளை. அவன் குற்றங்களை ஒப்புக்கொண்டு சொன்ன வாக்குமூலத்தால், பூஜை செய்பவர் வீட்டுக் கொள்ளையும், போலீஸ் ஸ்டேஷன்களில் தாக்கலில்லாத இன்னம் இரண்டு ரோட்டுகளில் நடந்த கூட்டக் கொள்ளையும், பலவித வேறு குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் சம்பந்தப்பட்ட இந்த இருளக் கூட்டத்தார் செஷன் கோர்ட்டில் சிக்ஷையடைந்தார்கள். ஆனல் அவர்கள் குடிசைக்குச் சமீபத்தில் நடந்த கொள்ளை கேஸு சம்பந்தமாய் அவர்கள் பிடிபட்ட போதிலும், அந்தக் குற்றத்தை மட்டும் தாங்கள் செய்யவில்லை யென்று சாதித்தார்கள். அவர்கள் அது விஷயமாய்ச் சொன்னது உண்மையாயிருக்கலாம். அவர்கள் குடிசைக்குச் சமீபத்தில் வேறே திருடர்கள் நடத்திய அந்த கொள்ளை மூலமாய், இந்த இருளர் கூட்டம் அகஸ்மாத்தாய் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்கள் செய்த குற்றங்கள் வெளியாயிருக்கலாம். பூஜை செய்பவர் வீட்டில் நடந்த கொள்ளையை, அந்த இருளர்கள் தாங்களே செய்ததாக ஒப்புக்கொண்டு களவுபோன சில சொத்துக்களை திருப்பிக் கொடுத்ததால், தண்டனைக் குள்ளானர்கள். அப்படிப்பட்ட சொத்துகளில், பூஜைசெய்பவர் களவுபோனதாகச் சொன்ன கோவில் சொத்தும் அகப்பட்டு, கொள்ளை நடந்தது பொய்யென்று

சிலர் நினைத்திருந்தது தவறு என்று வெளியாயிற்று. போலீஸ் உத்யோகஸ்தர் தங்கள் வேலையைத் திறமையுடன் செய்வதற்கு, கிராமத்தாரது அநுசரணை வேண்டியது அவசியமென்று இந்த கேஸால் விளங்குகிறது. முதல்பாகம் IV அதிகாரம் (2) இலக்கம் பார்க்க.

மேலும் ஓரிடத்தைச் சுற்றி நடந்திருக்கும் குற்றங்களையெல்லாம் சேர்த்து ஆலோஜனை செய்து அவைகளைக் கண்டுபிடிக்க முயற்ச்சி செய்யவேண்டியது அவசியமென்றும் ஏற்படுகிறது. (முதல்பாகம் V வது அதிகாரம் (1) லக்கம் பார்க்க.) கொள்ளை நடந்த இடத்திற்குச் சமீபத்தில் கொஞ்ச காலமாய் நடந்து வந்த குற்றங்களையெல்லாம் கவனித்து, அவைகளைப் பற்றி, அந்த இருளனை கிராமமுன்சீப் கேட்காதிருந்தால், இருளன் தான் செய்த பலகுற்றங்களையும் ஒப்புக்கொண்டிருக்கமாட்டான்.

XII

கொலை

ஒரு எதிரி, போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு பொய்யான புலன் சொல்லி அவர்களை தப்புவழியில் விசாரணை செய்யும்படிச் செய்வானென்றும், அதை அறியாமல் எதிரி சொல்லும் வழியில் விசாரணை செய்வதால், வீண்காலம் கழியுமென்றும் முதல்பாகத்தில், கேஸ் கண்டுபிடிப்பதைப் பற்றிச் சொல்லும் VII அதிகாரத்தில் கண்டிருக்கிறது. அது பொய்யாய் ஒப்புக்கொள்வதைப் பற்றிச் சொல்லியது. இந்த கேஸில் ஒரு எதிரி எப்படி தான் கொலைக் குற்றத்திலிருந்து

தப்புவதற்காக தானே மனதார ஒரு பொய்பிராது ஸ்டேஷனில் நேரில் போய் செய்தானென்று சொல்லப்படும்.

ஒரு கூலிக்காரன் தன்பெண்சாதி, பக்கத்து வீட்டுக்காரனுடன் அதிக சிநேகிதமாயிருப்பதாகச் சந்தேகப்பட்டு, அவள்தப்பாய் நடக்கும்போது நேரில் பிடிக்க வேண்டுமென்று எண்ணினுன். ஒருநாள் இரவில் பக்கத்து வீட்டுக்காரன் தனியே இருக்கும்போது, தன் பெண்சாதியை அவனிடம் சென்று வெற்றிலே வாங்கிக் கொண்டுவரும்படி ஏவினுன். ஏன் தன்னே இம்மாதிரி அனுப்புகிருனென்று அறிந்து கொண்டு, இரவில் நேரம் சென்றபிறகு தனியாயிருக்கும் ஒரு அயலானிடம் தான் போய் கேட்கமாட்டேனென்று அவள் சொல்லிவிட்டாள். இம்மாதிரி தன் எண்ணம் நிறைவேருமல் போகவே, இதற்கு முந்தி அந்த அயல்வீட்டுக்காரனுடன் தனியாயிருந்தபோது பலமுறை அவனிடம் பேசிக்கொண்டிருந்ததாக, அவள் பேரில் குற்றம் சுமத்தினுன். அவள் அதை ஒப்புக்கொள்ளாமல் போகவே, அவர்களுக்குள் சச்சரவு உண்டாயிற்று. பேச்சுந்தடித்து அடிதடி சண்டையாய் விளேந்தது. எவனே தன் சம்சாரத்தின் சிநேகிதன் என்று எண்ணினுனே அவனுள்பட, அநேக அண்டைவீட்டுக்காரர்கள் வந்து அவனே சமாதானப்படுத்தப் பார்த்தார்கள். தனது சம்சாரத்தின் நடவடிக்கைக்குத் தக்கபடி அவளே தான் கண்டிக்கும்போது, தன்னேத் தடுப்பவர்களேக்கொலே செய்து விடுவதாகப் பயமுறுத்தினுன். அவர்கள் திரும்பிப் போய் விட்டபிறகு, கடைசியாய் கையிலகப்பட்ட ஒரு உலக்கையால் தனது பெண்சாதியை தலேயில் அடிக்கவே, அவள் இறந்துபோனுள். இம்மாதிரி தனது மனேவியைக் கொலேசெய்த பிறகு, அரைமயில் தூரத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், தன் சம்சாரத்தின் நெருங்கிய சிநே

கிதன் என்று தான் சந்தேகித்த அண்டைவீட்டுக்காரன், தன் சம்சாரத்தை அடித்துக் கொலை செய்து விட்டதாகப் பிரியாது செய்தான். தான்வீட்டிலில்லாத பொழுது தன் பெண்சாதியை எதிரி பலாத்காரம் செய்ததாகவும், அவள் மறுதளிக்கவே, அவளை ஒரு உலக்கையாலடித்து விட்டு ஓடியதை வீட்டிற்குத் திரும்பிவரும்போது தான் பார்த்ததாகவும், நடந்த விஷயத்தைச் சொன்னவுடன் தன் பெண்சாதி இறந்து விட்டாளென்றும், பிரியாது கொடுக்கும்போது ஸ்டேஷனில் முறையிட்டுக் கொண்டான். இந்தப்பிரியாதைக் கொடுத்தபிறகு, அவன் ஸ்டேஷனிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் நழுவி விட்டான். பிரேத விசாரணைக்கு, ஸ்டேஷன் ஆபீசர் அவன் வீட்டிற்குப் போனபோது அவன் அங்கில்லை. இதற்கிடையில் கிராமமுன்சீப் ரிபோர்ட்டு கிடைத்து அதைப் பார்வையிட்டதில், பிரியாது கொடுத்த இந்தக் கூலிக்காரனே தன் பெண்சாதியைக் கொன்று விட்டதாகக் கண்டிருந்தது. கி. பி. கோ. 174-வது செக்ஷன் பிரகாரம் நடத்திய பிரேத விசாரணையில் பிரியாதிதான் தன் பெண்சாதியைக் கொலை செய்தவன் என்று தெளிவாய் விளங்கிற்று. பிரியாது கொடுத்த பிறகு அவன் ஒளிந்து கொண்டான். சிலகாலம் கழித்து அவனைத் தேடிபிடித்த பிறகு, தானே தன் மனைவியைக் கொன்றதாக ஒப்புக்கொண்டதின் பேரில், தூக்கு தெண்டனைக்குள்ளானன். கேஸுகளில் அடிக்கடி சம்பந்தப்படாதவர்களை குற்றம் சாட்டுவது வழக்கம். மேலும், முக்கியமாய் கொலைக் கேஸுகளில் அப்படி செய்கிறபடியால், கேசை விசாரிக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் இது விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

XIII

சுபாவ மரணத்தை கொலையென்று சந்தேகித்த கேஸு

ஜன நடமாட்டம் மிகுந்த ஒரு ரஸ்தாவின் பக்கத்துக் கால்வாயிலுள்ள மணலில், ஒரு குழந்தையின் பிரேதம் புதைபட்டிருப்பதாயும், அதன் காலில் ஒன்று மட்டும் வெளியில் தெரிவதாயும், ஒருநாள் காலையில் ஒரு ரிபோர்ட்டு போலீஸ் ஸ்டேஷனில் கிடைத்தது. அந்தப் பிரேதத்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் வெளியில் எடுத்துப் பார்த்த பொழுது, அது ஒரு ஆணும், அதன் தொப்புள் கொடிக்கு ஆஸ்பத்திரியில் கட்டிய கட்டுடனும் காணப்பட்டது. கி.பி. கோ. 174-வது செக்ஷன் பிரகாரம் வழக்கமாய் செய்யும் பிரேதவிசாரணை செய்து முடிந்தவுடன், அந்தக் குழந்தையை யாரோ ஒரு விதவை ரகசியமாய்ப் பெற்று, அதை கழுத்தை அமுக்கிக் கொன்று, அந்த இடத்தில் புதைத்திருக்க வேண்டுமென்று பஞ்சாயத்தார் அபிப்பிராயப்பட்டார்கள். இந்த விஷயத்தில் பஞ்சாயத்தார்கள் சாட்சியில்லாதிருந்தும் தங்கள் மனம்போன வழியில் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள் என்று நன்குவிளங்கும். பிரேதவிசாரணை செய்த போலீஸ் உத்தியோகஸ்தன் தனக்கு அந்த அபிப்பிராயமில்லை யென்றும், குழந்தை ரகசியத்தில் பெற்றதல்ல வென்றும், அது கழுத்தை யமுக்கிக் கொல்லப்படவில்லை யென்றும் எழுதி, தன் பிரேத விசாரணை ரிபோர்ட்டைப் பூர்த்தி செய்தார். ஏனென்றால், தொப்புள் கொடி கட்டப்பட்ட மாதிரியிலிருந்து குழந்தை ஆஸ்பத்திரியில் பிறந்திருக்கலாமென்று ஊகித்தார். குழந்தை பிறந்ததை

மறைக்க வேண்டுமென்ற எண்ணம் அதன் தாய்க்கு இருந்திருக்குமாகில், பிரஸவிக்க ஒரு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்க மாட்டாளென்று நினைத்தார். குழந்தை தொப்பிளைச் சுற்றிக்கட்டிய கம்பளித் துண்டை எடுத்து பத்திரப் படுத்திக் கொண்டு அதைப்பற்றி விசாரித்ததில், குழந்தையின் பிரேதம் கிடந்து அகப்பட்ட இடத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு பெரிய நகரத்தின் ஒரு ஆஸ்பத்திரியில் மாத்திரம்தான் அம்மாதிரி கம்பளித்துண்டு தொப்புள் கட்ட உபயோகப்படுத்துகிறார்களென்று ஏற்பட்டது. அந்த ஆஸ்பத்திரியிலுள்ள ரிஜிஸ்டர்களைப் பரிசோதித்துப் பார்த்ததில், இந்தப் பிரேதம் அகப்பட்டதற்கு முந்தி ஒரு வாரத்தில் 167 குழந்தைகள் பிறந்தன வென்றும், அதில் 80 பெண் குழந்தைகளென்றும் கணக்கு ஏற்பட்டது. அகப்பட்ட பிரேதம் ஆணானதால் அந்த ஆஸ்பத்திரியில் பிறந்த 87 ஆண் குழந்தைகளும் என்னவாயிற்றென்று விசாரிக்கப்பட்டது. அதில் 86 குழந்தைகள், அதின் தாய் வீட்டிலோ அல்லது ஆஸ்பத்திரியிலோ உயிருடனிருப்பதாகவாவது, அல்லது இறந்துபோய்விட்டதாகவாவது தெரிந்தது. பாக்கியிருக்கும் ஒரு குழந்தை தான் அகப்பட்ட குழந்தையென்று பின்வருமாறு ஏற்பட்டது. பிரஸவ வேதனையுடன் பக்கத்து கிராமத்திலுள்ள ஒரு பெண்பிள்ளை இந்த ஆஸ்பத்திரிக்கு வந்து இங்கு இரட்டைக் குழைந்தைகளைப் பெற்றாள். அதில் ஒரு குழந்தை பிறந்த சில நேரத்திற்கெல்லாம் மரித்தது. அதை ஆஸ்பத்திரியிலுள்ளவர்களை புதைக்க ஏற்பாடு செய்து விட்டார்கள். இரண்டு நாள் பொறுத்து, இரண்டாவது குழந்தையும் இறந்தது. இது றந்த கொஞ்ச நேரத்தில், ஆஸ்பத்திரியில் தன் தாய் எப்படி யிருக்கிறாளென்று பார்ப்பதற்கு அவளுடைய யிரண்டு

சிறு ஆண்பிள்ளைகள் வந்தார்கள். ஆஸ்பத்திரியிலுள்ள சிப்பந்திகள், இந்தச் சிறு பிள்ளைகளை இறந்துபோன குழந்தைக்கு வார்ஸுக்காரர்களென்று ஏற்பாடு செய்து அந்தப் பிரேதத்தை தங்கள் கிராமத்திற்குக் கொண்டு போகும்படி சொல்லி அவர்கள் கையில் ஒப்பிவித்தார்கள்.

இம்மாதிரி நகரத்துக்கு வெளியில் கொண்டுபோகப் பட்டது, இந்த ஒரு குழந்தையின் பிரேதம்தானென்று தெரிந்தவுடன் அதைக் கொண்டு போயிருக்கவேண்டிய கிராமத்திற்குப் போலீஸ் உத்தியோகஸ்தர் சென்று அந்தச் சிறுவர்களைக் கண்டு விசாரித்தார். அவர்கள் அந்தப் பிரேதத்தை ரஸ்தாபக்கத்தில் அது அகப்பட்ட இடத்திலேயே புதைத்ததாக ஒப்புக்கொண்டார்கள். அந்தச் சவத்தை அந்த இடத்திற்குக் கொண்டுவந்தபோது இரவில் நேரமாய் விட்டதாயும், அதற்குமேல் அதை தங்கள் கிராமம் வரையில் சுமக்க அவர்களுக்குத் திராணியில்லாததால் அதை அங்கு புதைத்து விட்டதாயும் சொன்னார்கள்.

ஆகையால் கொலையென்று முதலில் சந்தேகித்த இந்த கேஸு சுபாவ மரணமாக ஏற்பட்டது. குற்றங்களைக் கண்டு பிடிக்க முயலும் போது, எவ்வித அவசரமான தீர்மானத்திற்கும் வரக்கூடாதென்றும், நமது நாட்டிலுள்ள மனிதர்களைப் பற்றியும் வஸ்துக்களைப் பற்றியும் நமக்கு நன்றாய் தெரிந்திருக்க வேண்டுமென்றும் இந்தக் கேஸிலிருந்து நாம் அரிந்து கொள்கிறோம். முதல்பாகம் VIII அதிகாரம் (1) லக்கம் பார்க்கவும்.

XIV

கொலை நடவாமல் தடைபட்ட கேஸ்—

வெகு அபூர்வமாய்தான் நடக்கப்போகிற கொலையை முன்னமே தெரிந்துகொண்டு அதை நடவாமல் தடுக்கக் கூடும். அதற்குக் காரணம் அநேக கொலைகள்: முன்யோசனையுடன் செய்யப்படுகிறதில்லை; முன்யோசனையுடன் செய்யும் சில கொலைகளும் வெகு ரகசியமாயும் பிறர் அறியாமலும் செய்யத்தீர்மானிக்கப்படுகிறது. பின்வரும் கேஸினால் குற்றங்களைக் கண்டுபிடிக்க துப்பாளிகள் முக்கியமாய் தேவையென்றும், அவர்கள் உதவியால் கொலைகள்கூட சிலசமயங்களில் தடுக்கப்படுகிறதென்றும் அறிந்து கொள்ளலாம்.

ஒரு ஸ்திரீயின் விஷயமாய், ஒரு யௌவன வயதுள்ளவன், தனக்குப் போட்டியாயிருந்த மற்றொருவனைத் தொலைத்துவிடக் கருதி, அவனுடன் மேலுக்குமட்டும் வெகு சிநேகிதமா யிருப்பதாக நடித்து வந்தான். ஒரு நாள் கொஞ்சதூரத்திலுள்ள ஓரிடத்திற்கு வேடிக்கையாய் போய் வரலாமென்று அவனைக் கூட்டிக்கொண்டு அந்த இடத்திற்குச் சென்றான். அவர்கள் போன இடத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனுண்டு. மேலும் அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டரது ஆபீஸும் அந்த இடமே. இவர்களுடன் அந்த வாலிபனால் ஏவப்பட்ட சில அயோக்கியர்களும் பின் தொடர்ந்தார்கள். இவர்கள் தாங்கள் உத்தேசித்த காரியத்தைச்செய்து முடிக்க போன இடத்திலுள்ள சில குடிகாரர்களையும் சேர்த்துக் கொண்டார்கள். பிந்தி சேர்ந்தவர்கள், வாலிபனோடு வந்திருக்கும் மனிதனை நன்றாய் புடைத்து அனுப்ப ஒத்துக்

கொண்டார்களேயொழிய கொலை செய்யச் சம்மதப் படவில்லை. ஆனால் அந்த வாலிபன் தனக்கிடைஞ்சலா யிருப்பவனை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்றும் அப்படி செய்வதற்குத் தக்க பணம் கொடுப்பதாயும் சொன்னான். இது விஷயத்தைப்பற்றி அந்த அயோக்கியர்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போது அதிலொருவன் அந்த இடத்தை விட்டு நழுவி, தனக்கு நன்றாய் தெரிந்திருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் போய், நடந்து கொண்டிருக்கும் விஷயங்களைத் தெரிவித்தான். உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அந்த இடத்திற்குப் போய், தான் அந்த ஊர் அயோக்கியர்களுக்கெல்லாம் தலைவனென்று நடித்து, அந்த வாலிபன் விரும்பும் குற்றமுள்ள செய்கையை தான் செய்து முடிப்பதாக ஒப்புக்கொண்டார். அப்போது இரவு 9-30 மணி இருக்கும். இம்மாதிரி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், கொலை செய்யப்பட வேண்டியவன் தன்னுயிருக்கு ஆபத்துண்டென்பதை யறியாது வாலிபனது ஆள்களில் ஒருவனால் அவர்கள் வந்திருந்த இடத்திலுள்ள சில விநோதக் காட்சிகளைக் காட்டப்பட்டு, அவைகளைப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தான் அந்தவூர் போக்கிரிகளுக்கு முதல்வன் என்றும், தன்னால் அந்தக் கொலையை செய்ய முடியுமென்றும், அந்த வாலிபன் நம்பும்படி நடந்தார். அவரை நம்பி தன்னுடைய பொன் அரை ஞாணையும், கடுக்கன்களையும் கழட்டிக்கொடுத்து, அவைகளை ஈடுவைத்து, சர்க்கிள் இன்ஸ்பெக்டரையும் அவரைச் சேர்ந்த ஆட்களையும் சாராயம் முதலிய போதை வஸ்துக்களை சாப்பிட அந்த வாலியன் ஏற்பாடு செய்தான். மேலும் அந்தக்கொலை செய்வதற்கு ரூபாய் 60 கொடுப்பதாயும் அவர் குற்றம் செய்ததாக வெளிவருமாயில் அவரைத்தப்பு

விக்க வேண்டிய உதவி செய்வதாயும், சர்க்கிள் இன்ஸ்பெக்டருடன் எழுத்து மூலமாய் உடன்படிக்கை செய்து கொண்டான். அதற்குப் பிறகு, அவரிடத்தில் கொலை செய்வதற்காக ஒரு கத்தியையும் கொடுத்தான். அதை வாங்கிக்கொண்டு அந்த வாலிபனை தனக்கு துப்புச்சொன்னவன் வீட்டிலிருக்கச்செய்து, அரைமணிநேரத்திற்குள் தன்னுடைய ஆள்களுடன் திரும்ப வந்து அவன் கோரிய காரியத்தைச் செய்து முடிப்பதாகச் சொல்லிவிட்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் போனார். சற்று நேரத்திற்கெல்லாம் எதிர்பார்த்த கொலையாளிகளுக்குப் பதிலாய் ஒரு சப் இன்ஸ்பெக்டர் அந்த வாலிபனிருந்த வீட்டிற்குள் வந்து, அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பிடித்துக்கொண்டு ஸ்டேஷனுக்குப்போனார். கி. பி. கோ. 364-வது செக்ஷன் பிரகாரம் ஒரு கேஸு தாக்கலாய் செஷன் கோர்ட்டில் விசாரணையாய் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். இந்தக் கேசைக் கண்டுபிடித்ததாகச் சொல்லும் வகை, யெவ்வளவு சாமர்த்தியமுள்ள போலீஸ் உத்தியோகஸ்தராலும் செய்திருக்கமுடியாத அவ்வளவு அசாத்தியமானதென்று செஷன் ஜட்ஜு அபிப்பிராயப்பட்டு, இந்த கேசை விடுதலைசெய்தார். கேசில் ஜயமடையாதுபோன வருத்தத்தை, இந்த செய்கை அசாத்தியமென்று ஜட்ஜு அபிப்பிராயப்பட்டதைக்கொண்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டார். ஏனென்றால், ஜட்ஜு நம்பாவிட்டாலும், தான் அம்மாதிரி செய்துமுடித்தது தன் மனதிற்குத்திட்டமாய் தெரியுமாதலால், அவர் சந்தோஷமடைந்தார். கேஸு தவரிப்போன போதிலும் துப்புச்சொல்லுபவன் தகுந்தசமயத்தில் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு சொன்ன சமாசாரத்தால், கொலை நடப்பது தடுக்கப்பட்டு, குற்றவாளிகள் கோர்ட்டில் நடந்த விசாரணையில் எதிரி ஸ்தானத்திலிருந்து, அதினாலுண்டான கஷ்

டத்திற்கும் செலவிற்கும் உள்ளானார்கள். முதலாவது பாகத்தில் X-வது அதிகாரத்தில்துப்புச்சொல்லுபவர்களை சம்பாதிப்பது எவ்வளவு முக்கிய மென்று சொல்லப்பட்டிருக்கிறது.

XV

ஏழு கொள்ளைக்காரர்கள் பேரில் நடந்த ஜாமீன் கேஸு

கிராம பீட்டிலனுப்பப்பட்ட ஒரு ஜவான், அவன் போன ஒரு கிராமத்தில் ஏழு பெயர்கள் சேர்ந்த ஒரு கூட்டத்தைக்கண்டான். அவர்கள் நடவடிக்கை சந்தேகமாகத் தோன்றியதால், போலீஸ் ஸ்டேஷனிலிருந்து யாரும் வரும் வரை அவர்களைக் கவனமாய் கண்ணோக்கம் வைக்கும்படியாய் கிராம முன்சிப்புக்குத்திட்டம்செய்து விட்டு, ஸ்டேஷனுக்கு வந்து, ஸ்டேஷன் ஆபீசரிடம் தான் ஒரு கூட்டத்தைப் பார்த்ததையும் அவர்ளுடைய நடவடிக்கைகளைப்பற்றியும் தெரியப்படுத்தினான். ஸ்டேஷன் ஆபீசர், உடனே அந்த கிராமத்திற்குப்போய், சில கிராமத்தாரின் உதவியின் பேரில் இந்த கூட்டத்தார் இறங்கியிருந்த ஒரு தனியான தோப்பிற்குச்சென்று, அவர்கள் அங்கு சமையல் செய்து கொண்டிருக்கும்போது அவர்களைசூழ்ந்து கொண்டார். அவர்கள் மூட்டைகளையும் தங்கியிருந்த இடத்தையும் சோதனை செய்தபோது, அநேக கன்னமிடுமோயிதங்களும் தச்சுவேலை செய்வதற்குபயோகமான கருவிகளும் கிடைத்தன. எண்ணெயில் நனைத்து வைத்திருந்த இரண்டு பெரிய பந்தங்களும் அகப்பட்டன. அவர்களைப் பிடித்து I-வது கிளாஸ் மாஜிஸ்டி

ரேட்டின் உத்தரவின் பேரில் ரிமாண்டில் வைக்கப்பட்டது. அவர்களது விரலளவு எடுத்து மேலாவுக்கு அனுப்பியதில், அவர்களுக்குப் பல முந்தின தண்டனைகளிருப்பதாயும், அவைகளில் சில, கூட்டக் கொள்ளைகளுக்கென்றும் ஏற்பட்டன.

பிடிபட்டயிடத்திற்கு 200 மயிலுக்குத் தெற்கேயுள்ள எதிரிகளின் சொந்தஜில்லாவில், இவர்களில் மூவர் அடிக்கடி குற்றம் செய்யும் பழக்கம் மாருதவர்களென்று தணிக்கை செய்யும் கே. டி. ஜாப்தாவில் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். இவர்களைத்தணிக்கை செய்யப் போன ஒரு திறமையுள்ள ஜவான், இவர்களிலொருவன் கிராமத்தில் ஆஜரில்லாதிருக்கக்கண்டு, அவனைப்பற்றி விசாரித்ததில், அவன் ஆறு கொள்ளைக்காரர்களைச் சேர்த்துக் கொண்டு வடக்கிலுள்ள ஒரு ஜில்லாவில் பணக்காரனுன ஒரு வைசியன் வீட்டில் கொள்ளையடிக்கப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டான். மேலும் அந்த வைசியனுக்கு விரோதியான ஒருவன் இந்த கூட்டத்தைச் சேர்த்து அழைத்துக் கொண்டு போயிருப்பதாயும் தெரிந்து கொண்டான். இது விஷயங்களை தன்னுடைய இன்ஸ்பெக்டருக்கு ரிபோர்ட்டு செய்ததின் பேரில், அவர் இந்த சமாசாரங்களை தன் தினசரி ரிபோர்ட்டில் (Diary) எழுதவே, அது சம்பந்தப்பட்ட ஜில்லாவுக்கு உடனே அனுப்பப்பட்டது. அந்த ரிபோர்ட்டு வந்து சேரும் பொழுது அதில் சொல்லப்பட்ட கொள்ளைக்காரர்கள் பிடிபட்டு ஏற்கனவே ஒருவாரத்திற்கு மேல் காவலில் இருந்தார்கள். இரண்டு ஜில்லாவிலும் விசாரணை செய்து, அந்த வைசியனும், அவனது விரோதியும் யாரென்று கண்டுபிடிக்கப்பட்டார்கள். மேலும், இந்த கொள்ளைக்காரர் கூட்டத்தில் சேர்ந்த சிலரை

கொள்ளையடிக்க இந்த எதிரிகள் கூப்பிட்டபோது வரமாட்டோமென்று மறுதளித்தது தெரிந்து, அவர்களது சாட்சியத்தால் இவர்கள்கூட்டக்கொள்ளையடிக்கத் தயாரித்தார்கள் என்றுகோர்ட்டில் ருஜுப்படுத்தப் பட்டது. இந்தக் கேஸில் சாட்சியம் பலமாயிருப்பதாக அபிப்பிராயப்பட்டு, இதை விசாரித்த I-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டு, அவர்களிடத்தில் 3-வருஷ காலத்திற்கு நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்கினர். ஜாமீனுய் நிற்பதற்கு ஆள்கள் அகப்படாததால் அவர்கள் ஜெயிலுக்குப் போனர்கள்.

இந்த கேஸிலிருந்து ஏற்படுகிறதென்னவென்றல், 200-மயில் தூரத்திற் கப்பாலுள்ள இரண்டிடங்களிலுமுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தனித்தனி திறமையாய் செய்த கிராமபீட்டுவேலை ஒன்றிற்கொன்று வெகு உதவியாயிருந்து, ஒரு முக்கியமான கேஸில் சாட்சியாய் உபயோகப்பட்டது என்பதே. கிராம பீட்வேலை முக்கியமானது என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டுவதில்லை. மேலும் இந்த கேஸிலிருந்து, இந்த வேலையைத் திறமையுடனும் ஜாக்கிரதையாயும் செய்தால் எவ்வளவு நன்மைவிளையுமென்பதும் விளங்குகின்றது. முதல்பாகம் IV அதிகாரம் (4) லக்கம் பார்க்க.

XVI

பாமுலவார் என்ற கூட்டத்தாரின் பேரில் ஜாமீன் கேஸ்

பாமுலவார் என்று சொல்லப்பட்ட தெலுங்கு இடையர்கள், தமிழ் நாட்டில், கிராமத்திற்குக் கிராமம்போய், இடையர்களை மிரட்டி இனும் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வெளிப்படையாய் கிராமங்களில் தங்கிவந்தார்கள். அவர்கள் சொற்ப பிச்சையை, அதட்டி வாங்கினார்கள் என்றது தவிர அவர்கள் பேரில் வேறு புகாரா கிடையாது. ஆனால் அவர்கள் தங்கியிருந்த கிராமத்தை சுற்றிலும் அடிக்கடி வீட்டிற்கு முன்பக்கத்தில் சுவற்றில் கன்னம் வைத்து சொத்துகள் களவு போய்க் கொண்டிருந்தன. கன்னவாசலில் ஆணிபோல் கூர்மையான ஆயுதத்தால் சுவறு தோண்டப்பட்டதான அடையாளங்கள் ஒவ்வொரு இடத்திலும் காணப்பட்டன. இந்த பாமுலவார் கூட்டத்தின் மூட்டை முடிச்சுகளை பலதடவை சோதனை செய்துபார்த்தும் எவ்வித தடயமும் அவர்களிடத்திலகப்படவில்லை. ஆனால் இந்த கன்னக்களவுகளுக்கு இவர்கள் தான் காரணமாயிருக்கவேண்டுமென்ற சந்தேகம் பலமாய் ஏற்பட்டிருந்தது. அவர்களை வெளிப்படையாய்க் காவல்கார்த்து வந்த இரண்டு ஜவான்களையும் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு, திறமையும் வேலையில் ஊக்கமுமுள்ள இரண்டு ஜவான்களை உடுப்பில்லாமல் கொஞ்ச தூரத்திலிருந்து இந்தக் கூட்டத்தாரை அடிக்கடி போய் கவனித்து வரும்படி திட்டம் செய்யப் பட்டது. ஒருநாள் சாயந்திரம், இரண்டு ஜவான்களில் ஒருவன், அந்த இடையர்கள் கூட்டத்தில் தானிது வரையில் பார்க்காத புதிய

173914

பெண் ஒருவளைக் கண்டான். சந்தேகத்தின் பேரில் அவளை ஜாக்கிரதையாய்கவனித்து வந்தான். கொஞ்சநேரத்திற்கெல்லாம் அந்தப் பெண் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டாள். அவளுக்குத் தெரியாமல் ஜவானும் பின்தொடர்ந்து சென்றான். அன்றிரவு அவள் ஒரு சத்திரத்தில் தங்கி, மறுநாள் காலையில் இடையர் கூட்டம் தங்கியிருந்த கிராமத்திற்கு 16 மயில் தூரமுள்ள மற்றொரு கிராமத்திலிருந்த இதே ஜாதியாருடைய ஒரு சிறு கூட்டத்தைப் போய் சேர்ந்தாள். இதை அறிந்த ஜவான், உடனே தான் கண்டு பிடித்த சமாசாரத்தைப் பற்றி ஒரு ரிபோர்ட்டு எழுதி ஒரு கூலியாள் மூலமாய் ஸ்டேஷனுக்குத் தெரிவித்தான். இரண்டாவது கூட்டம் தங்கியிருந்த இடம் வேறுபோலீஸ் சர்க்கிளுக்குச் சேர்ந்ததால், ஜவானது ரிபோர்ட்டு ஸ்டேஷனில் கிடைத்தவுடன், ஸ்டேஷன் ஆபீசர் தன் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்குத் தெரியப் படுத்தினர். இன்ஸ்பெக்டர் இது தானே கவனிக்க வேண்டிய விஷயமாக எண்ணி, சேகரிக்கக் கூடிய போலீஸ் சிப்பந்திகளைத் திரட்டி, அதை இரண்டு பாகமாகப் பிரித்து, அவர்களைக்கொண்டு இந்த இரண்டு கூட்டத்தையும் ஒரேசமயத்தில் மறுநாள் பொழுது விடியு முன்னே சூழ்ந்து கொள்ள ஏற்பாடு செய்தார். 16 மயிலுக்கப்பாலுள்ள கூட்டத்தை பிடிப்பதற்கு தானே புறப்பட்டார். சமீபத்தில் வெளிப்படையாய் தங்கிய கூட்டத்தை பிடிக்க, ஸ்டேஷன் ஆபீசர் வேறுவேலை யாய்ப் போயிருந்ததால், ஒரு சார்ஜண்டை நியமித்தார். அவர் செய்த ஏற்பாடு நன்ருய் அமைந்தது. இரண்டு கூட்டத்திலு முள்ள நபர்களெல்லோரும் ஒரேசமயத்தில் பிடிபட்டார்கள். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பிடித்த கூட்டத்தாரின் தங்குமிடத்தை சோதனை செய்ததில், நுணி ஊசிபோல் கூர்மையுள்ள

22/4/93

உருண்டையான நான்கு இரும்பு கடப்பாரைகள் கிடைத்தன. அவைகள் கன்னத்துவாரங்களில் தென்பட்ட அடையாளங்களைச் செய்யக் கூடிய அளவாயிருந்தன. இந்தக் கூட்டத்திலிருந்த ஆண் பிள்ளைகள் வலுவுள்ளவர்களாயும், யௌவன வயதுள்ளவர்களாயும் காணப்பட்டார்கள். கடப்பாரைகளைப் பற்றி விசாரித்ததில் தங்கள் பன்றியை இரவில் கட்டிவைப்பதற்காக தங்களுக்குத் தேவையென்று சொன்னார்கள். இந்த இரண்டு கூட்டத்திலுள்ளவர்களும் நெருங்கின பந்துக்கள் என்று ஏற்பட்டது. அப்படி யிருந்தும் ஏன் இவ்வளவு தூரத்தில் தனித்தனி கூட்டமாகத் தங்க வேண்டுமென்ற கேள்விக்குத் திருப்திகரமான பதில் அவர்களால் சொல்ல முடியவில்லை. ஆனால் அவர்களிடத்தில் கன்னக்களவுகளில் களவுபோன சொத்துகள் ஒன்றும்அகப்படாததால், அவர்களெல்லோரிடத்திலும் நல்ல நடத்தைக்கு ஜாமீன் கேள்கப்பட்டு ஜாமீன் கொடுக்க முடியாததால் ஜெயிலுக்குப் போனார்கள்.

இம்மாதிரி குற்றஞ் செய்யும் ஒருபெரிய கூட்டத்தார், போலீஸ் உத்தியோகஸ்தர்களை ஏமாற்றுவதற்காக, சில சிறுகூட்டங்களாகப் பிரிந்து, குற்றம் செய்வதற்காக மாத்திரம் இரகசியத்தில் ஒருவருக்கொருவர் சமாசாரம் தெரியப்படுத்திக் கொள்ளுவது, அவர்களுக்கு வழக்கமாய் ஏற்பட்ட தந்திரம்.

ஒரு ஜவான் ஒரு சிறு பெண்ணை விடாமுயற்சியாய் அநேகமயில் தூரம் ஒருவரும் சந்தேகப்படாதபடி பின்துடர்ந்து போய், ஒரு குற்றம் செய்யும் கூட்டசதாரை கண்டுபிடித்ததற்கு, இந்தக் கேஸு ஒரு உதாரணமாயிருக்கிறது. முதல்பாகம் VII அதிகாரம் (1) வது லக்கமும், IX அதிகாரம் (3) லக்கமும் பார்க்க.

XVII

ஒரு குறவர் கூட்டத்தின் பேரில் நடந்த ஜாமீன் கேஸு

சாதாரணமாய் குற்றம் நடவாத ஒரு சரகத்தில், திடீரென்று அநேக குற்றங்கள் நடந்துவந்தன. இது விஷயத்தைப்பற்றி விசாரித்துவர, ஒரு திறமையுள்ள ஹெட் கான்ஸ்டேபிள், குற்றங்கள் நடந்துவந்த கிராமங்களுக்கு, போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அனுப்பப்பட்டார். அவர் மூன்றுதினம் கழித்து ஸ்டேஷனுக்குத் திரும்பிவந்து, குறவர்கள் என்று தோன்றும் ஒருபுதிய கூட்டத்தார் ஒரு கிராமத்தின் தோப்பில் தங்கியிருப்பதாயும், அந்தத் தோப்பை சுற்றிலும் காலியான மைதானமென்றும், அந்தத் தோப்பு மூன்று போலீஸ் ஸ்டேஷனின் எல்லைகள் சந்திக்குமிடத்திலிருப்பதாயும் தெரிவித்தார். மேலும் அந்தத் தோப்பிற்கு அப்பால் கொஞ்சதூரத்திலுள்ள ஒரு கள்ளுக்கடைக்காரன் இந்தக் கூட்டத்தாருக்குத் தோப்பிலேயே கொண்டுவந்து கள்ளு விற்பனை செய்வதாயும், இந்தக் கூட்டத்திலுள்ள ஆண் பெண் அனைவரும், கள்ளு மாம்சம்முதலிய பதார்த்தங்களைத் தாராளமாய் விலைக்கு வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருப்பதாயும், எட்கான்ஸ்டேபிள் தெரிந்து கொண்டு வந்தார். ஸ்டேஷன் ஆபீசர் இந்த கூட்டத்திலுள்ளவர்களை பிடிக்கும் பொருட்டு, ஆட்களை சேகரித்து அவர்கள் தங்கியிருந்த தோப்பை சூழ்ந்து கொண்டு, அந்தக் கூட்டத்திலிருந்த வயது வந்த 17 ஆண்பிள்ளைகளில் 14 நபரைப் பிடித்துக் கொண்டார். கொஞ்சநாள் பொறுத்து, ஓடிப்போன மூன்று பெயர்களும் வேறு சரகத்தில் பிடிபட்டார்கள். விசாரித்த

தில், இவர்கள் எல்லோரும் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஒரு குறவர் கூட்டத்திலிருந்து ஓடிவந்து தலைமறைவாயிருந்தவர்களென்று ஏற்பட்டது. மேலும் அவர்களில் அநேகருக்கு முன்தண்டனை பல இருந்ததாகவும் வெளியாயிற்று. பிடிபட்டநபர்களில் ஒருவனுக்கு, முதுகில் துப்பாக்கியால் சுட்டகாயம் ஆறிவந்து கொண்டிருந்தது. இதைப் பற்றி விசாரித்ததில், ஒரு வீட்டில் கொள்ளையடிக்கப் போயிருந்தபோது, வீட்டுக்காரன் துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்தியதால், ஓடமுடியாமல் இந்தக் குறவன் அகப்பட்டுக் கொண்டதாயும், பிறகு அவன் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகக் காவலில் இருந்தபோது தப்பி ஓடிவந்து விட்டதாகவும் ஏற்பட்டது. அகப்பட்டவர்களுள் மூவர் வாரண்டுக்குத் தலைமறைந்து கொண்டிருப்பவர்களென்றும் தெரிந்தது. இந்த கூட்டத்தார் தங்கியிருந்த தோப்பைசுற்றிலுமுள்ள கிராமத்தார்கள், ஸ்டேஷன் ஆபீசர் வேண்டுகோளின்பேரில், மைதானத்தை சுற்றிவளைந்து கொண்டு உதவிசெய்ததால் தான், மூன்று நபர் தவிர மற்றவர்களை பிடிக்க சாத்தியமாயிருந்தது. இந்த 17 நபர்களிடத்திலும் நல்ல நடத்தைக்கு ஜாமீன் வாங்கப்பட்டது. இதில் பிரபல துஷ்டர்களாயிருந்த ஏழுபேரிடத்தில் மூன்று வருஷத்திற்கும், மற்ற பத்துநபர்களிடத்தில் ஒருவருஷத்திற்கும் ஜாமீன் வாங்கப்பட்டது.

கிராம பீட்டு வேலையை ஜாக்கிரதையாய் செய்யாததினால், ஒரு குற்றஞ்செய்யும் கூட்டத்தார், ஒருமாத காலத்திற்குமேல், பல குற்றங்களை நடத்த சந்தர்ப்பம் வாய்த்ததற்கு, இந்த கேஸை ஒருதக்க உதாரணம். அந்த கிராமத்திற்குப் பீட்டு போன ஜவான்கள், திறமையுடன் தங்கள் வேலையை செய்திருந்தால், அம்மாதிரி ஒரு கூட்டம் அந்த கிராமத்தில்வந்து தங்கிய சமாசாரம், ஹெட்கான்ஸ்டேபிள்

கண்டுபிடிப்பதற்கு வெகுநாள் முன்னதாகவே, ஸ்டேஷனுக்குத் தெரிந்திருக்கும். முதல்பாகம் IV அதிகாரம் (3) லக்கம் பார்க்க.

XVIII

கலகக் கேஸு

ஒருகலகத்தை அடக்கும் வேலையை, ஒரு கான்ஸ்டேபிளே செய்யும்படி நேரிடுவது அபூர்வம். ஆனால் அந்த வேலை சம்பந்தமாய், ஒரு முக்கியமான விஷயம், ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தனும் ஞாபகத்தில் வைக்க வேண்டியது அவசியம். அந்த விஷயத்திற்கு உதாரணமாகத்தான், அடியிற் கண்ட கேஸு சொல்லப்படுகிறது.

ஒரு ஊரிலுள்ள சந்தையில், மீன் விற்றுக்கொண்டிருந்த ஒரு பெண் பிள்ளையை, ஒரு நாள் சாயங்காலம், ஒரு செல்வாக்குள்ள நபர், உதாசீனமாய்ப் பேசினான். தனது குப்பத்திலுள்ள ஆண்பிள்ளைகள் மீன் பிடித்து விட்டு சாயங்காலம் வீட்டிற்குத் திரும்பவே, அவர்களிடம் தனக்கு நேர்ந்த அவமானத்தை, அந்த மீன் விற்ற பெண் பிள்ளை சொல்லிக்கொண்டாள். மறுநாள் காலையில் அந்தக் குப்பத்திலுள்ள வயது வந்த ஆண் பெண் யாவரும் ஒரே கூட்டமாய் மீன் விற்றவளை துர்பாஷையாய் பேசினவனது வீட்டிற்குச் சென்று, கற்களை வீட்டின்மேலெறிந்து, அந்த வீட்டுக்காரனை அவதூறாய்ப் பேசினார்கள். இந்தக் கலகம் நடந்ததற்கு மூன்று பர்லாங்கு தூரத்தில் போலீஸ் ஸ்டேஷனிருந்தது. இது நடக்கும் சமயத்தில், ஸ்டேஷன் ரைடர் வேலை பார்க்கும் ஹெட்கான்ஸ்டேபிள், ஸ்டேஷன் அதிகாரியாயிருந்தார். கலகம் நடப்பதாகத் தெரிந்தவுடன், துப்பாக்கிகளைத் தரித்த சில ஜவான்களை அழைத்துக் கொண்டு,

கலகம் நடக்கும் ஜாகாவிற்குப் போனுர். போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வருவதைக் கண்டவுடனே, மீன் பிடிக்கும் வலையர்கள், அரைமயில் தூரத்திலுள்ள தங்கள் குடிசைகளுக்கு திரும்பி ஓடினுர்கள். போலீஸ் சிப்பந்திகள், அவர்கள் குடிசைக் கருகே போகும்வரை அவர்களைத் துரத்திக் கொண்டுபோன பிற்பாடு, ஹெட்கான்ஸ்டேபிள் ஒருகுண்டு தோட்டாவை சுட்டு, வலையர்களில் ஒருவனை காலில் காயப் படுத்தினுர். இப்படி, ஒரு அபாயகரமான ஆயுதத்தால் ஒருவனுக்குக் கொடுந்துன்பம் உண்டு பண்ணிய குற்றத்திற்காக, ஹெட்கான்ஸ்டேபிள் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு, கடைசியில் டிபார்ட்டுமெண்டு சிக்ஷையுடன் தப்பினுர். வலையர்கள் கலகம் செய்த குற்றத்திற்காக தண்டிக்கப் பட்டார்கள்.

போலீஸ் வருவதைப் பார்த்தவுடன், கலகக்காரர்கள் ஓடிவிட்டதனுல், அவர்களைச் சுடவேண்டிய அவசியம் இந்த கேஸில் அடியோடு இல்லை. அவர்கள் வீட்டிற்குள் நுழைந்த பிறகு மறுபடி திரும்பி வெளியில் கலகத்திற்கு வராதபடி அவர்களைப் பயமுறுத்துவதற்காகத்தான், அம் மாதிரி தான் சுட்டதாக ஹெட்கான்ஸ்டேபிள் முகாந்தரம் சொன்னுர். கலகத்தை அடக்கும்போது, துப்பாக்கியால் சுடுவதைப் பற்றி அநுபந்தம் B ல் சொல்லியிருக்கும் விதிகளால் இது ஒரு தவறுதலான அபிப்பிராயம் என்று நன்கு விளங்கும். முதல்பாகம் XI-வது அதிகாரம் (1) லக்கத்தையும் பார்க்க.

சுடவேண்டிய சந்தர்ப்பத்தில் உடனே துப்பாக்கியை உபயோகப்படுத்த வேண்டியது வெகு முக்கியம். அதே மாதிரி அவசியமில்லாத போது சுடாமலிருப்பதும் அதினும் முக்கியமானது.

அனுபந்தம்

அனுபந்தம் A.

போலீஸ் உடுப்பு. (Uniform).

போலீஸ் சிப்பந்திகளின் உடுப்புகளைப்பற்றி கடைசியாய் பிரசுரம் செய்யப்பட்ட உத்திரவுகளின் சுருக்கம்.

கோட்டுகள்,

1. கோட்டுகள், விசில் பாக்கெட்டுகள் (Whistle-pockets) இல்லாமலும், கைகளின் நுனியும், கோட்டுகளின் அடியும் தைக்காமலும் கொடுக்கப்படும். தைக்காமலிருக்கும் பாகங்களை அவரவர்கள் ஜில்லாக்களிலேயே மடித்துத் தைப்பதற்கு போதுமான துணிவிட்டிருக்கும்.

2. பாக்கெட்டின் அடிபாகம் கோட்டின் அடிபாகத்திற்குமேல் 4 அங்குல மிருக்கவேண்டும். கோட்டுகளின் உயரத்தை எப்போதாவது குறைத்துத் தைக்க நேரிட்டால், பாக்கெட்டுகளை மேற்கூறிய அளவிலேயே தூக்கி வைத்துத் தைக்க வேண்டியது.

3. விசில் பாக்கெட்டுகளை ஜில்லாக்களிலேயே தைத்துக் கொள்ளவேண்டியது. மேற்படி பாக்கெட்டுகளின் மேல்பாகம் கோட்டின் 2-வது பொத்தான் துவாரத்திற்கு நேராக இருக்கவேண்டும். கோயமுத்தூர் சென்ட்ரல் ஜெயில் சூப்ரிண்டெண்டெண்டிட மிருந்து விலையில்லாமல் விசில்பாக்கெட்டுகள் சப்ளை செய்யப்படும். மெடல் ரிப்பன்ஸுகள் (Medal ribbons) கோட்டின் மேல்பொத்தான்

கள் இரண்டிற்கும் மத்தியில் நேராகத் தரித்துக் கொள்ள லாம்.

4. டவுண் ஸ்டேஷனிலிருந்து தாலூக்கா ஸ்டேஷன் களுக்கு மாற்றிப் போகும் சிப்பந்திகள் அவர்களுடைய விசில் பாக்கெட்டுகளை அப்படியே வைத்துக் கொள்ளலாம். அவர்களுக்கு பதிலாக மாற்றி வருபவர்களுக்கு புதிதாக விசில் பாக்கெட்டுகள் சப்ளை செய்யப்படும்.

5. கோயமுத்தூர் சென்ட்ரல் ஜெயிலிலிருந்து சப்ளை செய்யப்படும் விசில் பாக்கெட்டுகளுக்கு "X" என்னும் எழுத்து அடையாளம் ஒரு பக்கத்தில் போடப்பட்டிருக்கும். தைக்கும்போது அந்த எழுத்து உள்பக்கமிருக்கும் படியாகத் தைக்கவேண்டும்.

6. கோட்டின் அடிபாகம் பெல்டின் கீழ் சற்றேறக் குறைய 13 அங்குல மிருக்கவேண்டும்.

ஷார்ட்ஸ் அல்லது கால் சராய்கள்.

7. ஷார்ட்ஸ்களின் அடிபாகம் தைக்கப்படாமல் ஜில்லாக்களுக்கு சப்ளை செய்யப்படும்.

8. ஒரு கான்ஸ்டேபில் நிமிர்ந்து நேராக நிற்கும் போது அவனுடைய ஷார்ட்ஸின் அடிபாகம் அவன் முழங் கால் சிப்பியின் உச்சிக்குச் சமமாயிருக்க வேண்டும்.

9. ஷார்ட்ஸுகளை ஒழுங்காய் தரித்துக் கொள்வதற்கு அதன்மேற் பாகத்தை இடுப்பின் அள்ளைப் பக்கமாக பெல்ட்டுக்குமேலே இழுத்து விட வேண்டியது. இப்படி செய்வதினால் ஷார்ட்ஸுகளின் உள்தையல் பக்கம் சுருங்காமலும் ஒரே அளவாயும் தொங்கும்.

கோட்டுகளையும் ஷார்ட்ஸ்களையும் ஓரம் மடிப்பதும் இஸ்திரி போடுவதும்.

10. கோட்டின் கைநுனி பாகம், கோட்டின் அடி பாகம் ஷார்ட்ஸின் அடிபாகம் இவைகளை அவரவர்கள் அளவிற்குத் தகுந்த படி ஜில்லாக்களிலேயே உள்பக்கம் மடித்துத் தைத்துக்கொள்ள வேண்டியது. இப்படித் தைப்பதற்கு காக்கிநூலைத்தவிர வேறு எந்த நூலும் உபயோகப் படுத்தக்கூடாது.

11. கோட்டு ஷார்ட்ஸ்களுடைய ஓரங்களை மடிப்பதற்கும், இஸ்திரி பண்ணுவதற்கும்அடியிற்கண்ட விதிகளை கவனிக்கவேண்டும்.

(1) ஷார்ட்ஸின் அடிபாகத்தின் மடிப்பின் அகலம் 1 அங்குலமும், கோட்டின் அடிபாகத்தின் அகலம் $\frac{3}{4}$ அங்குலமும், கைகளின் நுனி மடிப்பின் அகலம் $1\frac{1}{2}$ அங்குலமும் இருக்கும்படியாகத் தைக்கவேண்டும்.

(2) நன்றாய் தைக்கத் தெரிந்த தையல்காரர்களால் இவைகளைத் தைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(3) மடித்துத் தைத்த பிறகு மடிப்புகளை நன்றாய் இஸ்திரி செய்யவேண்டும்.

(4) ஷார்ட்ஸ்கள் சலவை செய்த பிறகு காலின் முன் பக்கம் மத்தியில் மடிப்பு வரும்படியாக மடித்து இஸ்திரி செய்யவேண்டும். பக்கங்களில் ஷை மடிப்பு வரும்படியாக மடிக்கக் கூடாது.

12. ஷார்ட்ஸ்களை மடிக்கும் விதம் அடியில் சொல்லியிருக்கிறது.

(1) ஷார்ட்ஸ்ஸின் இடுப்பின் இடது பக்கத்தின் வெளியில் ஜில்லா எழுத்துகளும், நம்பர்களும் இருக்க வேண்டும்.

(2) ஷார்ட்ஸ்களின் முன்பக்கத்து திறப்பிலிருந்து ஒவ்வொரு பக்கத்திலும் நாலு அங்குலம் தள்ளி மேல் கீழாக நேராய் மடிக்கவேண்டியது.

(3) ஷார்ட்ஸ்களின் பின் பக்கத்தை உள்ளே தள்ளி நீண்ட சதுரமாகச் செய்து மடிப்புகளை அழுத்தி இஸ்திரி செய்யவேண்டும்.

(4) இந்த நீண்ட சதுரத்தை ஆறு அங்குல அகலம் வரும்படியாக கீழேயிருந்து மேலே மடிக்க வேண்டியது. இந்தமடிப்பை மறுபடியும் அழுத்தக்கூடாது. இந்தமாதிரி செய்தால் ஷார்ட்ஸ்களின் மடிப்புகள் 9″ × 6″ அளவுக்குப் பதிலாக 11″ × 6″ அளவுக்கு வரும்.

13. போலீஸ் உடுப்புகளை அளவுப்படி தைப்பதற்கு உண்டாகும் சிலவை சர்க்காரில் கொடுப்பார்கள்.

* * * * *

14. போலீஸ் சிப்பந்திகளுக்கு இனமாகக் கொடுக்கப்படும் உடுப்புகளை அந்தந்த ஜில்லாக்களில் அவரவர் அளவுக்குத் தக்கபடி மாற்றி வெட்டித் தைத்துக் கொள்ள வேண்டும். உடுப்புகளை அளவுப்படி வெட்டித் தைப்பதற்கு ஏற்படும் கூலியை சர்க்காராலே கொடுக்கப்படும்.

* * * * *

இதற்குப் பிறகு ரிப்பேருக்காக ஏற்படும் சிலவை போலீஸ் சிப்பந்திகள் அவரவர்களுக்கு மாதாமாதம் கொடுக்கப்படும் யூனிபாரம் அலவன்ஸிலிருந்து (Uniform allowance) கொடுத்துக் கொள்ளவேண்டும்.

15. ரெக்ரூட் ஸ்கூல்களிலிருக்கும் ரெக்ரூட்ஸ்களுக்கு அவரவர்களுடைய போலீஸ் உடுப்புகளின் அளவை மாற்றவேண்டுமானால் அவ்விடமிருக்கும் தையற்காரன்

அளவு பிரகாரம் தைத்துக் கொடுப்பான். இதற்குப் பிரத்தி யேகமான கூலி கிடையாது.

16. ரெக்ரூட்ஸ்களுக்கு தலைப்பாகை கட்டுவதற்கு ஏற்படும் சிலவு சர்க்காரால் கொடுக்கப்படும்.

பட்டிகள்.

17. பட்டிகளுக்கு ஒத்தை நாடாதான் வைத்துத் தைத்திருக்கும். ஸென்ட்ரல் ரெக்ரூட் ஸ்கூல்களிலும் சாதாரணமாய் ஜில்லாக்களிலும், கான்ஸ்டேபில்களும் எட் கான்ஸ்டேபில்களும் அடியில் கண்ட மாதிரி பட்டி கட்ட வேண்டியது.

(1). பட்டியின் முக்கோணமுள்ள நுணியின் சமதி யான பாகம் வெளிப்பக்க மிருக்கும்படியாகப் பட்டியைச் சுருட்ட வேண்டும்.

(2). வலது கால் பட்டி காலின் இடது பக்கத்தி லிருந்து வலது பக்கமாகச் சுற்றப்பட வேண்டும். இடது காலுக்குச் சுற்றும்போது வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாகச் சுற்ற வேண்டியது. அதாவது ஒவ்வொரு காலுக்கும், பட்டியைக் காலின் உள்பக்கமிருந்து முன்னுக் கும், அங்கிருந்து பின்னுக்குமாக காலில் சுற்ற வேண்டும்.

(3). ஒவ்வொரு பட்டியும் சுற்றப்பட்ட பாகம் முன் பக்கம் வைத்து ஆரம்பிக்க வேண்டியது.

(4). நாலாவது சுற்று காலின் முன்பக்கத்தில் வரும் போது, முன்பக்கம் V என்கிற எழுத்து மாதிரி வரும்படி பட்டியை மடக்க வேண்டும்.

(5). பட்டியின் முக்கோண நுனியானது காலின் வெளிப் பக்கம் வரவேண்டியது. நுனியின் நடுத்தையல்

காலின் வெளிப்பக்கம் நடுவில் இருக்கவேண்டியது. பட்டியின் மேல்சுற்றின் மத்தியில் நாடாவை அதின் அகலமே தெரியும்படி மேலும் மேலும் சுற்றி துனியைக் காலின் வெளிப்பக்கத்தில் நாடா சுற்றுகளுக்கு அடியில் நுழைத்து, பிரிந்து போகாதபடி பலதடவை மேலும் கீழுமாக, நுழைத்துச் சுத்தமாக சொருக வேண்டியது.

(6). சில தடவைகள் பட்டிகளைக் கட்டின பிறகு அவைகள் காலின் உருவத்தை யடையும். அதற்குப் பிறகு அவைகளைக் கட்டுவது சுலபமாயிருக்கும். பட்டிக்குச் சொந்தக்காரன் ஒவ்வொரு பட்டியின் பேரில் "வலம்", "இடம்" என்று அடையாளம் செய்து கொண்டு அந்த அடையாளப்படி வலது காலுக்கு வலது பட்டியும் இடது காலுக்கு இடது பட்டியும் உபயோகப்படுத்த வேண்டியது.

(7). வழக்கமாய் கட்டி வருவதால் பட்டியை காலில் முதலில் எந்த இடத்தில் வைத்துக் கட்ட ஆரம்பிக்க வேண்டுமென்று நன்றாய் ஏற்படும்.

உடுப்புகளுக்கும் மூஸ்தீப்புகளுக்கும் அடையாளம் போடுவது.

18. உடுப்புகளுக்கும், செருப்புகளுக்கும் ஜில்லா ஸ்டோரில் அவைகளை வெளியிலனுப்புமுன் அடையாளம் போடப்படும்.

19. ஜில்லா எழுத்து, போலீஸ்காரனின் நம்பர், கொடுக்கப்பட்ட தேதி இவைகளைக்கோட்டின்இரண்டாவது மூன்றாவது பொத்தான் துவாரங்களுக்கு மத்தியில், உள் பக்கம் குறிக்கவேண்டியது. ஷார்ட்ஸின் இடுப்புப்பட்டையின்மேல் முன்பக்கத்தில் மேற் சொன்னவைகளை எல்லாம் குறிக்க வேண்டியது.

20. ஆர்மெட் (armed) ரிசர்வுக்கும் ஸ்பெஷல் போலீ ஸுக்கும் கொடுக்கப்பட்ட பிராக்குகளுக்கும், பெல்டுகளுக் கும் ஜில்லா முதல் எழுத்தும் சிப்பந்தியின் நம்பரும், கொடுக்கப்பட்ட தேதியும் மார்க்கு செய்யவேண்டும். டவுன், தாலூக்கா போலீஸுகளுக்கு கொடுக்கப்பட்ட பிராக்கு களுக்கு, ஜில்லா முதலெழுத்தும், கொடுக்கப்பட்ட தேதி யும், ஸ்காப் பேர்ட்டு (Scabbard) களுக்குக் கொடுப்பது போல், வரிசை நம்பரும் கொடுக்கப்படும். அவைகள் ஸ்டே ஷன் சாமான்களாக பாவிக்கப்படும்.

21. எல்லா பூட்சு (Boots) களிலும் மேல் பாகத்தில் சிப்பந்தியினுடைய நம்பரும் கொடுக்கப்பட்ட தேதியும், லக்கத்தால் முத்திரை போடப்படும்.

கம்பளிகட்டும் தோல்வார்களும், கம்பளி மடக்கும் விதமும்.

22. கம்பளி கொடுத்திருக்கும் ஒவ்வொருவருக்கும், கம்பளி கட்டும் தோல் வாரும் கொடுத்திருக்கிறது. அடியில் சொல்லியிருக்கும் பிரகாரம் கம்பளிகளை மடித்து, வலது தோள்மேல் போட்டுக் கொள்ள வேண்டியது.

(1) கம்பளியையோ, ஜமக்காளத்தையோ, நம்பர் மேல்பக்கம் இருக்கும்படி நீளத்தில், பூமியில் விரிக்க வேண் டியது.

(2) இரண்டு நுனிகளையும் ஒரே அளவாக, உள்பக்கம் மடிக்கவேண்டியது. அப்படிமடித்த பிறகு அதன் நீளம் ஐந்தடி யிருக்கவேண்டியது.

(3) பின்பு அகலத்தையும் சரிபாதியாக மடிக்கவேண் டியது.

(4) இரண்டு ஓரமும் சேர்ந்திருக்கும் பக்கத்திலிருந்து கெட்டியாய் கம்பளியை உருண்டையாய் சுற்ற வேண்டியது. அது இப்போது உருண்டையாயும் ஐந்தடிநீளம் உள்ளதாயு மிருக்கும்.

(5) இரண்டு நுனிகளேயும், அவைகள் சேரும் வரை தூக்கி, முனேயிலிருந்து மூன்றங்குல தூரத்தில், தோல் வாரினுல் கட்டவேண்டும். வெளியில் மடிப்புகள் கோணலாய் தொங்காதபடி, ஜாக்கிரதையாய், நுனி சுருட்டப்பட்டிருக்க வேண்டும்.

(6) வலது தோளின்மேல் போட்டு நுனிகள் இடது கம்கட்டின் கீழ் இருக்கும்படியாகவும், கம்பளி கட்டும் வாரின் நுனி பின்பக்கமாக, இருக்கும்படியாகவும் அணிந்து கொள்ள வேண்டியது.

பூட்ஸ்களே ரிப்பேர் செய்வது.

23. பூட்சுகளுக்கு ரிப்பேர் சர்க்கார் செலவில், செய்ய வேண்டியது. அஜாக்கிரதையினுலாவது அசட்டையினுலாவது கெடுதல் ஏற்பட்டிருந்தால் ஒழிய, மற்ற சந்தர்ப்பங்களில் சிப்பந்திகள் தங்கள் செலவில் ரிப்பேர் செய்ய வேண்டிய தில்லே. பூட்சுகள் எவ்வளவு காலம் போடக் கூடியதாயிருக்க வேண்டுமென்று ஏற்பட்ட காலம் முடிந்திருந்தாலும், முடியாவிட்டாலும், மேற் சொன்னபடி சர்க்கார் சிலவிலே ரிப்பேர் செய்ய வேண்டும். பூட்சுகள் உபயோகிக்க வேண்டிய காலம், முடிந்து விட்டதனுலேயே உபயோக மில்லே என்று தள்ளி விடக்கூடாது. ஆனுல் ரிப்பேர் செய்ய லாயக்கில்லாத ஸ்திதியிலிருந்தால், அவைகளே உபயோக மில்லாததாகத் தள்ளி விடலாம்.

பூட்சுகளுக்குப் பளபளப்பு உண்டாக்குவது.

24. 1928-ம் வருஷம், ஏப்ரல் மாதம் முதற்கொண்டு போலீஸ் சிப்பந்திகளுக்கு சப்ளை செய்யப்படும் பூட்சுகள் பசுமாட்டுத்தோல்களால் செய்யப்படுகின்றன. அவைகள் மிருதுவாயிருக்கும் பொருட்டு அவைகளைத் தயார் செய்யும்போது எண்ணெயில் தோய்க்கப்படுகின்றன. ஆகையால் அவைகளை பளபளப்பாக்க பிரயத்தனம் செய்வது வீண்பிரயாசை. பூட்சுகளுக்கு எண்ணெய் தடவ வேண்டுமென்பது இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களுடைய அபிப்பிராயம்.

ரோட்டில் போக்குவரத்தை ஒழுங்கு படுத்துதல்.

25. மனிதர்கள் வண்டிகள் முதலியவைகளின் போக்கு வரவை ரோட்டில் ஒழுங்கு படுத்தும் போலீஸ் சிப்பந்திகளுக்கு, தொப்பிகள் சப்ளை செய்யப்பட்டிருக்கின்றன. G. S. நம்பர்களை விசில் பாக்கெட்டுகள் தைக்குமிடத்திற்கு ஒரு அங்குல உயரத்திற்கு மேலாக, ஒரு சிகப்புப் பட்டையில் வைத்து, இடது மார்பில் தரித்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய கோட்டிலிருந்து தலைப்பாகைக்கு எழுத்துகளை, அடிக்கடி மாற்ற வேண்டாமலிருப்பதற்காக, இந்த டியூட்டியிலிருக்கும் ஒவ்வொரு கான்ஸ்டேபிளுக்கும், ஒன்று மார்பில்அணிந்து கொள்வதற்கும், மற்றொன்று தலைப்பாகையில் வைத்துக் கொள்வதற்குமாக, இரண்டு ஜோடி நம்பர்கள் கொடுக்கப்படும்.

(4–5–29 தேதியுள்ள I-பாகம் போலீஸ் கெஜட்டில் மேற் சொன்ன விதிகள் பிரசுரம் செய்திருக்கிறது.)

ஷம்லாவிலும் கூர்கா தொப்பியிலும் ஜில்லா பெயரும் நம்பரும் வைத்துக் கொள்ள வேண்டிய விதம்.

1. ஜில்லா பெயரையும் நம்பரையும்—

(*a*) ஸ்பெஷல் போர்ஸ் (**Special force**) அல்லது ஆர்மட் ரிசர்வ் (**Armed Reserve**) வை சேராத கான்ஸ்டேபில்கள் தங்கள் ஷம்லாவிலும்,

(*b*) வெப் எக்விப்மெண்டு (**Web equipment**) சப்ளை செய்யப்படாத ஆர்மட் ரிசர்விலுள்ள ஏட்கான்ஸ்டேபில்களும், கான்ஸ்டேபில்களும் தங்கள் கூர்க்கா தொப்பியின் பேரிலும் (**Gurkha hats-**)

(*c*) வெப்எக்விப்மெண்டு சப்ளை செய்யப்படுகிற கஞ்சம், ஜெயபூர், விசாகபட்டணம், காகனடா, ராஜமகேந்திரம் ஆர்மட் ரிசர்வ்களில் தோள் பட்டைகளிலும் (**Shoulder-straps**) தரிக்கவேண்டியது.

2. இனிமேல், ஜில்லாவின் பெயரையும், ஜில்லாவின் நம்பரையும் ஒழுங்காகவும், சமதூரத்திலும் தரிப்பதற்காக கான்ஸ்டேபில் களுக்கும், ஹெட் கான்ஸ்டேபில் களுக்கும் ஒரு அல்யூமினியம்(**Aluminium**) தகடு அடியிற்கண்ட அளவில் கொடுக்கப்படும். மேலே (**C**) குறிப்பில் சொல்லியிருக்கும் ரிசர்வுகாரர்களுக்கும் இரண்டு தகடுகள் கொடுக்கப்படும். தகட்டின் அளவு:—மூன்று அல்லது அதற்குக் கீழ்பட்ட லெக்கம் உள்ள நம்பருக்கு $2\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$ நான்கு லக்கமுள்ள நம்பருக்கு $2\frac{1}{2}'' \times 2\frac{1}{4}''$

3. வளையம் போடக்கூடிய நம்பர்களின் பின்புறம் நீட்டிக்கொண்டிருக்கும் பொத்தல்களடங்கிய காதுகளை துணி தகடு இவைகளின் வழியாய் துளைத்துப் பின்பக்கத்

தில் கம்பியினாலோ, வளையத்தினாலோ சேர்த்து அவைகளை கழலாமலிருக்கச் செய்ய வேண்டியது. நம்பர்கள் பார்வைக்கு ஒழுங்கா யிருப்பதற்காகத் தகட்டில் சரியான இடத்தில் துளை போட வேண்டும். தகட்டில் துளை சரியான இடத்தில் விழாவிட்டால் கெட்டுப் போன தகட்டிற்கு பதில் வேறே தகடு கொடுக்கப்படும்.

(5-4-30 தேதியுள்ள 1-பாகம் போலீஸ் கெஜட்டில் பிரசுரம் செய்திருக்கிறது.)

அனுபந்தம் B.

போலீஸ் கெஜட்டு முதல்பாகம் 10–3–28 தேதி யுள்ளதில் பிரசுரிக்கப்பட்ட டிரில் மானுயல் 142.வது செக்ஷன் :—

142. கலகத்தையாவது அமரிக்கைக்கு பங்கத்தை யாவது விளைவிக்கும் ஜனக்கூட்டத்தை, போலீசார் சுடக் கூடிய சந்தர்பமும், அப்பொழுது அனுசரிக்கும் விதிகளும்.

கலகத்தை அடக்கும் போதாவது, அல்லது சட்டத்தை, கட்டாயமாய் அமுலுக்குக்கொண்டுவரும் போதாவது, அக்கிரமக்கூட்டத்தாரை போலீசார் சுடவேண்டி நேரிட்டால், அவர்கள் அப்பொழுது அனுசரிக்கவேண்டிய விதிகளை அடியில் வருமாறு கவர்மெண்டார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தரும், இந்த விதிகளை வெகுநன்றாய் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

(1) ஒரு பெரிய அபாயகரமான அக்கிரமகூட்டத்தாருக்கு அதிசமீபத்தில், துப்பாக்கி தரித்த ஒரு போலீஸ் படையை கொண்டுபோவதினால், அந்த கூட்டத்தார் போலீஸ் படையை மிஞ்சி அவர்களை முறியடிக்கவும், அல்லது போலீசார்கள் கூட்டத்தாரில் வெகுபேரை சுடவும் நேரிடுமாதலால், அம்மாதிரி சமீபத்தில் போலீஸ்படையை கொண்டு போகாமலிருப்பதற்கு வேண்டிய முன் யோசனைகளைச் செய்யவேண்டியது. சுடவேண்டிய அவசியம் ஏற்பட்டால்,

கலகக்காரர்கள் தங்கள் பேரில் விழுந்து தாக்கமுடியாதவும் சுடுவதை சந்தர்பத்திற்குத் தகுந்தபடி, அடக்கக்கூடுமானது மான தூரத்திலிருந்து சுடவேண்டும்.

2. ஓர் அக்கிரமக் கூட்டத்தை கலைப்பதற்காக, ஒரு போலீஸ்பார்ட்டியை நியமித்தால் அதை முதலில் நம்பர் சொல்லச் சொல்லவேண்டியது. சாவகாசமுமிருந்து போலீஸ் நபர்கள் வேண்டிய அளவு மிருந்தால், சுடுவதை அவ சியம்போல் ஜாஸ்தி கம்மி பண்ணும்பொருட்டு, போலீஸ் பார்ட்டியை பத்து நபர்களுக்கு மேற்படாத செக்ஷன்களாக வகுத்து, அப்படிப்பட்ட ஒவ்வொரு செக்ஷனுக்கும் ஒவ் வொரு தலைவனை நியமிக்கவேண்டும். கூடிய சீக்கிரத்தில் பயனெட்டுகளை துப்பாக்கியில் 'பிக்ஸ்' '(Fix)' செய்து கொள்ளவேண்டும். இரண்டு எதிர் திக்குகளைப் பார்த்து நிற்கவேண்டிய அவசியம் நேரிட்டால், போலீஸ்காரர்களை ஒரே லயனில் நிருத்தி வேறு வேறு திக்குகளை நோக்கும்படி செய்யலாகாது. வேறு வேறு திக்குகளை நோக்கி இரண்டு அணிகளாக வகுத்து, அவைகளின் நடுவில் தலைமை உத்தி யோகஸ்தர்கள் தாராளமாய்ச் சென்று சுடவேண்டிய உத் திரவுகளை சமயத்திற்குத் தகுந்தவாரு கொடுப்பதற்கு அநு கூலமாக, வேண்டிய இடம் விடவேண்டும்.

(3) போலீஸ் பார்ட்டிக்குக் கொடுக்கவேண்டிய எல் லா உத்திரவுகளையும், பார்ட்டியின் தலைமை உத்தியோகஸ் தனே கொடுக்கவேண்டும். எந்தக்காரணத்தினாலும் பார்டி யிலுள்ள எவரும் தலைமை உத்தியோகஸ்தன் உத்திரவில் லாமல் யாரையும் சுடக்கூடாது. தலைமை உத்தியோகஸ் தன் எவ்வளவு அளவுக்கு சுடச் சொல்லவேண்டியது அவ சிய மென்பதை, இரக்கத்துடன் நிதானித்து தீர்மானிக்க வேண்டியது.

(4) சுடவேண்டியது அவசியமென்று போலீஸ் தலைமை உத்தியோகஸ்தனுக்குத் தோன்றியவுடன், துப்பாக்கியை 'பக் ஷாட்' (buck-shot) அல்லது குண்டு (ball) தோட்டாவால், லோட் (load) செய்யச் சொல்லவேண்டியது. அல்லது சந்தர்பத்திற்கு தகுந்தபடி, சில பைல் (Files) களை பக்ஷாட்டாலும், சில பைல்களை குண்டு தோட்டாவாலும் லோட்செய்யச் சொல்லி, துப்பாக்கிகளை லோடிங் பொசிஷனுக்குக் கொண்டுவரச் சொல்லவேண்டியது. இப்படிச் செய்வதால், கூட்டத்தைக் கலைந்து போகும்படி எச்சரிக்கை செய்து கொண்டிருக்கும் பொழுது, கும்பல் போலீஸாரின் மேல் பாயாமல் தடுக்க சாதகமா யிருக்கும்.

குறிப்பு:—கலகத்தை அடக்க நியமிக்கப்பட்ட ஒரு போலீஸ் பார்ட்டிக்கு காலிதோட்டா (blank cartridge) ஒரு பொழுதும் கொடுக்கக்கூடாது.

(5) கலகத்தை அடக்குவது, அல்லது சட்டத்தை கட்டாயமாய் நடைபெறச் செய்வது முதலிய வேலைகளைச் செய்யும் போலீஸ்தலைமை உத்தியோகஸ்தன் கூட்டம்கூடியிருக்கும் ஜனங்களுக்கு யாதொரு சந்தேகமு மில்லாது நீங்கும்பொருட்டு, துப்பாக்கியால் சுட ஆரம்பிக்குமுன்பே, அப்படி சுடஉத்திரவு கொடுத்தால் அதனால் நிச்சயமாய் சேதமுண்டாகும் என்று கூட்டத்தார் நன்றாய் அறியும்படியாய் அவர்களுக்கு விவரித்துச் சொல்லவேண்டியது.

(6) எச்சரித்த பிறகும் கும்பல் கலையமாட்டோமென்றால் சுட உத்திரவு கொடுக்க வேண்டியது. சிலகுண்டுகள் சுட்டால் போதுமென்று தலைமை உத்தியோகஸ்தனுக்குத் தோன்றினால் குறிப்பிட்ட இரண்டொரு பயிலை மட்டும் சுடும்படி உத்திரவுகொடுக்கலாம். ஆனால் அப்படி சுடுவது போதாதென்று தோன்றும் பட்சத்தில், ஏற்கனவே சொன்ன

படி பிரித்துவைத்திருக்கும் ஒரு செக்ஷன் (Section) முழுமையும் சுடச் சொல்லி மற்ற செக்ஷன்களது குண்டை வேண்டுமானால் பிறகு உபயோகப் படுத்திக்கொள்வதற்கு மீதியாக வைத்துக் கொள்ளலாம். தலைமை உத்தியோகஸ்தனுடைய பிரத்தியேகமான **உத்திரவின்** பேரில்தான் ஒவ்வொரு செக்ஷனையும் சுடச்சொல்லவேண்டும்.

(7) எந்த சந்தர்பத்திலும், எச்சரிக்கைக்காக குண்டை ஆகாயத்திலாவது அல்லது கூட்டத்தாரின் தலைகளுக்கு மேலாகவாவது சுடச்சொல்லக் கூடாது. கூட்டத்திலிருந்து பிரிந்திருக்கும் ஜனங்களை சுடாமலிருப்பதற்கு வெகு ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும். எத்தருணத்தில் சுடுவது அவசியமில்லாமல் போகிறதோ அதே நொடியில் சுடுவதை நிருத்தவேண்டும்.

(8) சுடஉத்திரவு கொடுக்கப் பட்ட பயிலோ அல்லது செக்ஷனோ, அப்படி சுட்டவுடன், அதற்காக பிரத்தியேகமான உத்திரவில்லாமலே "ஸீஸ்பயர்" (Cease Fire) என்ற உத்திரவு கொடுக்கும் வரை, தாங்களே காலியான துப்பாக்கியை மறுபடியும் "லோட்" (Load) செய்து கொள்ளவேண்டியது.

173914

Thompson & Co., 33, Broadway, Madras.